

# கலைமகள்

## மாதப் பத்திரிகை

பிரமாதி ௵ பங்குனி ௴

*

௯௯

### முக்கிய விஷயங்கள்

நாயகர் மீட்சி
(டாக்டர் உ. வே. சாமிநாதையர்)

கூட்டுறவுப் பாங்கிகளின் தோற்றம்
(டி. வ. இராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி.)

கண்ணில்லாக் காதல்
(து. ராமமூர்த்தி)

கறுப்பல்ல கருப்பு
(வே. சேஷன்)

ருஷ சந்தா ரூ. 4—0—0 * தனிப்பிரதி அணா ஆறு

சமூக பந்தங்களுக்கிடையே அவர்கள் சந்திக்கிறார்கள்

அவளோ — சீரழிந்த தனவந்தனின் துர்ப்பாக்கியமுள்ள மனைவி

அவனோ — வாழ்க்கையில் ஒரு புதிய ஸித்தாந்தம் கொண்ட ஏழை

இவர்கள் சந்திப்பதால் நிகழும் உணர்ச்சி மிக்க கட்டங்களை

**நியூ தியேட்டர்ஸாரின்**

வாழ்க்கை அமைப்பைப்
பற்றிய மகத்தான

# ஜிந்தகி (வாழ்க்கை)

எனும் படத்தில் கண்டு ஆனந்தியுங்கள்

—: நடிகர்கள் :—

இந்திய வெள்ளித்திரையில் பெரும்புகழ் பெற்ற இணையற்ற
நடிக ஜோடிகள்



சைகல்



ஜமுனா

பஹாரி, நீமோ முதலியோரும் நடிக்கின்றனர்

டைரக்டர் :

அழியாப் புகழ்பெற்ற "தேவதாஸ்" படத்தைச் சிருஷ்டித்த

**இளவரசர் பி. ஸி. பருவா.**

இப்படம் அதிசீக்கிரம் சென்னை ஸ்டார் டாக்கீஸில் காட்டப்படும்.

Distributors: *Calcutta Film Exchange, 133, Broadwoy, Madras.*




"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
கிராமபோன்கள்.

இந்த மாடல்
(பாலிஷ்ட்
காபிநெட்)
நெ. 176-ன்
விலை
ரூ. 150.

கிராமபோன் ரிகார்டுகளி லமைந்த சங்கீதத்தின் ஜீவநாதத்தை ஸகஜ மாதுர்யத்துடன் பிரதிபலிக்கத்தக்க "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கிராமபோனிலேயே உங்கள் ரிகார்டுகளையும் பாடுவித்துக் கேட்டானந்தியுங்கள்.

எல்லா "எச். எம். வி."
வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

"HIS MASTER'S VOICE"

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

"உலக போகங்கள்மீது எனக்கு இச்சை இல்லை.
அரச குமாரன் கணவனாக வரினும் பெருமையில்லை.
காவிரியின் கணக்கற்ற பொன்னுக்கு
உரியவளாவதினும் ஆசையில்லை"

எனும் பொன் மொழிகளை

அஸந்தாஸின்

# "மணிமேகலை"

என்ற ஒப்பற்ற படத்தில்

**ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள்**

திறமைமிக்க பல நடிக நட்சத்திரங்களோடு
அனுபவத்தில் நடித்துக் காட்டுகிறார்.

இவ்வரிய படம் வெகு விரைவினில் பெரும் புகழைப் பெற,
"ஸத்தியம்—அஹிம்ஸையின்" தத்துவங்களை அல்லல்படும்
உலகத்தினரின் அனுகூலத்திற்காக எடுத்துரைக்க
வெள்ளித் திரைக்கு வருகிறது.

*

உள்ளத்தை உருக்கும் பாடல்கள்,
பிரம்மாண்டமான காட்சி
ஜோடனைகள், ருசிமிக்க சம்பாஷணைகள்,
உணர்ச்சி தரும் கதை.

---

எப். எம். எஸ்., பர்மா, ஸிலோன் முதலிய பிரதேசங்களுக்குப்
புக்கிங்குகளுக்கும், பூரண உரிமைகளுக்கும் எழுதுக.

**மெஸர்ஸ் டி. கே. பிரொடக்ஷன்ஸ்**
(புரொப்ரைட்டர்: **கே. தஹில்ராம்**)
24-25, நாவலிங்கபுரம் தெரு, மவுண்ட்ரோடு, மதராஸ்.

தந்தி: FILMATIC] [போன்: 8155

# கலைமகள் அருள்பெற்ற

# கவிஞர் பெருமான்

**களிப்பிக்கக் கடிதில் வருகிறார்!**




உங்கள் அபிமானம் பெற்ற

நட்சத்திரங்களனைத்தும் ஒருங்கே ஜொலிக்கின்றன.

— பூரண உரிமை —

## மதுரை ஸ்ரீ தண்டபாணி பிலிம்ஸ் லிமிடெட்,

தந்தி: காளமேகம்] லாயிட்ஸ் ரோடு, கோபாலபுரம், சென்னை [போன்: 8454

'காளமேகம்' பாடல்களை ஓடியனில் கேளுங்கள்

ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் வங்காளியில் எழுதிய

# குமுதினி

ஸ்ரீமதி ரங்கநாயகி

மொழிபெயர்த்தது

ரூ. 1—8—0

சுமார் 400 பக்கங்கள்—நல்ல கிளேஸ் காகிதம்

கலைமகள் சந்தாதார்க்கு மாத்திரம், ரூ. 1—2—0

(தபால், வி. பி. செலவு தனி.)

---

# மாயா விநோதினி

மிகவும் சிறந்த நாவல்

ரவீந்திரநாத் டாகுர் எழுதியது

ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது

விலை ரூ. 1-8-0

---

## ரிஷப விஜயம்

ஓர் அரிய இனிய நாடகம்

ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது

விலை ரூ. 0-12-0

தபாற் கூலி வேறு.

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர்

இன்ஷ்யூர்

செய்யுங்கள்

# ஜூபிடர் ஜெனரல்

## இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களைக் கவனிக்கும்

| | |
|---|---|
| ஆயுள் | மோட்டார்கார் |
| நெருப்பு | பஸ்கள், டாக்ஸிகள் |
| கப்பல் | தொழிலாளர் நஷ்ட ஈடு |

சமுத்திரம்

சாதனம் ரெயில்வே சாதனம்

தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

வாக்களிக்கப்பட்ட மூலதனம்

**ஒன்றரைக் கோடி ரூபாய்**

எங்கும் ஏஜெண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்: 99, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.

பிராஞ்சு மானேஜர்: N. வேங்கடராம அய்யர்.

# ரூ. 1-8-0க்கு

**3** கைக்கடிகாரங்களும் 1295 விநோத ஸாமான்களும் அளிக்கப்படும்



எங்கள் ஆட்டோ ரோஜா ஸெண்ட் 10 புட்டி ஒரேசமயம் ரூ. 1-8-0க்கு வாங்குபவர்களுக்குப் பின்வரும் சாமான் இனுமாக அளிக்கப்படும். (1) தங்கமுலாம் பூசிய பட்டுப்பட்டையுடன்கூடிய பொம்மைக் கைக் கடிகாரம், (2) ரெயில்வே மணிகாட்டும் பொம்மை ஜேபி கடிகாரம், (3) ஸேப்டி ரேஸர், (4) க்ஷவரஸோப்பு, (5) க்ஷவரப்ரஷ், (6) சிறுகண்ணாடி, (7) முகப்பவுடர் பொட்டணம், (8) சீப்பு, (9) திருகுடன்கூடிய பென்ஸில், (10) சிகரெட்பெட்டி, (11) சிகரெட் பற்றவைக்கும் கருவி, (12) கைக்குட்டை, (13) மோதிரம், (14) கத்திரி, (15) 555 அடி தூரம் நன்றாக வெளிச்சம் வீசும் டார்ச்லைட், அல்லது 5 வருஷ உத்தரவாதமுடையதும் கெட்டியான யந்திரவேலைப்பாடுடையதுமான ஜெர்மன் B டைம்பீஸ்.

தபால், பாக்கிங் செலவு தனியே அணு 12.

The French Watch Co., Post Box No. 12216. Calcutta, (K.M.)


---


பாரத்வாஜி முகவைக்கண்ண முருகனார் இயற்றியவை

## ஸ்ரீ ரமண சந்நிதி முறை

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ரமணபகவான் விஷயமாக இயற்றப்பெற்றது. திருவாசகத்தைப்போன்ற அமைப்பையும் சுவைகளையும் உடையது. ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர், ஸ்ரீ ராவ்ஸாஹேப் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள், ஸ்ரீ சோமசுந்தர பாரதியார், ஸ்ரீ ராவ் ஸாஹேப் மு. இராகவையங்கார் முதலிய பேரறிஞர்களாற் பலபடப் பாராட்டப்பெற்ற சிறந்த நூல்.

இரண்டாம் பதிப்பு விலை ரூ. 2—8—0

| | |
|---|---|
| பரமார்த்த தீபம் என்னும் **குருவாசகக் கோவை** விலை ரூ. 1. | **ஸ்ரீ ரமண தேவ மாலை** விலை அணு 4. |

கலைமகள் சந்தாதாரர்க்கு 25 % கமிஷன் அளிக்கப்படும்.

இம் மூன்றும் ஒருங்கே வாங்குபவர்க்கு ரூ. 3—0—0-க்கு அளிக்கப்படும். தபாற் கூலி வேறு.

: : மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை : :




Retail Branch 285, China Bazaar

## 23 வருஷமாக

சென்னையில் பிரபலமானவர்.
எதிர்கால பல நிபுணர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி வருஷப்பலன் ரூ. 3. எதிர்காலக்கேள்வி 6-க்கு ரூ. 1. பொதுப்பலன் ரூ. 10. ஆயுள் வரை புக்திவாரிபலன் எழுத ரூ. 25 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை).

ஜோதிஷரத்னம்
பண்டிட் M. R. K. மூர்த்தி.
38, தேவராஜ முதலித் தெரு,
பி. டி. மதராஸ்.
கிளை ஆபீஸ்: 1, ஆடம் தெரு,
மயிலாப்பூர்.

---

## கலைமகள் சித்திரப் படங்கள்

### ஆரம்பப் பாடசாலைகளுக்கு இன்றியமையாதவை

பத்துப் படங்கள் தயாராக இருக்கின்றன.
ஒவ்வொன்றும் அளவு 30×24 அங்குலம்.

1. காக்கா காக்கா எங்கே போனாய்? (கதை, சம்பாஷணை.)
2. பானையின் கதை.
3. ஈயின் கதை.
4. வாகனங்கள் (தரை மார்க்கம்.)
5. வாகனங்கள் (ஜல மார்க்கம், ஆகாய மார்க்கம்.)
6. அரிசியின் கதை.
7. கதை கதையாம்.
8. தபால் கார்டின் கதை.
9. என்ன காக்கா?
10. வாலறுந்த குரங்கு.

இவை கதை சொல்லுதல், படங்களை ஒட்டின சம்பாஷணை செய்தல், பொது அறிவு, வாசிப்பு இவைகளுக்கு மிகவும் பிரயோஜனமாக உள்ளன.

படம் ஒன்று 9 பை; ஒரு செட் 0-6-0; தபாற் செலவு 0-3-0

---

மானேஜர், கலைமகள் ஆபீஸ், மயிலாப்பூர்.

# கலைமகள்

தொகுதி கஎ] பிரமாதி ௵ பங்குனி ௴ [பகுதி கூசூ
மார்ச்சு, 1940

## பொருளடக்கம்

1. நாயகர் மீட்சி—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... 267
2. கூட்டுறவு-பாங்கிகளின் தோற்றம் (படத்துடன்)—டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி. ... 281
3. தமிழ் வசனத்துக்கு விஷயம்—கி. வா. ஜகந்நாதன் ... 285
4. நிர்மலா (படத்துடன்)—ஸ்ரீ ப்ரேம்சந்த் (கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்ப்பு) ... 291
5. திரவங்களின் சிறப்பியல்பு (படங்களுடன்)—ஆர்.கே. விசுவநாதன், எம்.ஏ. ... 312
6. கண்ணில்லாக் காதல்—து. ராமமூர்த்தி ... 318
7. அபலை—வி. ஆர். சரோஜா ... 326
8. கறுப்பல்ல கரும்பு—வே. சேஷன் ... 331
9. குழந்தை சக்திஸ்வரூபம்—எஸ். ஜகந்நாதன் ... 341
10. அவர் எங்கே இருப்பார்?—எஸ். அம்புஜம்மாள் ... 348
11. அதிசயக் கணக்கு (படத்துடன்)—'வாசகன்' ... 357
12. குறிப்பும் திரட்டும் ... 362

முகப்புப் படம்

ஸ்ரீ ப்ரேம்சந்த்

விஸ்வா & கோ
ஆர்டிஸ்ட்ஸ், பிளாக் அண்ட் ரப்பர்
ஸ்டாம்பு மேக்கர்ஸ்
50, வாலாஜா ரோட்,
மவுண்ட் ரோட், மதருஸ்.



ஸ்ரீ ப்ரேம்சந்த்



## : நாயகர் மீட்சி :

* மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் *

திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள சங்கர நயினார் கோயிலென்னும் ஸ்தலம் மிகவும் புகழ்பெற்றது. சங்கரன் கோயிலென்றும் அதன்பெயர் வழங்கும். சிவபெருமானும் திருமாலும் ஒரு திருவுருவமாகக் கலந்தமைந்த சங்கரநாராயணமூர்த்தி அங்கே எழுந்தருளியிருக்கிறார். அந்த ஸ்தலத்தில் பலவகையான நோயுள்ளவர்கள் வழிபட்டுத் தங்கள் தங்கள் நோய் தீரப் பெறுவர். ஸ்தல விருக்ஷம் புன்னையாதலின் அந்த ஸ்தலத்திற்குப் புன்னைவனமென்பது ஒரு பெயர். இறைவன் புற்றிலிருந்து எழுந்ததாகப் புராணம் கூறும். அங்கே நாகசுனை யென்னும் தீர்த்தம் ஒன்று உண்டு. நித்திய பூஜைகளும் நைமித்திகங்களும் அந்த ஸ்தலத்தில் விசேஷமாக நடைபெறும்.

சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்கு முன்பு ஒருநாள் அங்கிருந்த உத்ஸவமூர்த்தி திடீரென்று காணப்படவில்லை. பல நூற்றாண்டுகளாக அந்த ஸ்தலத்தில் எழுந்தருளியிருந்த மூர்த்தி காணவில்லையென்ற இந்தச் செய்தி யாவருக்கும் பெருங்கலக்கத்தை உண்டாக்கியது. திருநெல்வேலிச் சீமையிலுள்ளார் மிக்க வருத்தமுற்றனர். எங்கும் 'சங்கரன் கோயில் நாயகரைக் காணவில்லை' என்பதே பேச்சாக இருந்தது.

அக்காலத்தில் நாயக்க அரசர்களுடைய பிரதிநிதியாகத் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்தவர் ஆறை

அழகப்ப முதலியாரென்பவர். அவர் நல்ல அறிவாளி. தம்முடைய ஆட்சிக்கு உட்பட்ட இடத்தில் இந்த நிகழ்ச்சி நேர்ந்ததை அறிந்து அவர் ஆத்திரங்கொண்டார். திருநெல்வேலிச் சீமையின் பெருமைக்கும், பல நாடுகளிலிருந்து தங்கள் தங்கள் நோய்தீரும் பொருட்டுப் பக்தர்கள் வருவதற்கும் காரணமாகிய அந்தத் திவ்ய ஸ்தலத்தில் இத்தகைய கொடுமை நேர்ந்தது தம்முடைய அதிகாரத்திற்கு ஒரு பெரிய இழுக்கு என்று எண்ணினர். சிவபக்தராதலின் அவர் மனம் கசிந்து உருகியது. "நாயகரை மீண்டும் வருவித்துப் பழையபடியே பிரதிஷ்டிக்கும் வரையில் நான் அன்னம் உண்ணேன்; என் உயிர் போயினும் குற்றம் இல்லை. அவன் அருள் அதுவானல் அதை நான் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்வேன். இந்த க்ஷண முதல் இரவுபகலாக இந்த முயற்சியிலேதான் ஈடுபட்டிருப்பேன்'' என்று சங்கற்பம் செய்துகொண்டார். இந்தக் கடுமையான சபதத்தைக் கேட்டோர் அஞ்சினர். அப்பால் சில அன்பர்கள், "உங்கள் சங்கற்பத்தைக் கேட்டு அஞ்சுகிறோம். தவம் செய்வோருக்கு அது தகுதியே யல்லாமல் தங்களைப்போல ராஜ்ய நிர்வாகம் செய்பவர்களுக்குத் தக்கதன்று. அன்றியும் இந்த முயற்சியில் ஈடுபடுவதற்கு உடம்பில் பலம் வேண்டாமா? சிவபெருமான் இதை ஒரு சோதனையாக உண்டாக்கி யிருக்கலாமேயன்றி வேறன்று. தங்கள் விரதத்தின் கடுமையைத் தளர்த்த வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டனர். அவர், "நம் நாட்டுக்கு உயிர் நிலை அந்த ஸ்தலம். அங்கே இத்தகைய களவு நேராமற் பாதுகாக்கக் கடமைப்பட்டவன் நான். அதில் நான் தவறினேன். ஆதலால் இந்த விரதத்தால் ஏதேனும் தீங்கு நேர்ந்தால் அதை நான் அனுபவிக்க வேண்டியவனே'' என்றார். பின்னும் அன்பர்கள் வற்புறுத்தவே அழகப்ப முதலியார் சுத்த உபவாஸத்தைக் கைவிட்டுப் பாற்கஞ்சி மாத்திரம் உட்கொள்வதாகக் கூறினர்.

அவருக்கு இரவில் தூக்கம் வரவில்லை; எப்பொழுதும் இதே கவலையாக இருந்தார். தம்முடைய ஆட்சிக்குட்பட்ட ஸம்ஸ்தானத்து ஸ்தானதிபதிகளை யெல்லாம் வரு

வித்து, 'என்ன செய்யலாம்?' என்று யோசித்தனர். ஒரு வருக்கும் இன்னது செய்வதென்று விளங்கவில்லை.

சங்கரநயினர் கோயில் அர்ச்சகருள் ஒருவராகிய சண்பகக்கண் நம்பியென்பவரை நாயகர் மறைந்த நாள் முதல் காணவில்லையென்று ஒரு செய்தி வந்தது. அந்த நம்பியே நாயகரைக் கொண்டு சென்றிருக்க வேண்டுமென்று யாவரும் தீர்மானித்தனர்.

சண்பகக்கண் நம்பியாரே அந்தக் களவைச் செய்தவர். அவர் ஒருநாள் இரவு நாயகரைக் கைக்கொண்டு இராமநாதபுரம் சேதுபதியின் ஆட்சிக்கு உட்பட்ட திருவுத்தரகோசமங்கைக்குச் சென்று ஒருவரிடம் அந்த மூர்த்தியை அடகுவைத்தார். அங்கே ஆறை அழகப்ப முதலியாரது அதிகாரம் செல்லாது. இந்த விஷயம் சேது வேந்தருக்குத் தெரியவே, அவர் அம்மூர்த்தியைப் பெறச் செய்து உத்தரகோசமங்கைக் கோயிலிலே வைத்துப் பூஜை முதலியன நடை பெறும்படி ஏற்பாடு செய்தார்.

சங்கரநயினர் கோயில் நாயகர் சேதுபதியினது பாதுகாப்பில் உத்தரகோசமங்கைக் கோயிலில் இருப்பது ஆறை அழகப்ப முதலியாருக்கு ஒற்றர் மூலம் தெரிய வந்தது. 'அங்கிருந்து எவ்வாறு பெறுவது?' என்று அவர் யோசிக்கலானார். தாம் சேதுபதிக்குத் திருமுகம் எழுதினால் நட்பு முறையில் இல்லாத அரசர், "தம் ஊரில் இருந்த மூர்த்தியைக் காப்பாற்றத் தெரியாமல் களவுபோகும்படி விட்டவருக்கு மறுபடியும் அம்மூர்த்தி எதற்கு?" என்று விடையனுப்பினால் தம் மானம் குலைந்து விடுமென்று எண்ணினார். தம் கீழுள்ள ஸம்ஸ்தானத்து மந்திரிமார்களுள் யாரையேனும் அனுப்பலாமென்று எண்ணினாலோ, அவர்களுள்யாரும் சேதுபதியைப் போய்ப் பார்ப்பதென்பது இயலாத காரியமாக இருந்தது. 'நாயகர் இருக்கும் இடம் தெரிந்தும் கொண்டுவர வழியில்லையே!' என்று முதலியார் வருந்தினார்.

அக்காலத்தில் சொக்கம்பட்டி ஸம்ஸ்தானமும் அவரது ஆட்சிக்கு அடங்கியிருந்தது. மற்ற ஸம்ஸ்தானத்திலிருந்து ஸ்தானாதிபதிகள் அடிக்கடி திருநெல்வேலி வந்து

அழகப்ப முதலியாரைப் பார்த்துவிட்டுச் செல்வார்கள். அவர்கள் வரும்போது முதலியாருக்குமுன் சாஷ்டாங்க மாக விழுந்து வணங்குவது வழக்கம். அவ்வாறு வணங்க வேண்டுமென்று முதலியாரே விரும்பினர். சொக்கம் பட்டி ஸ்தானாதிபதியாகிய பொன்னம்பலம் பிள்ளை மாத் திரம் அவ்வாறு செய்வதில்லை. தம் ஸம்ஸ்தானத்திற் குரிய கப்பத்தை மாத்திரம் அனுப்பிவந்தாரே ஒழிய நேரிற் சென்று முதலியாரைப் பார்ப்பதில்லை. அதனால் அழகப்ப முதலியார், 'இவன்மட்டும் என்ன பெரியவனோ?' என்று நினைத்திருந்தார்.

எல்லா ஸம்ஸ்தானத்து மந்திரிகளும் அழகப்பமுதலி யார்முன் கூடி யோசித்தபோது எல்லோரும் ஒருமுகமாக ஓர் அபிப்பிராயத்தையே கூறினர்; "இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்கு நாங்கள் சிறிதும் பயன்படமாட்டோம்; எத்தகைய தீரராக இருந்தாலும் முடியாது. சொக்கம் பட்டி ஸ்தானாதிபதிப் பிள்ளையவர்கள் மனம் வைத்தால் எப்படியாவது காரியத்தைச் சாதித்து விடுவார்கள்" என்று அவர்கள் பன்முறை சொன்னார்கள்; "சமுகத்தில் அவர்களை வருவித்து விஷயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் இந்தச் சீமையின் கௌர வமே போனமாதிரிதான்" என்று வற்புறுத்தினார்கள். அவர்களுக்கெல்லாம், 'இவர் நம்மை வணங்கச் செய்கிறாரே யொழிய அவரைச் செய்ய முடியவில்லை. இப்பொழுது அகப்பட்டுக் கொண்டார்' என்று மனத்துக்குள் ஒரு மகிழ்ச்சி வேறு இருந்தது.

முதலியார் பெரிய தர்மசங்கடத்தில் அகப்பட்டார். 'அந்த இறுமாப்புக் கொண்ட மனிதனிடமா உதவியை வேண்டுவது?' என்று அவர் நினைத்தார். தம்முடைய இறுமாப்பே அந்த மதியூகியைத் தம்பால் வராமல் தடுத்ததென்பதை அவர் உணரவில்லை. 'இந்த விபத்து எல்லாவற்றையும்விடப் பெரியதாகையால், இப்போது நம் கௌரவத்தைப் பார்ப்பது அழகன்று' என்ற முடி விற்கு வருவதற்குள் அவர் எவ்வளவோ சஞ்சலத்துக்கு ஆளானார். 'வேறு வழியில்லை' என்பதை நன்றாக உணர்ந்து கொண்டவராதலின், பொன்னம்பலம்

பிள்ளையை அழைத்துவரவேண்டுமென்று தக்க மனிதர்களை அனுப்பினர்.

சிறந்த அறிவாளியும் சிவபக்தருமாகிய பொன்னம்பலம் பிள்ளை உடனே திருநெல்வேலிக்கு வந்தார். அவருக்கும் இந்த விஷயத்திற் கவலை இருந்தே வந்தது. முதலியார் அவரைக் கண்டவுடன் மரியாதையாக வரவேற்று உபசரித்தார்; தம் கவலையை எடுத்துரைத்தார்.

"சமுகத்தில் உண்டாயிருக்கும் கவலையை நான் முன்பே அறிந்திருக்கிறேன். ஆனாலும் 'அவ்விடத்து அதிகாரத்துக்கு எதுதான் கைகூடாது; விரைவில் நாயகர் எழுந்தருள்வார்; போய்த் தரிசிக்கலாம்' என்ற எண்ணத்தோடு இருந்தேன்" என்றார் பொன்னம்பலம் பிள்ளை.

"நான் அன்றுமுதல் அன்னம் உண்ணவில்லை. உம்மால்தான் இந்தக் காரியம் நிறைவேறுமென்று எல்லோரும் கூறுகிறார்கள். நம் சீமையின் கௌரவத்தைக் காப்பதில் உமக்கும் பங்கு உண்டல்லவா?" என்றார் முதலியார்.

"உத்தரவுப்படியே செய்யக் காத்திருக்கிறேன். சங்கரன் திருவருள் துணைசெய்யுமென்றே நம்புகிறேன்" என்று பொன்னம்பலம் பிள்ளை அந்தப் பணியை ஏற்றுக்கொண்டனர்; அப்போது அழகப்ப முதலியாருக்குச் சிறிது தைரியம் வந்தது.

"உத்தரகோசமங்கையிலிருந்து எப்படிக் கொண்டு வருவது? அங்கே யார் போவார்கள்? நாமும் திருட்டுக்குப் பதில் திருட்டு நடத்துவதா?" என்று கவலையோடு கேட்டார் முதலியார்.

"அந்த விஷயங்களைப்பற்றிச் சமுகத்திற் கவலையே கொள்ள வேண்டாம். என் விருப்பத்தின்படியே நடக்க வேண்டுமென்று சில தக்க மனிதர்களை என்னுடன் அனுப்பினால் போதும். மற்றவற்றை நான் கவனித்துக் கொள்கிறேன்."

அங்கே இருந்த ஸ்தானாதிபதிகளும் வித்துவான்களும், "நான் வருகிறேன்; நான் வருகிறேன்" என்றார்கள்; 'இந்தக் கைங்கரியத்தில் பொன்னம்பலம் பிள்ளைக்கு

ஏவல் புரிவதற்குக் கொடுத்துவைக்க வேண்டாமா?' என்பது அவர்கள் எண்ணம்.

சேது வேந்தருக்கும் சொக்கம்பட்டியாருக்கும் பகைமை இருந்து வந்தது. ஒருமுறை சொக்கம்பட்டியாரைச் சேதுபதி அடக்கத் தலைப்பட்டபோது அவரால் முடியவில்லை.

இந்த நிலையில் 'பொன்னம்பலம் பிள்ளை சேதுபதியின் ராஜ்யத்திலிருக்கும் மூர்த்தியை எப்படிக் கொண்டு வர முடியும்?' என்றே யாவரும் மயங்கினர். "அவர் சமர்த்தர்; ஒருவருக்கும் தெரியாத தந்திரம் அவருக்குத் தெரியும்" என்று சிலர் கூறினர்.

பொன்னம்பலம் பிள்ளை, சில ஸ்தானாதிபதிகளும் வித்துவான்களும் வேறு சிலருமாக நூறுபேரைக் கூட்டிக் கொண்டார். மேள வாத்தியக்காரர் சிலரையும் அழைத்துக்கொண்டு எல்லோருடனும் இராமநாதபுரத்தை நோக்கிப் புறப்பட்டார். இராமநாதபுரம் எல்லைக்கருகில் ஓர் ஊரில் தங்கி முன் ஏற்பாட்டின்படி அங்கே வந்திருந்த காவடியொன்றைப் பொன்னம்பலம் பிள்ளை எடுத்துக் கொண்டார். வாத்தியக்காரர்களை வாத்தியகோஷம் செய்யச் சொன்னார். மற்றவர்களைப் பழனிக்கு ஒரு கோஷ்டியாகச் செல்பவரைப்போல வேடம் புனையச் செய்தனர். தாம் காவடி யெடுத்துக்கொண்டு ஆவேசம் வந்தவர்போல நடந்தார். அந்த நூறு பேரும் 'அரோஹரா! அரோஹரா!' என்று முழக்கம் செய்தனர். சிலர் சேகண்டி தட்டினர். சிலர் பழங்களைச் சுமந்து வந்தனர். சிலர் தேங்காய் மூட்டையைத் தாங்கினர். சிலர் பெரிய விபூதிப் பைகளைக் கொணர்ந்தனர். சிலர் தூபமுட்டிகளில் அடிக்கடி சாம்பிராணியைத் தூவிப் புகைத்தனர். சிலர் திருப்புகழ் பாடினர். அடிக்கடி காவடிக்குத் தீபாராதனை செய்தனர். இத்தகைய பெரு முழக்கத்தோடு அக் கூட்டம் இராமநாதபுரம் எல்லையிற் புகுந்தது.

சேது வேந்தரை ஒருவர் பார்ப்பதென்பது மிகவும் கடினமான காரியம். அரண்மனை வாயிலைக் கடந்து செல்வதே அரிது. ஆயினும் பழனிக்குச் செல்லும் காவடிகளை மாத்திரம் யாரும் தடை செய்வதில்லை. காவடி

கொணர்வோர் நேரே உள்ளே செல்வார்கள். சேதுபதி அரசர் எழுந்துவந்து வணங்கி ஆவேசம் வந்தவர்கள் கூறும் 'உத்தரவுகளை'க் கேட்டுப் பழனியாண்டவருக்குக் காணிக்கைகளை அனுப்புவார். மகா மேதாவியாகிய பொன்னம்பலம் பிள்ளை இவற்றையெல்லாம் விசாரித்து வைத்திருந்தவராதலின், "பழனியாண்டவா! உன்னைத் தான் நம்பியிருக்கிறேன். உன்னுடைய தாய் தந்தையரை உரிய இடத்திலே மீட்டும் ஸ்தாபிக்க உன் திருவருள் தான் துணை செய்யவேண்டும். நான் செய்வது அபசாரமானாலும் க்ஷமிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டே இந்த நாடகத்தைத் தொடங்கினர்.

காவடியோடு வந்தவர்கள் நூறுபேரே; எனினும் வரவர ஊரிலுள்ளாரும் கூடிக்கொண்டனர். அவரவர்கள் பக்தியினால் உந்தப்பட்டு 'அரோஹரா' என்று முழக்கம் செய்தனர். பெரிய கோஷத்துடன் அந்தக் கூட்டம் இராமநாதபுரம் அரண்மனையில் உள்ள இராமலிங்க விலாசத்திற் புகுந்தது. அரசர் வருவோரை அந்த மண்டபத்திற் சந்தித்துப் பேசுவது வழக்கம்.

'பழனிக்குக் காவடி கொண்டுசெல்லும் கூட்டம் ஒன்று வருகிறது; இதுகாறும் இவ்வளவு சிறப்பாகவும் பக்தியாகவும் பிரார்த்தனை செலுத்துவோர்களைக் கண்டதில்லை' என்று அரண்மனை உத்தியோகஸ்தர்கள் பிரமித்தனர். சேதுபதி அரசர் கூட்டம் வருவதை உணர்ந்து வழக்கப்படியே எதிர்சென்று வரவேற்க ஸித்தராக இருந்தார்.

கூட்டம் பெரிதாகிவிட்டமையால் வெளிமுற்றத்திலே நின்றுவிட்டது. முக்கியமானவர்கள் உள்ளே சென்றனர். காவடி வந்தவுடன் சேது வேந்தர் பொன்னம்பலம் பிள்ளைக்கு அருகில் வந்தார். அப்போது ஒருவர் காவடிக்குத் தீபாராதனை செய்தார். மன்னர் இரு கைகளையும் குவித்தனர். அந்தச் சமயத்தில் பொன்னம்பலம் பிள்ளை திடீரென்று அருகில் நின்ற ஒருவரிடம் காவடியைக் கொடுத்துவிட்டுச் சேதுபதியை நமஸ்காரம் செய்து எழுந்து நின்றார்; நின்றவர்,

"சேதுபதி யென்றுநர சென்மமெடுத் தாய்கமல
மாதுபதிக் குன்னையன்றி வாயாதே—நீதிபதி
நீயே விஜயரகு நாத னினையீன்ற
தாயே யருட்கோ சலை"

என்ற செய்யுளையும் கூறினர்.

அரசர் அவர் நிலையைக் கண்டும் கூறிய செய்யுளைக் கேட்டும் ஒன்றும் விளங்காமல் நின்றனர்; 'காவடி கொண்டு வருவோர் நம்மை வணங்குகிறரே; இவர் இந்தப் பாட்டை எதற்காகச் சொல்லுகிறர்!' என்று ஆச்சரியமடைந்தார்.

"அடியேன் சொக்கம்பட்டி ஸ்தானதிபதி பொன்னம்பலம்; மகாராஜா அவர்களுடைய பெருமையை அறிந்து தரிசிக்க வேண்டுமென்று நெடுங்காலமாக எண்ணியிருந்தேன். ராஜ தரிசனம் சுலபமாகக் கிடைக்கக்கூடியதாக இல்லை. அதனல் இந்தமாதிரி செய்யலானேன். பழனியாண்டவன் தரிசனத்தைக் காட்டிலும் மகாராஜா தரிசனந்தான் எனக்கு முக்கியமாக வேண்டும்" என்றர்.

பொன்னம்பலம் பிள்ளையின் புத்தி சாதுர்யத்தையும் பராக்கிரமத்தையும்பற்றி அரசர் முன்பே கேள்விப்பட்டிருந்தார். இப்போது அவரை நேரே கண்டபோது திடுக்கிட்டார்.

"அப்படியா! சந்தோஷம். நாம் உம்மைப்பற்றிக் கேட்டிருக்கிறேம். நீர் சொல்லிய செய்யுளில் நம்முடைய பெயரைச் சொன்னது சரியே; தாயாருடைய பெயர் உமக்கு எப்படித் தெரியவந்தது?" என்று அரசர் கேட்டார்.

அரசரது பெயர் விஜயரகுநாதசேதுபதி யென்பது. அவர் தாயார் பெயர் கோசலை நாச்சியாரென்பது. பொன்னம்பலம் பிள்ளை, சேதுபதியை இராமராகப் புகழ்ந்து சொல்ல வந்தவர், 'நீதான் விஜயத்தையுடைய ரகுநாதன்; நின் அன்னையே கோசலைக்கு ஒப்பானவள்' என்னும் பொருள்படப் பாடினர். அவருக்கு உண்மையில் சேதுபதியின் அன்னையார் பெயர் தெரியாது. அந்தப் பெயரும் பாட்டில் வெறும் உவமையாகமட்டும் நில்லாமல்

உண்மைக்கும் பொருத்தமாக அமைந்துவிடவே மன்னர் வியப்படைந்தார். 'பொன்னம்பலம் பிள்ளை சிறந்த கவிஞர்; தெய்வபக்தி யுடையவர்; கடாக்ஷ வித்துவான்' என்று அவர் கேள்விப்பட்டிருந்தார். 'அதற்கு இதைவிட வேறு சாக்ஷியம் என்ன வேண்டும்?' என்று அவர் அப்போது எண்ணினர்.

பொன்னம்பலம்பிள்ளை, "ஏதோ அடியேனுக்குத் தோற்றியது; சொன்னேன்" என்று பணிவாகக் கூறினர். சேதுபதியரசருக்கு அவரிடம் பெருமதிப்பு உண்டாயிற்று. அவரை நிற்கவைத்துப் பேசுவது தவறு என்று உள்ளத்திற் பட்டது. உடனே தாம் ஓர் ஆசனத்தில் அமர்ந்து தமக்கு அருகில் ஓர் ஆசனத்தில் பொன்னம்பலம் பிள்ளையை இருக்கச் சொன்னர்.

தம்முடன் வந்திருக்கும் அன்பர்கள் நிற்கும்போது தாம்மட்டும் ஆசனத்தில அமர்வதை அவர் விரும்பவில்லை. தம் கருத்தை அவர் அரசருக்குத் தெரிவித்தார். அது கேட்ட அரசர், 'இவரல்லவோ மனிதர்! தமக்குமாத்திரம் நன்மையைத் தேடிக்கொள்வோரே மலிந்திருக்கும் இவ்வுலகத்தில் பிறரது மரியாதையையும் பாதுகாப்போர் மிகவும் அரியர்' என்று எண்ணி அவரை மனத்திற்குள் பாராட்டினர். அப்பால் அங்கு வந்திருந்த ஸ்தானுதிபதிகளுள்ளும் வித்துவான்களுள்ளும் முக்கியமான மூவருக்கு ஆசனம் அளிக்கச் செய்து அமரும்படி கூறினர். அரசருக்கு முன் சம ஆசனத்தில் இருப்பதென்பது அக்காலத்தில் அரசபதவியே பெறுவதற் கொப்பானது.

சேதுபதியும் பொன்னம்பலம் பிள்ளையும் நெடுநேரம் சல்லாபம் செய்துகொண்டிருந்தனர். பிள்ளையினுடைய பேச்சில் அவருடைய சிறந்த குணங்களும் புத்தி வன்மையும் வெளிப்பட்டன; 'உலகத்தார் இவரைப்பற்றிக் கூறும் புகழுரை பொய்யல்ல; மெய்யே' என்பதைச் சேதுபதி அரசர் தெளிந்தார்.

பொன்னம்பலம்பிள்ளை தம் நண்பர் கூட்டத்துடன் இராமநாதபுரத்தில் சிலநாள் தங்கினர்; இடையில் ஒரு

முறை பழனிக்குப் போய் முருகக்கடவுளைத் தரிசித்து மீண்டும் இராமநாதபுரத்துக்கு வந்தார். பின்பு தம்முடன் வந்தோர்களிற் சிலரை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவர்களை அவரவர்கள் இடங்களுக்கு அனுப்பிவிட்டார்.

ஒருநாள் பொன்னம்பலம்பிள்ளை சேதுபதியோடு பேசிக்கொண்டிருக்கையில், "இந்த ஸம்ஸ்தானத்தில் பல பெரிய ஸ்தலங்கள் இருக்கின்றன. அவ்விடங்களுக்கெல்லாம் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து வரவேண்டுமென்பது நெடுநாளாக எனக்கு உள்ள அவா. அதற்குத் தக்ககாலம் வரவில்லை. இப்போது மகாராஜா அவர்களின் கடாக்ஷத்திற்குப் பாத்திரனாகிவிட்டமையால் அந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்ளலாமென்று தோற்றுகிறது. முதலில் உத்தரகோசமங்கையைத் தரிசிக்கவேண்டும். மணிவாசகப் பெருமான் திருவாக்கால் உருகி உருகிப் பாடிய திருப்பாடல்கள் பல அந்த ஸ்தலத்தைப்பற்றி உள்ளன. அவற்றைப் படிக்கும் போதெல்லாம், இவ்வளவு அருகிலுள்ள அந்தத் திவ்ய ஸ்தலத்தைப் பார்க்க முடியவில்லையே யென்ற வருத்தம் உண்டாகும். மகாராஜாவுடைய திருவுள்ளக் குறிப்பு எனக்குத் துணையாக இருந்தால் அந்த ஸ்தல தரிசனத்தைச் செய்து பெரும் பேறு பெற்றவனாவேன்" என்றார்.

"இந்தக் காரியம் பெரிதல்லவே. நீர் உமது விருப்பப் படியே ஸ்தல தரிசனம் செய்யலாம். தக்க மனிதர்களை அனுப்புகிறோம்" என்றார் மன்னர்.

அரசர் ஏற்பாடு செய்யும்போது காரியம் கைகூடுவதில் தடை ஏது? பொன்னம்பலம்பிள்ளை தம் அன்பர்களுடன் அரண்மனை அதிகாரி ஒருவரால் அழைத்துச் செல்லப்பட்டார். உத்தரகோச மங்கையின் எல்லையில் அடிவைக்கும்போது அவர் உள்ளம் துடித்தது. 'நாம் மேற்கொண்ட காரியம் முற்றும் நிறைவேறவேண்டுமே' என்ற கவலையே அவருக்கு அதிகமாக இருந்தது. அவர் உண்மையில் உத்தரகோச மங்கையில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளையா பார்க்கச் சென்றார்? இல்லை. சங்கர நயினர் கோயில் நாயகரையே தேடிச் சென்றார். அவர்

தம் மனத்திலிருந்த விரைவை வெளியிலே காட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தார்.

ஆலயத்துக்குட் சென்று முறையாகத் தரிசனம் செய்யத் தொடங்கினர். பூஜகர்களிடம், "இந்த ஸ்தலம் மிகவும் புராதனமானது. இங்கே உள்ள மூர்த்தி பேதங்களின் வரலாறுகளைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு மூர்த்தியையும் நன்ருகத் தரிசனம் செய்ய வேண்டும்'' என்ருர்.

அவ்வாறே ஒவ்வொரு மூர்த்திக்கும் மெல்லத் தீபாராதனை செய்து ஒரு முதிய குருக்கள் அவ்வம்மூர்த்தியின் திருநாமம், அதன் சம்பந்தமான உத்ஸவம், வரலாறு முதலியவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லிவந்தார்.

"இவர் சங்கர நயினர் கோயில் நாயகர்'' என்று குருக்கள் சொன்னபோது பொன்னம்பலம்பிள்ளை உடல் பதறியது; "ஆ! அவர் இங்கே எப்படி எழுந்தருளினர்?'' என்று கேட்டார்.

குருக்கள் விஷயத்தை விரிவாகச் சொன்னர். அதைக் கேட்கும்போது பொன்னம்பலம் பிள்ளைக்கு 'இப்படியே இந்தப் பெருமானை எடுத்து அணைத்துக் கொண்டு போய்விடவேண்டும்' என்ற வேகம் உண்டாயிற்று. அவர் அமைதி பெறுவதற்குச் சிறிது நேரம் சென்றது. அவர் கண்களில் நீர் ததும்பியது. உள்ளம் உருகியது; ஓர் அரசர் தம் அரசை இழந்துவிட்டு மற்றோர் அரசன் கைக்கீழ் மறைந்து வாசம் செய்வதைக் காண்பது போன்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. அவர் அந்த மூர்த்தியைப் பார்க்கப் பார்க்கச் சங்கர நயினர் கோயிற் காட்சி அவர் அகக்கண்முன் நின்றது; "எம் பெருமானே, தேவரீருக்குரிய சிறப்பெல்லாம் அங்கே இருக்க அவற்றை விட்டுவிட்டு இங்கே எழுந்தருளியதற்கு என்ன காரணம்? தேவரீருக்குரிய புற்று இங்கே இல்லையே; புன்னைவனம் இல்லையே; நாகசுனையும்

இல்லையே'' என்று நைந்தார். கவிஞராகிய அவரது வருத்தம் ஒரு வெண்பாவாக வெளிப்பட்டது:

''புற்றெங்கே புன்னை வனமெங்கே பொற்கோயிற்
சுற்றெங்கே நாக சுனையெங்கே—இத்தனையும்
சேரத்தா மங்கிருக்கத் தேவனீ தான்றனித்தித்
தூரத்தே வந்ததென்ன சொல்.''

கோயிற் பரிவாரங்களும் பிறரும் அவர் நெடுநேரம் அந்த மூர்த்தியைத் தரிசித்துக்கொண்டே நின்றதையும் மன முருகிச் செய்யுள் ஒன்றைக் கூறியதையும் கண்டு அவருடைய அன்பை வியந்தார்கள்.

ஒருவாறு தரிசனம் செய்துகொண்டு பொன்னம்பலபிள்ளை மீண்டும் இராமநாதபுரம் போய்ச் சேர்ந்தார். அவருக்கு முன்பே சென்ற ஓர் அதிகாரி அரசரிடம் உத்தரகோசமங்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைச் சொன்னார்.

பொன்னம்பலம் பிள்ளையைக் கண்ட அரசர், ''திருப்தியாகத் தரிசனம் ஆயிற்றா?'' என்று வினவினர்.

"மகாராஜாவின் கிருபை இருக்கும்போது அதற்கு என்ன தடை?''

"தாங்கள் கவிஞரல்லவா? அங்கே ஏதேனும் புதிய தோத்திரப் பாடல் சொன்னதுண்டோ?''

இதுதான் தம் காரியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏற்ற சமயமென்று பொன்னம்பலம்பிள்ளை உணர்ந்தார்; ''அங்கே சிலகாலமாக உள்ள ஒரு புதிய மூர்த்தியைத் தரிசித்தேன். அப்போது நான் ஒரு செய்யுள் இயற்றிச் சொன்னேன். அதற்கு விடையாக ஒரு செய்யுளும் கிடைத்தது'' என்றார்.

"என்ன ஆச்சரியம்! எங்கே அவற்றைச் சொல்லுங்கள்.''

பொன்னம்பலம்பிள்ளை "புற்றெங்கே" என்ற வெண்பாவைச் சொல்லிவிட்டு, "இதற்கு விடையாக அம் மூர்த்தியினிடமிருந்து கிடைத்த வெண்பாவையும் கேட்டருளவேண்டும்:

விள்ளுவமோ சீராசை* வீடுவிட்டுக் காடுதனில்
நள்ளிருளிற் சேண்பகக்கண் நம்பியான்—மேள்ளவே
ஆடேடுக்குங் கள்வரைப்போ லஞ்சா தேமைக்கரிசற்
காடுதோறு மேயிழுத்தக் கால்"

என்று சொல்லி நிறுத்தினர்.

சங்கரன்கோயில் நாயகர் உத்தரகோச மங்கைக்கு வந்த வரலாறு தமக்குத் தெரியுமென்பதைச் சாதுர்யமாக இந்த வெண்பாமூலம் பொன்னம்பலம்பிள்ளை புலப்படுத்தினர். அந்த மூர்த்தியை மீட்டும் சங்கர நயினர் கோயிலுக்கே எழுந்தருளச்செய்விக்க வேண்டுமென்ற குறிப்பையும் அவர் கூறிய வெண்பாக்களால் அரசர் அறிந்து கொண்டார். "உமது பக்தியையும் சாமர்த்தியத்தையும் பாராட்டுகிறோம். அந்த நாயகர் கரிசற் காட்டிலே வந்து அவஸ்தைப்பட்டாலும், இங்கே வந்த பிறகு அவருக்கு ஒரு குறைவும் இல்லை" என்றார் அரசர்.

"இங்கே குறைவு இருப்பதாக யாரும் சொல்லவில்லையே. ஆனாலும் அவரவர் இடத்தில் அவரவர் இருப்பதுதானே சிறப்பு!" என்றார் பொன்னம்பலம் பிள்ளை.

அரசர் புன்னகை பூத்தார். "உம்முடைய விருப்பப்படியே அந்த மூர்த்தியை அவருக்குரிய இடத்திலே சேர்த்துவிடச் செய்யலாம்" என்று அவர் கூறியபோது பொன்னம்பலம்பிள்ளைக்குச் சந்தோஷம் பொங்கியது.

அரசர் உத்தரவுப்படி தக்க உபசாரங்களுடன் உத்தரகோசமங்கையிலிருந்த மூர்த்தி எழுந்தருளினர். பொன்னம்பலம்பிள்ளை அரசரிடம் விடைபெற்றுக்

---

*சீராசை-சங்கர நயினர் கோயில்.

கொண்டு அன்பர்களுடன் அம்மூர்த்தியைத் தொடர்ந்து சென்றார். செல்லுகையில் தாம் நாயகருடன் வரும் செய்தியையும், திருமங்கலத்தில் வந்து சந்திக்க வேண்டும் என்பதையும் ஆறை அழகப்பமுதலியாரிடம் தெரிவிக்கும் வண்ணம் ஒருவரை முன்னராக அனுப்பியிருந்தார். ஒவ்வொரு நாளும் மிக்க ஆவலுடன் 'என்ன செய்தி வருமோ' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த முதலியார் தம் அதிகாரத்தை மறந்தார். பொன்னம்பலம் பிள்ளையை வாழ்த்தி அவரை எதிர்கொண்டு புறப்பட்டு விட்டார். அவருடன் பல பக்தர்கள் புறப்பட்டனர்.

திருமங்கலத்தில் முதலியார் பிள்ளையைச் சந்தித்தனர். எல்லோரும் நாயகரைத தரிசித்து ஆராமை மீதூர விம்மி விம்மி நைந்து உருகினர். பொன்னம்பலம் பிள்ளையை வாயார வாழ்த்திப் புகழ்ந்து பாராட்டினர்.

நாயகர் சங்கரன் கோயிலில் மீண்டும் தமக்குரிய இடத்தில் எழுந்தருளினர். இந்தச் செயலால் ஆறை அழகப்ப முதலியாரும் பொன்னம்பலம் பிள்ளையும் அதிகாரி, ஏவலரென்னும் முறை மாறி நட்பு முறையிற் பழகலாயினர்.



## : கூட்டுறவு - பாங்கிகளின் தோற்றம் :

* டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி. *



சென்ற நூற்றாண்டுக் கடைசியில் தானியங்கள் விலைவாசி குறைந்திருந்தது. நம் தேசம் வேளாண்மைக்கு மழையையே எதிர் பார்த்திருப்பது. உரியகாலத்தில் மழை இல்லாவிட்டால் குடியானவனுக்கு வருவாய் இல்லாமற் போவதோடு, வியவசாயத்திற்காகச் செலவுசெய்த பொருளும் நஷ்டமாகும். முன் இருந்த அரசர்கள் பூமி விளைந்த காலத்தில் விளைந்த தானியங்களில் ஒரு பாகத்தை வரியாகப் பெற்றுக் கொண்டனர். ஆங்கிலேய அரசாட்சி ஆரம்பித்த காலத்தில் அந்த ஏற்பாடு மாறியது. விளைந்தாலும் விளையாவிட்டாலும் ஓர் ஏக்கராவுக்கு இவ்வளவு என்று ஒரு குறிப்பிட்ட தொகையை வசூல் செய்ய ஆரம்பித்தார்கள். வரி விகிதம் அதிகமாக இல்லாவிட்டாலும் நிர்ப்பந்தம் இருந்ததனால், சரியான விளைவு இல்லாத காலங்களில் குடியானவன் கடன் வாங்கி வயிறுவளர்ப்பதோடு வரியும் செலுத்தவேண்டியதாயிற்று. இந்தக் காரணங்களெல்லாம் சேர்ந்து குடியானவனுக்குக் கடன் பளுவை உண்டாக்கின. வட்டி அதிகமாக இருந்தபடியால் கடன் வளர்ந்து கொண்டிருந்தது. குடியானவன் வியவசாயத்தில் மிகுத்து வைத்துக் கடனுக்கு வட்டிகூடக் கொடுக்கமுடியாமல் இருந்தது. இதனாலே தான் ஒவ்வொரு கிராமத்திலும் வெளிவருவாய் இல்லாமல் வியவசாயம் செய்துகொண்டிருந்த குடியானவர்கள் எல்லோரும் அநேகமாக நாற்பது ஐம்பது வருஷத்திற்குள் தங்கள் பூமியை விற்க வேண்டி நேர்ந்தது. அந்த நிலங்களை வாங்கினவர்களும் அதே மாதிரியாகத்தான் நாற்பது ஐம்பது வருஷத்திற்குள் கடன்பட்டு

அந்தக் கடனைத் தீர்க்க வழியில்லாமல் பூமியை மீட்டும் விற்க வேண்டிவந்தது.

இந்த நிலைமையில் பூமியை அபிவிருத்தி பண்ணவாவது, வியவசாயத்தை விருத்திபண்ணவாவது முடியாது. நிலத்தில் இருந்துவரும் வரும்படியும் வரவரக் குறைந்துபோய்விட்டது. குடியானவன் சிறு தொகைகள் செலவு செய்துகூட வியவசாயத்திற்குரிய விருத்தியம்சங்களைக் கைக்கொள்ள முடியாமல் இருந்தது. நிலத்துக்கு உரம் போடவும் சரியான கால் நடைகளை வைத்து வியவசாயம் செய்யவும் ஜலாதாரத்துக்காகக் கிணறுகளும் வாய்க்கால்களும் வெட்டவும் நல்ல எருவும் நல்லவிதையும் வாங்கவும் அவனுக்குச் சக்தியில்லை. ஆகையால் நம் கிராமங்களின் நிலைமை அதோகதியாயிற்று; ஜனங்கள் கிராமங்களை விட்டுப் பட்டணங்களுக்கு வந்து தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைத்து, மாதம் பத்துப் பதினைந்து சம்பளம் கிடைக்கும் உத்தியோகம் போதுமென்று நினைக்கும் நிலைக்கு வந்தனர். இதனால் கிராமங்களில் புத்திசாலித்தனமாகக் காரியம் செய்யும் வன்மையுள்ளவர்கள் அருகினர்கள். பலவிதத்திலும் கிராம நிலைமை அதிகக் கேவலமடைந்தது.

இவைகளைப் பார்த்த அதிகாரிகள் ஜனங்களுக்கு இருக்கும் கடன் பளு எப்படியாவது குறைந்தால் அதன் மூலம் குடியானவர்களுக்கு நன்மை உண்டாகலாமென்றும் வியவசாய வரும்படியில் மீதம் ஏற்படுமென்றும் அதைக்கொண்டு வியவசாயத்தையும் நிலவளத்தையும் அபிவிருத்தி செயவார்களென்றும் கிராமங்கள் முன்னேற்ற மடையுமென்றும் அபிப்பிராயம் கொண்டு அடிக்கடி கவர்ண்மெண்டாருக்கு அறிவித்துவந்தார்கள். கவர்ண்மெண்டாரும் கிராம நிலைமையை விசாரித்துப் பார்த்துக் கடன் பளுவை நிவிர்த்திபண்ணுவதற்கு என்ன செய்யலாமென்று ஆராய்ச்சி செய்யப் பல பெரிய அதிகாரிகளை நியமித்தனர். நம் இராஜதானியில், ஜனங்களிடத்தில் இரக்கமுள்ள ஸிவிலியனாகிய **ஸர் பிரடெரிக் நிகல்ஸன்** என்பவரை இந்த விஷயத்தைப்பற்றி ஆராய்ந்து அறிவிக்கும்படி நியமித்தார்கள். அவரே இந்தியாவின் மற்றப் பாகங்களைப்பற்றியும் யோசனை சொல்ல இன்னும் சிலரோடு நியமிக்கப்பெற்றார்.

இத்தகைய நிபுணர்கள் பலவருஷம் ஆராய்ச்சி செய்தபின் 'கிராமபாங்கிகள் நிறுவவேண்டும்; அவற்றின் மூலம் குடியானவர்களுக்குச் சௌகரியம் உண்டாகும்படி குறைந்தவட்டிக்குக் கடன் கொடுக்கவேண்டும்' என்ற முடிவுக்கு வந்தார்கள். அதற்குமேல் சிலபேர், குடியானவன் பட்ட கடன் முழுவதையும் தீர்த்துக் கொள்ளும்படி பணம் கொடுக்கவேண்டுமென்றனர்; இன்னும் சிலபேர் வியவசாயம் முதலிய சரியான காரியங்களுக்கு வேண்டிய

தொகையைமாத்திரம் கொடுத்தாற் போதுமென்று அபிப்பிராயப் பட்டனர். இந்த விசாரணைகளின் மூலந்தான் இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோன்றியது.

1904-ஆம் வருஷம், முதன் முதலாக இந்தியா கவர்ண்மெண்டாரால் கூட்டுறவுச் சட்டம் ஏற்பட்டது. அந்தச் சட்டத்தால் கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் வைக்கவும், அந்தச் சங்கங்களுக்கு வரையறுக்கப்படாத எல்லா அங்கத்தினர்களுடைய கூட்டுப் பொறுப்பில் கடன் கொடுக்கவும் வசதி செய்யப்பட்டது. அந்தச் சங்கத்தில் அங்கத்தினராவோர் ஒருவருக்கொருவர் ஜாமீனாக ஏற்படுவதால் அவர்கள் பணவிரயம் செய்யாமல் சரியான நடத்தையுடையவர்களாக இருக்கும்படி கவனித்துக் கொள்வார்களென்றும், சங்கத்தில் வாங்கும் கடன்களைச் சரியாக உபயோகித்து உரிய காலங்களில் திருப்பிக்கொடுக்க ஏற்பாடு செய்வார்களென்றும் கவர்ண்மெண்டார் எதிர்பார்த்தனர். அவர்கள் அவ்வாறு ஒழுங்காக நடந்துகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் செய்யவும், அவ்வாறு நடந்துகொள்வதால் அவர்களுக்கு உண்டாகும் நன்மைகளை எடுத்துக்காட்டவும், கிராமச் சங்கங்களின் காரியங்கள் முறைப்படியே நடந்துவருமாறு பார்த்துக் கொள்ளவும், கணக்குகளைத் தணிக்கை செய்யவும் தக்க உத்தியோகஸ்தர்களைத் துரைத்தனத்தார் நியமித்தார்கள்.

முதலில் அங்கங்கே ஏற்பட்ட சங்கங்களுக்கு அங்கங்கே உள்ள பெரிய மனிதர்களே பணம் கடன்கொடுக்குமாறு (Deposit) ஓர் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆரம்பகாலத்தில் ஜனங்கள் சுலபமாகக் கூட்டுறவுச் சங்கங்களை உபயோகிக்க முன்வரவில்லை. கவர்ண்மெண்டாரும் மிகவும் ஜாக்கிரதையாகவே சங்கங்களை ஸ்தாபித்தார்கள். கிரமமாக நடக்கக்கூடிய இடங்களையும் வழிகளையும் அறிந்து அவற்றை அமைத்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களினால் உண்டாகும் நன்மை தெரிந்தவுடனே கிராமஜனங்கள் அதிகமாகக் கூட்டுறவு இயக்கத்திற் கலந்துகொள்ளத் தலைப்பட்டார்கள். சங்கங்கள் அதிகமாயின. கிராமச் சங்கங்கள் அதிகமாக அதிகமாக அங்கங்கே பெரிய மனிதர்களின் தயவால் வேண்டிய பணத்தைப் பெறுவதென்பது கஷ்டமாய்விட்டது. ஆதலினால் இந்தச் சங்கங்களுக்கு வேண்டிய பொருளுதவியைப் பெறுவதற்கு வேறு முயற்சி செய்யவேண்டியதாயிற்று. பணம் கிடைக்கும் பெரிய நகரங்களிலே பணம் திரட்டி அத்தொகையிலிருந்து கிராமச் சங்கங்களுக்குக் கடன்கொடுத்து உதவி செய்ய மத்திய பாங்கிகள் நிறுவ எண்ணினார்கள்; ஜில்லாத் தலைநகரங்களில் மத்திய பாங்கிகளை நியமிக்க வேண்டிய அவசியம்

ஏற்பட்டது. எந்த எந்த ஜில்லாவில் கிராமச் சங்கங்கள் ஏற்பட்டிருந்தனவோ அந்த அந்த ஜில்லாவில் 1910-ஆம் வருஷமுதல் இத்தகைய மத்திய பாங்கிகள் நிறுவப்பட்டன.

மத்திய பாங்கிகள் ஏற்பட்டதன் பிறகு கிராமச் சங்கங்களுக்குப் பணம் கிடைப்பதில் இருந்த கஷ்டம் நீங்கிவிட்டது. இப்போது கிராமச் சங்கங்களெல்லாம் சரியாகமாத்திரம் நடந்துவந்தால் அவைகளின் பொறுப்புக்கும் நாணயத்திற்கும் தக்கபடி வேண்டிய பொருள் முழுதும் மத்திய பாங்கியிலிருந்தே கடனாக வாங்கிக் கொள்ளலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இந்த மத்திய பாங்கிகள் செல்வாக்கோடு இருந்து கொஞ்சமும் பணமுடையில்லாமல் இயக்கத்தைச் சரிவர நடத்திவந்திருக்கின்றன. அநேகமாகத் தமிழ்நாட்டுப் பாங்கிகள் மாகாண பாங்கியில் கடன் வாங்க வேண்டிய சந்தர்ப்பம் நேரவில்லை.

ஆனால், சில ஜில்லாக்களில் வேண்டிய தொகைகளை அங்கங்கேயே சேகரிக்க முடியவில்லை; சில ஜில்லா பாங்கிகளிலோ அதிகமாகப் பொருள் சேர்ந்தமையால் அத்தொகை முழுவதையும் அந்த ஜில்லாவிலேயே உபயோகிக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இராஜதானி முழுவதையும் கூட்டுறவு இயக்கத்தில் ஒற்றுமைப்படுத்திப் பணம் குறைவாக உள்ள இடங்களுக்குப் பணம் கொடுத்தும், அதிகமாக உள்ள இடங்களிலிருந்து கடனாக எடுத்துக்கொண்டு வட்டிகொடுத்தும் உதவி செய்வதற்காக மாகாண பாங்கி ஒன்று நிறுவவேண்டிய அவசியம் தோன்றிற்று.

ஏற்கெனவே மயிலாப்பூரில் கூட்டுறவு இயக்கத்துக்கு உதவி செய்வதற்காக ஸர் வி. ஸி. தேசிகாசார்யாரது முயற்சியால் நடந்து வந்த பாங்கியையே மாகாண பாங்கியாக மாற்றிவிட முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப அதன் விதிகளில் வேண்டிய திருத்தங்கள் செய்யப்பெற்றுச் சுமார் 30 வருஷங்களுக்குமுன் மாகாண பாங்கி ஏற்பட்டது.

இப்போது கிராமத்திலிருந்து மாகாணத்தின் தலைநகரம் வரையில் கூட்டுறவு இயக்கசம்பந்தப்பட்ட எல்லா ஸ்தாபனங்களுக்கும் பொருள் வசதிக்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## : தமிழ் வசனத்துக்கு விஷயம் :

* கி. வா. ஜகந்நாதன் *

ஒரு ராஜகுமாரன் ஓரிடத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் எதிரில் மிகவும் பளபளப்பாகவும் கறுப்பாகவும் ஒரு பொருள் தோற்றியது. யாருடைய தலை மயிரோ அப்படிச் சுருளாக அங்கே கிடந்தது. அதன் அழகைப் பார்த்தபோது அவனுடைய உள்ளம் ஓர் அழகிய மங்கையைச் சித்திரித்துப் பார்த்தது. இத்தகைய கூந்தலையுடையவள் ஒரு கட்டழகியாகத்தான் இருக்கவேண்டும் என்று அவன் உறுதியாக நம்பினான்.

அதை எடுத்துக்கொண்டு ஒரு சித்திரகாரனிடம் போனான். அவன் சித்திரக்கலையின் வரம்பைக் கண்டவன். "இந்த அழகியின் உருவத்தை எழுதிக்கொடு" என்று அவன் கையில் ராஜகுமாரன், தான் கொண்டு சென்ற மயிரைக் கொடுத்தான்.

சித்திரக் கலைஞன், "தலைமயிரைக் கொடுத்துவிட்டு அழகியின் படத்தைக் கேட்கிறாயே!" என்று பரிகாசம் செய்யவில்லை. "அப்படியே செய்கிறேன்" என்று ஒப்புக்கொண்டான். தன் சித்திர ஸாமர்த்தியத்தினால், அந்தக் கூந்தலுக்கு ஏற்ற உருவம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று ஊகித்து ஓர் அழகியின் படத்தை வரைந்து கொடுத்தான். அதை வைத்துக்கொண்டு ராஜகுமாரன் உலகமெல்லாம் தேடிக் கடைசியில் அதே மாதிரி ஒருத்தி இருப்பதைக் கண்டு அவளைக் கல்யாணம் செய்துகொண்டானாம்.

இப்படி ஒரு பழங்கதை உண்டு. கதையில் உள்ள நிகழ்ச்சி சாத்தியமோ, அன்றோ—அந்த விஷயம் வேறு. இந்த வரலாறு கலையின் தத்துவம் ஒன்றை அழகாக வெளியிடுகிறது. அழகின் ஓர் அம்சத்தைக் கலைஞன் கண்டுவிட்டால் அதையே பற்றுக் கோடாகக் கொண்டு அந்த அழகை ஸம்பூர்ணமாக்கி மனோரம்யம் வாய்ந்ததாகச் செய்துவிடுவானென்ற உண்மையை உணர்ந்து கொள்ளலாம்.

சித்திர சிருஷ்டிக்கு மட்டும் பொருந்தியது இந்த உண்மை என்று கொள்ளவேண்டாம். எல்லாவிதமான கலைகளின் விஷயத்திலும் இது பொருந்தும்; இலக்கியமாகிய பெருங் கலைக்கு அதிகப் பொருத்தமுடையது.

இருபதாம் நூற்றாண்டில் இலக்கியப்பரப்பில் வசனம் ஒரு பெரும் பகுதியாக விளங்குகிறது. மேல்நாட்டில் ஆங்கிலம் முதலிய

மொழிகளில், வசனமும் கவிதையின் அளவுக்கு—ஏன்? உபயோகத்தில் கவிதைக்கு ஒருபடி மேலேகூட—உயர்ந்து விட்டதென்று சொல்லலாம். உலகமுழுதும் உள்ள பாஷைகளில் வசன இலக்கியங்கள் மலிந்து வருகின்றன. தமிழ் மாத்திரம் எப்படி விலக்காக இருக்க முடியும்?

வசன சிருஷ்டிக்குக் கற்பனா சக்தி வேண்டுவது அவசியம். ஆனால் அந்தக் கற்பனை படர்வதற்கு ஊன்றுகோல் வேண்டாமா? கவிஞன் கண்ணும் கருத்தும் கொண்டு பிடிக்கும் படங்களை விரிவாக்கிக் கற்பனை வர்ணம் பூசிச் சித்திரிக்கிறான். வசன இலக்கிய கர்த்தாவும் அப்படித்தான் செய்கிறான்.

"வசனத்துக்குத் தமிழில் சரக்கு எங்கே இருக்கிறது?" என்று கேட்கின்றனர். மேல்நாட்டு வசனத்துக்குச் சரக்கு, விஷயம், எங்கே இருந்தது? மனோபாவனையின் வளப்பம் ஒன்றையே துணையாகக் கொண்டு அவர்கள் வசன சிருஷ்டி செய்துவிட்டார்களா? இல்லை. அவர்களுக்கும் பழைய இலக்கியங்கள், சரித்திரங்கள் முதலியவை மூலப்பொருள்களாக உதவின. அவற்றையெல்லாம் அவர்கள் எவ்வளவு கூடுமோ அவ்வளவு உபயோகப்படுத்திக் கொண்டுவிட்டார்கள். பழைய சரக்கெல்லாம் அவர்கள் பயன்படுத்திக்கொண்டபடியால் புதிய சரக்குகளைத் தேடுகிறார்கள்.

ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனியே அமைந்த சில பழஞ் சரக்குகள், மூலக் கருவிகள், இருக்கின்றன. அவற்றை இலக்கிய சிருஷ்டியிலே பயன்படுத்திக்கொண்டால் அந்த இலக்கியத்தில் ஒரு தனிப் பண்பு புலனாகும்.

தமிழில் வசன சிருஷ்டி இளம்பருவத்தில் இருக்கிறது. பழைய கருவிகள் பலவற்றை இன்னும் நாம் தொடாமலே இருக்கிறோம். பழைய இலக்கியத்தில் புதைந்து கிடக்கும் காட்சிகளையும் கருத்துக்களையும் எடுத்து அவற்றின் பழைய தோற்றத்தை மாற்றிப் புது மெருகிட்டுக் கொடுக்கலாம். தமிழ் நாட்டுச் சரித்திரத்திலே மனிதனுடைய உணர்ச்சியைக் கிண்டி விடும் நிகழ்ச்சிகள் ஆயிரக்கணக்காக உண்டு. அவற்றைக் கண்டுபிடித்து விரித்து இனிய வசனத்தில் புதிய சிருஷ்டிகள் செய்யலாம். ஊர்தோறும், குடும்பந்தோறும் கர்ண பரம்பரையாகச் சொல்லப்பட்டுவரும் பல சுவையுள்ள வரலாறுகளை அறிந்து அழகுபடுத்திக் காட்டலாம்.

இலக்கியத்தைப் பார்ப்போம்: கவிஞர்களுடைய உள்ளத்தைக் கவருகின்ற காதலையும் வீரத்தையும் பழைய சங்கநூல்களிலே காண்கிறோம். கவிஞர்களுடைய பாவனா சித்திரங்களையும், சரித்திரத் துணுக்குகளையும் அந்தக் காலத்துப் பாஷையில், அந்தக்

காலத்துச் சம்பிரதாயத்தில் அவை காட்டுகின்றன. அவற்றை மாற்றி அவற்றிலுள்ள விஷயத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு நவீன வசனத்திலே, நவீன அமைப்பிலே பொருத்திக் காட்டினால் எவ்வளவு அழகாக இருக்கும்.

ஒரு சிறிய காட்சி: காதலனும் காதலியும், மரங்களில்லாமல் வெறுமையாக உள்ள பாலைநிலத்தில் சென்று கொண்டிருக்கிறார்கள். தங்கள் காதலை உணராத பெற்றோரைப் பிரிந்து வேறு ஊருக்குப் போகிறார்கள். வெம்மை மிகுந்த பாலையின் கொடுமையைக் காதலின்பத்தில் மறந்து செல்கிறார்கள்.

எதிரே, சில கிழவர்கள் வருகிறார்கள். இயற்கையாகவே கூர்மையை இழந்திருந்த அவர்கள் கண்களுக்குப் பசுமையென்பதே மருந்துக்கும் காணாத பாலை நிலத்தின் வறண்ட காட்சி மிக்க அயர்ச்சியை உண்டாக்குகிறது.

காதலனும் காதலியும் தோன்றுகிறார்கள். முதியவர்களுடைய கண்கள் அவ்விருவருடைய உவகை ததும்பும் முகங்களிற் சென்று பதிந்துவிடுகின்றன. பசுமைக்கு வெறித்துப் போயிருந்த அவை அந்த இரண்டு முக மலர்களில் தோற்றிய குளிர்ச்சியையும் அழகையும் முகந்து முகந்து உண்கின்றன.

ஒரு கிழவர் மனத்தில் இந்தத் திருப்திக்கு இடையே மின் வெட்டுப்போல ஒரு பழைய ஞாபகம் பளிச்சென்று தோன்றியது. அகத்தே தோன்றிய அந்தக் காட்சியையும் புறத்தே கண்ட அவ்விரு காதலருடைய காட்சியையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். "என்ன ஆச்சரியம்! தெய்வ சக்தி எவ்வளவு ஆச்சரியமானது!" என்று கூறி வியக்கின்றார்.

காதலர் தம் வழியே செல்கின்றனர். அந்தக் கிழவர் சிறிது நேரம் இப்படி ஸ்தம்பித்து நிற்கிறார். உடன் செல்பவர்கள் அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டார்களே ஒழிய அவர் அகத்துள்ளே கண்ட காட்சியை அறியவில்லை.

"என்ன ஆச்சரியத்தைக் கண்டுவிட்டீர்?" என்று ஒருவர் கேட்கிறார்.

"இப்போது போனார்களே; இந்த ஜோடியைப் பார்த்தீர்களா? எவ்வளவு ஒற்றுமையாக, ஸந்தோஷமாக இணைந்து செல்கிறார்கள். இவர்களைக் கண்டவுடனே அந்தக் காட்சி நம் கண்களில் எவ்வளவு ஜில்லென்று படுகிறது. இரண்டு மலர்மாலைகளை ஒன்று சேர்த்துக் கட்டிவைத்தாற்போல அல்லவா இருக்கிறது? ஆனால்..." கிழவர் மறுபடியும் தம் உள்ளக் காட்சியிலே ஈடுபட்டுவிடுகிறார்.

"என்ன, ஆனால்? சீக்கிரம் சொல்லும்" என்று ஆவலாய்க் கேட்கிறார் நண்பர்.

"இவர்களையே நான் எட்டு வருஷத்திற்கு முன் பார்த்திருக்கிறேன். அப்போது இவ்விருவரும் சிறு குழந்தைகள்; படுசுட்டிகள். இந்த இரண்டு பேரும் இவ்வளவு இணைந்து செல்கிறார்களே. அன்றைக்குப் பார்க்கவேண்டும், அந்தக் கோலத்தை: இவன் அவள் தலைமயிரைப் பிடித்து இழுக்கிறான். அவள் இவன் தலைமயிரைப் பிடித்து உலுக்குகிறாள். இந்தச் சண்டையிலே இரண்டு வீட்டுப் பாட்டிமாரும் வந்து விலக்கிப் பார்த்தார்கள். தெருவே கூடிவிட்டது. ஏக அமர்க்களம். குழந்தைச் சண்டை குடும்பச் சண்டையாக மாறிப் பிரமாதமாய்விட்டது. அந்தக் காட்சி என் மனசில் அப்படியே பதிந்திருக்கிறது."

நண்பருக்கு இதில் நம்பிக்கை உண்டாகவில்லை. "அவர்களே இந்த ஜோடியென்பது உமக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்கிறார்.

"ஏன் தெரியாது? அன்று கண்ட முகவெட்டு அப்படியே இருக்கிறதே. நான் எப்படி மறக்கமுடியும்? இப்படி இருப்பார்களென்று சொப்பனத்தில்கூட ஒருவரும் நினைக்கமாட்டார். எல்லாம் தெய்வத்தின் விளையாட்டு."—இப்படிச் சொல்லி நிறுத்துகிறார் கிழவர்.

இது குறுந்தொகையென்னும் சங்க நூலிலுள்ள ஒரு காட்சி. இப்படியே பல வேறு நிலையில் பல வேறு இயல்புகளை விளக்கும் காட்சிகளை அந்தக் காலத்து நூல்களிலே காணலாம்.

இனி, சரித்திரத்திற்கு வருவோம். தமிழ் அரசர்கள், ஜமீன்தார்கள், ஸம்ஸ்தானதிபதிகள் இவர்களின் சரித்திரங்களைத் துப்புத் துலக்கி ஆராய்ச்சிக்காரர்கள் வெளியிடட்டும்; அவர்களோடு வசன எழுத்தாளர்கள் சேர்ந்து அந்தச் சரித்திரத்திலிருந்து விஷயத்தையெடுத்துப் புதிய உருவம் கொடுக்கலாமே. மருதபாண்டியரென்ற ஜமீன்தார் சிவகங்கையில் இருந்துவந்தார். அவரது வீரத்தையும் தர்ம சிந்தையையும் வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் கர்ண பரம்பரையாக வழங்கி வருகின்றன. பாஞ்சாலங் குறிச்சித் தலைவராகிய கட்டபொம்முவின் கதையிலே வீரத்திற்குக் குறைவுண்டா? இவை சில உதாரணங்கள்.

தலைமுறை தலைமுறையாகப் பாட்டிமார்கள் சொல்லி வருகின்ற கதைகளைத் தொகுத்து உருவாக்கினால் அந்தத் தொகுதி எவ்வளவு ருசியுள்ளதாக இருக்கும். நாடோடிக் கதைகளில் இளங்குழந்தைகள்கூடச் சொக்கிவிடுகிறார்களே. வசன இலக்கிய சிருஷ்டியிலே அவற்றிலிருந்து எவ்வளவு சரக்கை எடுத்துக்கொள்ளலாம்?

ஒவ்வோர் ஊரிலும் வழங்கும் பழைய கதைகளுக்குக் கணக்கே இல்லை. காதுடையவர்களும் கருத்துடையவர்களும் இந்தத் துறையில் வேலை செய்ய முற்பட்டால் அது சிறந்த இலக்கியத் தொண்டாக இருக்கும்.

மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாத ஐயரவர்கள் அனுபவத்தில் கிடைத்த ரசமான வரலாறு ஒன்று: ஐயரவர்கள், தூத்துக்குடிக்குப் போயிருந்தபோது மீளவிட்டானென்ற ஊரிலிருந்து ஒரு நண்பர் வந்திருந்தாராம். "உங்கள் ஊருக்கு அந்தப் பேர் வரக் காரணம் என்ன?" என்று ஐயரவர்கள் விசாரித்தார்களாம். அவர் சொல்லத் தொடங்கினார்:—

கம்பர் இந்த வழியே வந்திருந்தபோது ஒரு நாள் விடியற் காலையில் எங்கள் ஊரில ஒரு தோப்பில் தங்கினார். அங்கே சிலர் ஏற்றம் இறைதது மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார்கள். தண்ணீர்ச்சாலைப் பிடிக்கிறவன் பாட்டுப் பாடிக்கொண்டே இறைத்தான். அவனுடைய பாட்டிலே கம்பருடைய கவனம் சென்றது. அதில் மனத்தைப் பறிகொடுத்தவராய் இருக்கும்போது ஏற்றக்காரன் ஒரு புதிய பாட்டைத் தொடங்கினான்.

"மூங்கிலிலை மேலே"

என்று அவன் ஆரம்பித்தான். அதைச் சாவதானமாகப் பாடிவிட்டு,

"தூங்குபனி நீரே"

என்று தொடர்ந்து பாடினான். மறுபடியும் இரண்டையும் திருப்பிச் சொன்னான்:

"மூங்கிலிலை மேலே
தூங்குபனி நீரே"

என்று சொல்லிவிட்டு மீண்டும் பலதடவை அவற்றையே சொன்னான். நடுவில் சால் கணக்கையும் வழக்கம்போல அந்த ராகத்திலேயே கூறினான். பிறகு,

"தூங்குபனி நீரை"

என்று மூன்றாவது அடியை எடுத்தான். அதைத் திருப்பிச் சொல்வதற்குள் போதுமான தண்ணீர் இறைத்தாய்விட்டதனால் ஏற்றத்தை விட்டுவிட்டுப் பாட்டையும் இடையிலே நிறுத்திவிட்டு அக் குடியானவர்கள் போய்விட்டார்கள்.

அந்தப் பாட்டைக் கவனித்துக் கொண்டிருந்த கம்பர் அவன் பாடின மூன்றடிகளையும் ஞாபகப்படுத்திக்கொண்டார்:

"மூங்கிலிலை மேலே—தூங்குபனி நீரே,
தூங்குபனி நீரை..."

என்று பாட்டு அரைகுறையாக நின்றது. ஏற்றம் இறைக்கும் காலைப்பொழுதின் காட்சியை அந்தச் சிறிய பாட்டுப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆனாலும் குறைப்படமாக நின்றது அது. கம்பர் அதன் முடிவு எப்படி இருக்குமென்று சிந்தித்துப் பார்த்தார். அவருக்குத் தட்டுப்படவே இல்லை. அதை முழுவதும் தெரிந்துகொள்ளாமல் அவர் மனம் சமாதானம் அடைவதாக இல்லை.

எப்படித் தெரிந்து கொள்வது? ஏற்றக்காரர்களைத் தேடிச் சென்று கேட்பதற்கு மனம் வரவில்லை. மறுநாள் பார்ப்போமென்று எண்ணி, அடுத்த நாள் விடியற்காலையில் அங்கே வந்தார்.

நல்ல வேளையாக அன்று ஏற்றம் இறைப்பவர்கள் வந்தார்கள். சால் பூட்டியாகிவிட்டது. சால் பிடிப்பவன் கனைத்துக்கொண்டான். கம்பர் காதை நெறித்துக்கொண்டு கேட்டார். 'ஆண்டவனே, இவன் அந்தப் பாட்டையே ஆரம்பிக்கவேண்டும்' என்று கூட வேண்டிக்கொண்டிருப்பார். ஏற்றப் பாட்டு ஆரம்பமாயிற்று.

"மூங்கிலிலை மேலே—தூங்குபனி நீரே"

என்னும் பகுதியை அவன் தன் வழக்கப்படி பாடி முடிப்பதற்குள் கம்பருக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. அடுத்த அடிகூட அவருக்குத் தெரிந்ததுதானே? அதையும் ஏற்றக்காரன் நிதானமாகப் பாடினான்:

"தூங்குபனி நீரை..."

இனிமேல்தான் புதையல் கிடைக்கப் போகிறதென்று கம்பர் ஆவலாய் நின்றார். பாவம்! ஒரு சிறிய பாட்டின் ஓரடியின் அழகு தெரிவதற்கு அவர் ஒருநாள் முழுவதும் காத்திருந்தாரென்றால் அவருடைய ஆசை எவ்வளவு அதிகமாக இருக்கும்!

"தூங்குபனி நீரை..."

என்கிறான் தண்ணீர் இறைப்பவன். "தெரியுமப்பா. மேலே சொல்லு" என்று சொல்லிக் கொள்கிறார் கம்பர். மறுபடியும் தடங்கல் வரக்கூடாதே யென்பது அவர் பிரார்த்தனை.

"தூங்குபனி நீரை
வாங்குகதி ரோனே..."

கம்பர் துள்ளிக் குதித்தார். 'என்ன அழகு! மூங்கில் இலையையும் பனித்துளியையும் கதிரவனையும் பொருத்திக் காட்டும் இதில் எவ்வளவு இயற்கையின் அழகுணர்ச்சி ததும்புகிறது! இந்த அடியை, இந்தப் பாவத்தை, நாம் தலைநோவ யோசித்தோம், வரவில்லையே' என்று எண்ணி அவர் வெட்கமடைந்தார். மேலே, தாம் நினைத்த இடத்திற்குச் செல்ல அவர் மனம் வரவில்லை. அவர் மீண்டும் போய்விட்டார். அவரை மீளவிட்ட இடம் இது. அதனால்தான் மீளவிட்டான் என்ற பெயர் வந்தது.

இவ்வாறு அந்த நண்பர் சொன்னாராம்.

இதைப்போன்ற ரஸமான வரலாறுகளைத் தொகுத்து எழுத எழுத்தாளர்கள் முற்பட்டால், "வசனத்துக்குச் சரக்கு இல்லை" என்று குறைகூறுவது நிச்சயமாக ஒழிந்துவிடும்.

---

* திருச்சிராப்பள்ளி அகில இந்திய ரேடியோவில் 5-2-40-இல் பேசியது; அனுமதியுடன் வெளியிடப்பட்டது.

# : நிர்மலா :

* ஸ்ரீ ப்ரேம்சந்த் *

[கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்த்தது]

[பூர்வகதை: வக்கீல் உதயபானுலாலின் மூத்தபெண் நிர்மலாவுக்கு நடக்கவிருக்கும் விவாகத்தின் செலவு விஷயமாக அவருக்கும் அவர் மனைவி கல்யாணிக்கும் சச்சரவு ஏற்படுகிறது. வக்கீல் தம் மனைவிமீது கோபங்கொண்டு அவளுக்குத் திகில் உண்டுபண்ண இரண்டுநாள் தலை மறைவாக இருக்க எண்ணி, இரவில் வெளியே உலாவச் செல்கிறார். தெருவில், விடுதலையான குற்றவாளி யொருவனால் கொல்லப்படுகிறார்.]

(சென்ற இதழ் 253-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அத்தியாயம் 3

## பாலசந்திரரின் வீடு

விதவையின் புலம்பலையும் அநாதைகளின் அழுகையையும் கேட்டு வாசகர்களின் மனம் துன்புறுமாதலால் அவற்றை விவரிக்க எனக்கு மனமில்லை. யார்மீது விடிகிறதோ அவர்கள் அழுகிறார்கள், புலம்புகிறார்கள், மூர்ச்சை போகிறார்கள். இது ஒன்றும் புதிய விஷயமல்ல. ஆனால் ஒன்று: 'நானேதான் என் பிராணநாதனைக் கொன்றவள்' என்ற நினைவினால் கல்யாணி எவ்வளவு கொடிய மனத்துயரத்தை அனுபவித்தாளென்பதை நீங்கள் வேண்டுமானால் ஊகித்தறியலாம். கோபாவேசத்தில் அவள் வாயினின்றும் வெளிவந்த கட்டுக்கு மீறிய அச் சொற்கள், இப்போது அவளது இருதயத்தை அம்புகளைப்போல் பிளந்தன. அவள் கணவன் அலறி அலறி அவள் மடியிலேயே பிராணனை விட்டிருந்தால், 'நாம் அவருக்காக நமது கடமையைச் செய்தோம்' என்று ஒரு விதத்தில் ஆறுதலடைந்திருப்பாள். சோகத்தினால் பீடிக்கப்பட்ட இருதயத்துக்கு அதைவிடப் பெரிய ஆறுதல் வேறு என்ன வேண்டும்? 'என் கணவர் என்னிடம் சந்தோஷத்தோடு போனார்; கடைசி வரையில் அவருடைய இருதயத்தில் என்பால் அன்பு நிறைந்திருந்தது' என்று எண்ணினாலே ஒரு பெரிய திருப்தி உண்டாகிறதல்லவா? இந்தத் திருப்தி கல்யாணிக்கு இல்லை. 'ஐயோ! என் இருபத்தைந்து வருடத் தவம் வீணாகிவிட்டதே! கடைசி நேரத்தில் நான் என் கணவரின் அன்பை இழந்தேனே! நான் அவ்வளவு கடுமையாகப் பேசாமல் இருந்திருந்தால், அவர் இரவில்

வெளியே சென்றிருக்கமாட்டாரே! அவர் மனத்தில் என்ன என்ன எண்ணங்கள் உதித்தனவோ?' என்று அவள் நினைப்பாள். அவருடைய எண்ணங்களைக் கற்பனை செய்தும், தன் குற்றத்தைப் பெரிதாக்கியும் அவள் நாள் முழுதும் வருந்தி வந்தாள். தன் பிராணனாக மதித்துவந்த குழந்தைகளைக் காண்பதே இப்போது அவளுக்கு வெறுப்பாய்விட்டது. அவர்களைக் கண்டாலே அவளுக்குப் பிடிப்பதில்லை. 'அவர்கள்தாமே நான் கணவருடன் சண்டையிடுவதற்குக் காரணமாயிருந்தவர்கள்? அவர்களே என் பகைவர்' என்று அவள் கருதினாள்.

அறுபது நாழிகையும் கச்சேரிபோல் கலகலப்பாயிருந்த அந்த வீடு இப்போது சூனியமாகிவிட்டது. அந்தக் கூட்டமே இப்போது போய்விட்டது. சாப்பாடு போடுபவனே இல்லாதபோது சாப்பிடுபவர்கள் எப்படி இருப்பார்கள்? மெல்ல மெல்ல ஒரு மாதத்திற்குள் அண்ணன் பிள்ளைகள், தங்கை பிள்ளைகள் எல்லோரும் போய்விட்டனர். 'நாங்கள் தண்ணீருக்குப் பதிலாக ரத்தத்தைக் கொடுப்பவர்கள்' என்று சொல்லிவந்தவர்களெல்லோரும், யாருடனும் சொல்லாமல், போனவிடமே தெரியாமல், பாய்ந்து ஓடினார்கள். உலகமே மாறிவிட்டது. எந்தக் குழந்தைகளைக் கண்டமாத்திரத்தில் முன்பு அன்பு சுரந்ததோ, அவைகளின் முகத்தில் இன்று ஈயாடவில்லை. அந்தப் பொலிவு இப்போது எங்கேதான் போய்விட்டதோ!

சோகத்தின் வேகம் சற்றுத் தணிந்தவுடனே, மீண்டும் நிர்மலாவின் கலியாணப் பேச்சுத் தொடர்ந்தது. "இந்த வருஷம் கல்யாணத்தை நிறுத்திவைக்கலாம்" என்று சிலர் யோசனை கூறினார்கள். ஆனால் கல்யாணியோ, "இவ்வளவு ஏற்பாடுகள் செய்த பின்பு கல்யாணம் நடக்காவிட்டால், இவையெல்லாம் வீண்தானே? அடுத்த வருஷம் மறுபடி இவ்வளவு ஏற்பாடுகள் நடக்குமென்ற நம்பிக்கையோ இல்லை. கல்யாணம் நடத்திவிடுவதுதான் நல்லது. கொடுக்கல் வாங்கலென்னவோ ஒன்றுமில்லை. விவாகத்திற்கு வருபவர்களின் மரியாதைக்கு வேண்டிய சாமான்களோ தயாராக இருக்கின்றன. இதில் இனித் தாமதம் செய்தால் நஷ்டந்தான்" என்று கூறிவிட்டாள். ஆதலால் ஸ்ரீமான் பாலசந்திரருக்குத் துக்கச் செய்தியோடு இந்தச் செய்தியும் அனுப்பப்பட்டது. கல்யாணி கடிதத்தில் பின்வருமாறு வரைந்தாள்:

"இந்த அனாதையின் மீது அருள்கூர்ந்து அமிழ்ந்து போகும் எங்கள் ஸம்ஸாரப் படகைக் கரை சேர்ப்பியுங்கள். என் கணவரின் மனத்தில் பெரிய பெரிய எண்ணங்கள் இருந்தன. ஆனால் இறைவன் வேறு விதமாகச் சங்கற்பித்து

விட்டான். இனி என் அவமானமும் உங்களுடையதே. நிர்மலா இனி உங்கள் பெண்ணுகிவிட்டாள். உங்களுக்கு நான் மரியாதை செய்யப்பெறுவது என் பாக்கியமாகும். ஆனுல் அதில் என்ன குற்றங்குறைகள் நேர்ந்தாலும் என் நிலைமையை நோக்கி மன்னிக்கவேண்டும். தாங்கள் இந்த அனுதையை நிந்தைக்கிடமாக விடமாட்டீர்களென்று நம்புகிறேன்.''

கல்யாணி இந்தக் கடிதத்தைத் தபாலில் போடவில்லை. புரோகிதரை அழைப்பித்து, ''தங்களுக்குச் சிரமந்தான். ஆனுல் தாங்கள் நேரில் சென்று இந்தக் கடிதத்தை அவரிடம் கொடுத்து என் சார்பாக வணக்கத்துடன், 'எவ்வளவு குறைவாக மனிதர்கள் வந்தாலும் நல்லது' என்று சொல்லுங்கள். இங்கே ஏற்பாடுகள் செய்யத் தக்க மனிதர்கள் இல்லை'' என்று கூறி அவரிடம் கடிதத்தைக் கொடுத்தாள்.

புரோகிதர் மோடேராம் இந்தச் செய்தியை எடுத்துக் கொண்டு மூன்ரும் நாள் லக்னௌ போய்ச் சேர்ந்தார்.

மாலை வேளை. பாபு பாலசந்திரர் ஹாலின் முன்னுல் சாய்வு நாற்காலியில் அங்கவஸ்திரங்கூட இல்லாமல் அமர்ந்து, ஹுக்கா பிடித்துக்கொண்டிருந்தார். மிகப் பருமனுன சரீரம்; நல்ல உயரம். நிறமோ, இவர் கோயிலின் மூலபிம்பமோ அல்லது ஆப்பிரிக்காவிலிருந்து பிடித்து வரப்பட்ட நீக்ரோவோ என்று சொல்லும்படி இருந்தது. தலையிலிருந்து கால்வரையில் ஒரே நிறந்தான்—கறுப்பு! 'நெற்றி எங்கு முடிகிறது? தலை எங்கு ஆரம்பிக்கிறது?' என்று அறிந்துகொள்ள முடியாதபடி ஒரே கறுத்த முகம். குயிலே உருவெடுத்து வந்தது என்றுதான் சொல்லவேண்டும். வேர்வை அவரை எப்போதும் தொந்தரவுபடுத்தி வந்தது. இரண்டு ஆட்கள் நின்றுகொண்டு பங்கா போட்டுக்கொண்டிருந்தபோதிலும், வேர்வை இடைவிடாமல் ஓடிக்கொண்டே இருந்தது. கலால் இலாகாவில் அவர் ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் பெரிய உத்தியோகத்தில் இருந்தவர். கண்ட்ராக்டர்களிடமிருந்து நிறைய லஞ்சம் வாங்குவார். அவர்கள் அவரைத் திருப்திப்படுத்தினுல் போதும்; தண்ணீரைக் கள்ளென்று சொல்லி விற்றாலும், இருபத்து நான்கு மணிநேரமும் கடைகளைத் திறந்து வைத்திருந்தாலும் கேட்பவர் இல்லை. அவருடைய சந்தோஷத்தில்தான் சட்டம் முழுவதும் அடங்கியிருந்தது. நிலவொளியில் பார்த்தால்கூட ஜனங்கள் அயர்ந்து போவார்கள்; பெண்களும் குழந்தைகளும் மாத்திரமல்ல, ஆண்களும் கூடத்தான்; அப்படிப்பட்ட பயங்கர மூர்த்தி அது. நிலவொளி என்று கூறியது எதற்காக வென்றுல்,

இருட்கறுக்கில் அவரைக் காணவே முடியாது; அவரது கருமை இருளோடு கலந்துவிடும். கண்களின் நிறம் மாத்திரம் சிவந்திருந்தது. அவர் தவறாமல் ஐந்து தடவை மதுபானம் செய்வார். 'சும்மா வந்தால் சிற்றப்பனுக்கு ஒன்று'; போதாக் குறைக்கு அவர் கலால் உத்தியோகஸ்தர். எவ்வளவு வேண்டுமானாலும் குடிக்கலாம். தடுப்பார் இல்லை. தாகம் எடுக்கும்போதெல்லாம் கள் குடிப்பார். சில நிறங்கள் ஒன்றுக்கொன்று ஒற்றுமைப்படுவதுபோலவே, சில நிறங்கள் ஒன்றோடொன்று வேற்றுமைப்படும். செம்மையோடு கலந்தால் கருமை இன்னும் அதிகப் பயங்கரமாகி விடுகின்றது.

பண்டிதரைப் பார்த்தவுடனே பாபு நாற்காலியிலிருந்து எழுந்து, "ஓ! தாங்களா? வாருங்கள், வாருங்கள்! இவ்வளவு தூரம் தாங்கள் வந்ததே பெரும் பாக்கியம்!—யாரடா அங்கே! எங்கே போனார்கள் எல்லோரும்? சகடு, குர்தீன், சகௌடி, பவானீ, ராம்குலாம்—யாருமா இல்லை? எல்லோரும் யமலோகத்துக்குப் போய்விட்டார்களா என்ன? அடே ராம்குலாம்! பவானீ! சகௌடி! குர்தீன்! சகடு! - என்னடா இது! யாருமே பேசவில்லையே? எல்லாருமா ஒழிந்துபோய் விட்டார்கள்? டஜன் கணக்காக ஆசாமிகள்; சமயத்தில் எவனும் தலை காட்டமாட்டான். எங்கேதான் இவர்களெல்லாம் போவார்களோ! ஐயாவுக்கு ஒரு நாற்காலி கொண்டு வந்து போடடா" என்றார்.

பாபு இந்த ஐந்து பேர்களையே திருப்பித் திருப்பிக் கூப்பிட்டாரே யொழிய விசிறி வீசுவோருள் ஒருவனை அனுப்ப அவரால் முடியவில்லை. மூன்று நான்கு நிமிஷங்கள் கழித்து, ஓர் ஒற்றைக் கண் ஆசாமி லொக்குலொக்கென்று இருமிக்கொண்டே வந்து, "இந்தச் சம்பளத்தில் என்னால் பிழைக்கமுடியாது. எவ்வளவு தான் கடன் வாங்கித் தின்பது? உங்களைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போயிற்று" என்றான்.

**பாலசந்திரர்:** சும்மா உளறாதே! போய் ஐயாவுக்கு ஒரு நாற்காலி கொண்டு வந்து போடு. ஏதாவது வேலை சொன்னால் அழுகைதான். என்ன பண்டிதர்வாள்! எல்லாரும் சௌக்கியந்தானே?

**மோடேராம்:** சௌக்கியம் ஏது, பாபுஜீ? குடிதான் முழுகிப் போயிற்றே!

இதற்குள் அந்தப் பரிசாரகன் ஓர் உடைந்த சாதிக்காய்ப் பெட்டியைக் கொண்டுவந்து வைத்து, "நாற்காலி என்னால் தூக்க முடியவில்லையே" என்றான்.

பண்டிதர் வெட்கத்துடன் 'பெட்டி உடைந்து போகாமலிருக்க வேண்டுமே' என்று பயந்துகொண்டே அதன்மீது உட்கார்ந்தார். கல்யாணியின் கடிதத்தை அவர் பாபுவின் கையில் கொடுத்தார்.

பாலசந்திரர்: ஐயோ! பாபு உதயபானுலாலின் குடி இப்படியா முழுகவேண்டும்? இதைவிட வேறு ஆபத்து என்ன வேண்டும்? அவர் என்னுடைய பழைய சிநேகிதர். மனிதர் தங்கமானவர். என்ன தாராளம்! என்ன தைரியம்! (கண்களைத் துடைத்துக் கொண்டு) அவர் போனது என் வலது கையே போய்விட்டது போலிருக்கிறது. நீங்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள்; இந்தச் சமாசாரம் கேட்டதிலிருந்து எனக்கு உலகமே இருண்டு போயிற்று. சாப்பிட உட்கார்ந்தால் ஆகாரம் உள்ளே இறங்குவதேயில்லை. அவருடைய உருவம் கண்முன்னே நிற்கிறது. இலையைத் தொட்டுவிட்டு எழுந்துவிடுகிறேன். எந்த வேலையிலும் மனம் செல்லவில்லை. என் சகோதரன் இறந்திருந்தால் கூட எனக்கு இத்தனை துன்பம் இராது. மனிதன் தங்கமென்றால் தங்கம்!

மோடேராம்: இப்போது அந்தப் பட்டணத்தில் அவரைப் போன்ற பெரிய மனுஷரே இல்லை.

பாலசந்திரர்: எனக்குத் தெரியாதா, பண்டிதர்வாள்! நீங்கள் சொல்லவேண்டுமா? அப்படிப்பட்ட மனிதன் லக்ஷம் இரண்டு லக்ஷம் பேர்களில் ஒருவன்தான் தேறுவான். நான் அவரைத் தெரிந்துகொண்ட அவ்வளவு யாருமே அறிய முடியாது. இரண்டு மூன்று தடவைகள் அவருடன் பேசியதிலேயே அவருடைய பக்தனாகிவிட்டேன். சாகும் வரையில் அப்படியே இருப்பேன். தாங்கள் சம்பந்தி அம்மாளிடம் சொல்லுங்கள்—என் மனத்தில் எவ்வளவோ துக்கம்.

மோடேராம்: இது தங்களிடமிருந்து நாங்கள் எதிர்பார்த்தது தான். தங்களைப்போன்ற நல்லவர்கள் கிடைப்பதே அரிது. இல்லாவிட்டால் இந்தக் காலத்தில் வரதக்ஷிணையில்லாமல் எவன் தன் பிள்ளைக்குக் கல்யாணம் செய்கிறான்?

பாலசந்திரர்: பண்டிதர்வாள், இப்படிப்பட்ட சத்தியவாதிகளிடமா வரதக்ஷிணை கேட்பது? இவர்கள் சம்பந்தம் கிடைப்பதே நமக்கு லக்ஷம் ரூபாயாயிற்றே! நான் இதை என் பெரும் பாக்கியமென்றே கருதுகிறேன். ஆஹா! எவ்வளவு தாராளமான இருதயம்! பணத்தை அவர் துரும்பாகக்கூட மதிப்பவரல்லவே! இது கெட்ட வழக்கம்; மிகக் கொடியது. எனக்கு அதிகாரம் இருந்தால் வரதக்ஷிணை வாங்குபவர்கள், கொடுப்பவர்கள் எல்லோர்மீதும்

குண்டு போட்டுப் பொசுக்கிவிடுவேன்! இல்லாமலென்ன, ஐயா! கட்டாயம் குண்டு வீசிவிடுவேன்; அப்புறம் என்னைத் தூக்கில் தான் இடட்டுமே! ஏன் ஐயா, நான் கேட்கிறேன்: நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்விக்கிறீர்களா அல்லது அவர்களை விற்கிறீர்களா? உங்களுக்குப் பிள்ளையின் கல்யாணத்தில் நிறையச் செலவழிக்கவேண்டுமென்ற எண்ணமிருந்தால், குஷாலாகச் செலவழியுங்கள்; ஆனால் செய்வதை நீங்கள் உழைத்துச் சம்பாதித்த பணத்தில் செய்யவேண்டும். பெண்ணைப் பெற்றவனது கழுத்தை அறுப்பது நியாயந்தானா, ஐயா? அது நீசத்தனம்; கொடிய நீசத்தனம். எனக்கு அதிகாரமிருந்தால், இந்தப் பாவிகளையெல்லாம் சுட்டுக் கொன்று விடுவேன்!

மோடேராம்: நீங்கள் பாக்கியசாலி. ஈசுவரன் தங்களுக்கு நல்லறிவு அளித்திருக்கிறான். இது தங்கள் தர்மத்தின் மஹிமை. விவாகம் அந்த முகூர்த்தத்திலேயே நடந்துவிடவேண்டுமென்று யஜமானியம்மாள் விரும்புகிறாள். மற்ற விஷயங்களெல்லாம் கடிதத்திலேயே எழுதப்பட்டிருக்கின்றன. தாங்கள் கரையேற்றினால் தான் நாங்கள் கரையேறுவோம். விவாகத்தில் எத்தனை பேர் வந்தாலும் நாங்கள் மரியாதை செய்யத் தயாராயிருக்கிறோம். ஆனால் இப்போது நிலைமை கொஞ்சம் மாறியிருக்கிறது. மேலெடுத்துப் போட்டுக்கொண்டு காரியங்களைச் செய்பவர் எவரும் இல்லை. வக்கீலின் கீர்த்திக்குக் குறைவு வராதபடி தாங்கள் எது செய்தாலும் சரிதான்.

பாலசந்திரர் ஒரு நிமிஷம் கண்ணை மூடித் திறந்தார். பிறகு ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே, "அந்த லக்ஷ்மி என் வீட்டில் வர வேண்டுமென்று கடவுளுக்குத் திருவுள்ளமில்லை. இல்லாவிட்டால் இப்படியா இடி விழும்? என் மனக்கோட்டைகளெல்லாம் சிதறிப் போயின. 'இப்படிப்பட்ட நல்ல தருணம் வாய்த்திருக்கிறதே' என்று சந்தோஷத்தினால் பூரித்துப் போயிருந்தேன். இறைவன் எல்லாவற்றையும் கெடுக்கச் சங்கற்பம் கொண்டிருந்தானென்பது எனக்கு எப்படித் தெரியும்? இறந்தவருடைய ஞாபகமே என்னை அழச்செய்யப் போதுமானது. அந்தப் பெண்ணைப் பார்த்தாலோ என் மனப்புண் இன்னும் அதிகமாகிவிடும். அந்த நிலைமையில் நான் என்ன செய்வேனோ, யாருக்குத் தெரியும்? இதைத் தாங்கள் குணமென்றாவது சொல்லுங்கள், தோஷமென்றாவது சொல்லுங்கள்; ஒருவருடன் ஒரு முறை எனக்கு நெருங்கிய பழக்கம் ஏற்பட்டுவிட்டால் அப்புறம் அந்த மனிதர் என் மனத்தை விட்டு அகல்வதே இல்லை. இப்போதோ அவருடைய உருவம் என் கண் முன்னால் நிற்பதோடு இருக்கிறது. அந்தப் பெண்ணும் இங்கு

வந்துவிட்டால், பிறகு நான் பிழைப்பதே அரிதாகிவிடும். உண்மையில், அழுது அழுது என் கண்கள் அவிந்துவிடும். 'அழுவது வீண். இறந்தவர் திரும்பி வரமாட்டார். பொறுமையோடு இருப்பதைத் தவிர்த்து வேறு உபாயமில்லை' என்பது எனக்குத் தெரியும். ஆயினும் என் மனம் கேட்காது. அந்த அனாதைப் பெண்ணைக் கண்டு என் நெஞ்சு வெடித்துப்போகும்.

மோடேராம்: தாங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. வக்கீல் போய்விட்டாலென்ன? நீங்கள் இல்லையா? இனி நீங்களே அப்பெண்ணின் தந்தை. இப்போது அவள் வக்கீலின் பெண்ணல்ல; தங்கள் பெண். உங்கள் மனத்தில் இருப்பது யாருக்கும் தெரியாது. 'வக்கீல் போய்விட்டவுடனே தம் வாக்கை மீறிவிட்டார்' என்று தான் ஜனங்கள் சொல்லுவார்கள். இதில் தங்களுக்குக் கெட்ட பெயர் வரும். மனத்தைச் சாந்தப்படுத்திக் கொள்ளுங்கள். சந்தோஷமாகப் பெண்ணுக்கு மணம் செய்வியுங்கள். யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன். லக்ஷம் ஆபத்துக்கள் வரட்டுமே; யஜமானியம்மாள் தங்களுடைய மரியாதையில் ஒரு குறைவும் நேர விடமாட்டாள்.

பண்டிதர் மோடேராம் புத்தகப்படிப்பில் மாத்திரமன்றி விவகாரத்திலும் கெட்டிக்காரரென்பதைப் பாபு தெரிந்துகொண்டு விட்டார். "பண்டிதர்வாள்! சத்தியமாய்ச் சொல்லுகிறேன்: அந்தப் பெண்ணின்மீது எனக்கு இருக்கும் அன்பு என் பெண்ணினிடம் கூட இல்லை. ஆனால் ஈசுவரனுக்கே அது சம்மதம் இல்லாதபோது, நம் வசத்தில் என்ன இருக்கிறது? இந்தச் சாவு இறைவனிடமிருந்து நமக்குக் கிட்டிய ஓர் அமங்களச் செய்தியே என்று நான் கருதுகிறேன். இது இனி வரப்போகும் ஒரு விபத்துக்கு அறிகுறியாகும். இறைவன் நம்மிடம், 'இந்தக் கல்யாணத்தினால் நன்மை உண்டாகாது' என்று தெளிவாகச் சொல்லுகிறான். இந்த நிலையில் நீங்களே சற்று யோசியுங்கள்: இந்தச் சம்பந்தம் எவ்வளவு உசிதமானது? நீங்களோ வித்வான். கவனித்துப் பாருங்கள்: அமங்களத்தில் ஆரம்பிக்கும் காரியம் மங்களத்தில் முடியுமா? இல்லை; தெரிந்திருந்தும் தீயில் குதிக்க யாருக்குத்தான் மனம் வரும்? நீங்கள் சம்பந்தியம்மாளிடம் காரண காரியங்களையெல்லாம் விவரமாகச் சொல்லுங்கள். நான் அந்த அம்மாளுடைய கட்டளையை நிறைவேற்றத் தயாராயிருக்கிறேன். ஆனால் இதன் முடிவு நன்றாயிராது. தன்னலத்துக்காக நான் என் நண்பனின் சந்ததிக்குத் தீங்கிழைக்க விரும்பவில்லை" என்று கூறி நிறுத்தினார் அவர்.

இந்தத் தர்க்கம் பண்டிதரைப் பதில் பேச வழியில்லாமற் செய்துவிட்டது. மாற்றே இல்லாத ஓர் அம்பை வாதி அவர்மீது

தொடுத்துவிட்டான். பகைவன் அவருடைய ஆயுதத்தைக் கொண்டே அவரைத் தாக்கிவிட்டான். அதற்கு மறு மாற்று அவரிடம் இல்லை. அவர் வேறு பதில் கூற யோசித்துக்கொண்டிருக்கையிலேயே, பாபு தம் வேலைக்காரர்களைக் கூப்பிடலானார்: "அடே! மறுபடியும் எல்லாரும் தொலைந்து போனீர்களா?—அடே சகடு, சௌடீ, பவானீ, குர்தீன், ராம்குலாம்! யாரும் பேசவில்லையே! எல்லாருமா செத்துப்போய்விட்டார்கள்? அடே! பண்டிதருக்குக் கொஞ்சம் நீர்மோர் கொண்டுவா. யார் இவர்களோடு சதா மாரடிப்பது? கொஞ்சங்கூடப் புத்தி கிடையாது. 'என்னடா, ஒரு மனிதர் வெகு தூரத்திலிருந்து களைத்து வந்திருக்கிறாரே; அவரை விசாரிப்போம்' என்பது கிடையாது. நீர்மோர் கொண்டுவாடா கொஞ்சம்!—பண்டிதர்வாள், உங்களுக்கு 'ஷர்பத்' தயார் செய்யச் சொல்லட்டுமா? அல்லது ஏதாவது 'ஸ்வீட்' (தித்திப்புப் பண்டம்) வரவழைக்கட்டுமா?"

மோடேராமுக்குத் தித்திப்புப் பண்ட விஷயத்தில் நிபந்தனையே கட்டோடு பிடிக்காது. நெய் பட்டாலே எல்லா வஸ்துக்களும் பவித்திரமாகி விடுமென்பது அவருடைய கொள்கை. ரஸகுல்லாவும் கடலைமாவு லட்டும் அவருக்கு மிகப் பிரியமானவை. ஆனால் 'ஷர்பத்' பிடிக்காது. தண்ணீரினால் வயிற்றை நிரப்புவது அவருடைய வழக்கத்துக்கு மாறானது. சங்கோசத்துடன், "'ஷர்பத்' குடிப்பது வழக்கமில்லை. 'ஸ்வீட்' ஏதாவது வரவழைத்தால் தேவலை" என்றார்.

பாலசந்திரர்: நெய்யில் செய்த 'ஸ்வீட்'தானே?

மோடேராம்: அதெல்லாம் எப்படியிருந்தாலும் பரவாயில்லை.

பாலசந்திரர்: அதுதான் சரி. எச்சில் தீட்டு என்று சொல்வதெல்லாம் சுத்த 'ஹம்பக்'. நான் இவைகளையெல்லாம் ஒப்புக்கொள்ளுவதில்லை. அடே சௌடீ! பவானீ! குர்தீன்! ராம்குலாம்! யாராவது வாயைத் திறந்தால்தானே?

இப்போதும் அதே பரிசாரகன் இருமிக்கொண்டே வந்தான். "என் சம்பளத்தைத் தீர்த்துக் கொடுத்து விடுங்கள், ஐயா! இந்த வேலை நம்மாலே முடியாது. எவ்வளவுதான் ஓடி ஓடி வேலை செய்வது? ஓடியோடிக் காலே ஒடிந்து போயிற்று" என்றான் அவன்.

பாலசந்திரர்: வேலை செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி; சம்பளம் முதலில் உனக்குத் தீர்த்துக் கொடுத்துவிடவேண்டும்! நாள் முழுதும் உட்கார்ந்து இருமிக்கொண்டிரு. சம்பளத்துக்கென்ன? அதன் பாட்டுக்கு உயர்ந்துகொண்டே இருக்கிறது!

போய்க் கடையிலிருந்து இந்த ஐயாவுக்கு ஓரணுவுக்கு நல்ல 'ஸ்வீட்'டாய்ப் பார்த்து வாங்கிக்கொண்டு வா. ஓடிப் போ!

வேலையாளுக்கு உத்தரவு கொடுத்துவிட்டுப் பாபு உள்ளே சென்று தம் மனைவியிடம், "அங்கிருந்து ஒரு பண்டிதர் இந்தக் கடிதம் கொண்டுவந்திருக்கிறார். படித்துப் பார்" என்றார்.

அவர் மனைவியின் பெயர் ரங்கீலீபாய். அவள் நிறம் சிவப்பு. எப்போதும் சிரித்த முகம். அழகும் இளமையும் அவளிடமிருந்து விடைபெற்றுச் சென்றுகொண்டிருந்தபோதிலும், அன்புள்ள நண்பன்போல, முப்பது வருஷங்களாகப் பழகியவளை விட்டுப் பிரிய அவைகளுக்கு மனம் வரவில்லை.

ரங்கீலீபாய் வெற்றிலை மடித்துக்கொண்டிருந்தாள். "'அங்கே விவாகம் செய்ய எங்களுக்கு இஷ்டமில்லை' என்று சொல்லிவிட்டீர்களல்லவா?" என்றாள்.

**பாலசந்திரர்:** சொல்லிவிட்டேன். ஆனால் சங்கோசத்தினால் வாயிலிருந்து சொற்களே வெளிவரவில்லை. இல்லாத பாசாங்கெல்லாம் செய்யவேண்டியிருந்தது.

**ரங்கீலீபாய்:** உள்ளதைத் தெளிவாகச் சொல்வதில் சங்கோசமென்ன? நம் இஷ்டம்; கலியாணம் செய்யவில்லை. யாரிடமாவது ஏதாவது வாங்கிக்கொண்டிருக்கிறோமா? மற்றோர் இடத்தில் பத்தாயிரம் ரொக்கமாகக் கிடைக்கும்போது அங்கே ஏன் செய்யக்கூடாது? அவர்கள் பெண்ணுக்கு என்ன, பொன்முலாம் பூசியிருக்கிறதா? வக்கீல் உயிரோடு இருந்தாலும் சங்கோசப்பட்டுக்கொண்டேயாவது பதினைந்து அல்லது இருபதினாயிரம் கொடுத்துவிட்டுச் சாவார். இப்போது என்ன கிடக்கிறது அங்கே?

**பாலசந்திரர்:** ஒரு தடவை சொல்லிவிட்டு வார்த்தை தவறுவது நல்லதன்று. யாரும் வாயைத் திறந்து சொல்லாவிட்டாலும் நமக்குக் கெட்ட பெயர் வந்தே தீரும். ஆனால் எல்லாம் உன் பலவந்தந்தான்.

ரங்கீலீபாய் வெற்றிலையை மென்றுவிட்டுக் கடிதத்தைத் திறந்து படித்தாள். பாபுவுக்கு ஹிந்தியில் அடியோடு பயிற்சி இல்லை. ரங்கீலீபாய் புத்தகங்கள் படிப்பது அபூர்வமானாலும், அவளுக்குக் கடிதங்கள் வாசிக்கத் தெரியும். முதல் வரியைப் படித்தவுடனே அவள் கண்களில் நீர் ததும்பியது. கடிதம் முடிந்தவுடனே கண்ணீர் தாரை தாரையாகப் பெருகத் தொடங்கியது. கடிதத்தின் ஒவ்வொரு சொல்லும் கருணாரஸத்தில் தோய்ந்திருந்தது. ஒவ்வோர் எழுத்தும் எழுதியவளின் ஏழைமையை விளக்கியது. ரங்கீலீபாயின் நெஞ்சம் கல்லைப்போன்றதன்று; அனல்

பட்டவுடனே உருகும் அரக்குப் போன்றது. மனத்தில் கருணையைத் தோற்றுவிப்பனவாகக் கல்யாணி எழுதிய அந்தச் சொற்கள் தன்னலம் நிறைந்த ரங்கிலீபாயின் இருதயத்தை உருக்கிவிட்டன. தொண்டையில் ஏதோ அடைக்க அவள், "அந்தப் பிராமணன் இன்னும் இங்கேதானே உட்கார்ந்திருக்கிறான்?" என்று கேட்டாள்.

பாலசந்திரர் மனைவியின் கண்ணீரைக் கண்டதும் சோர்ந்து போய்விட்டார். 'நாம் இந்தக் கடிதத்தை இவளிடம் காட்டியதே பிசகு. இதைக் காட்டியிருக்க வேண்டிய அவசியந்தான் என்ன?' என்று தம்மீதே அவர் சினம்கொண்டார். அவர் இதற்கு முன்பு எப்போதும் இவ்வளவு பெரிய பிழை செய்ததில்லை. "ஒருவேளை உட்கார்ந்திருந்தாலும் இருக்கலாம். நான் அப்போதே அவனைப் போகச் சொல்லிவிட்டேன்" என்று குழம்பிக்கொண்டே அவர் சொன்னார். ரங்கிலீபாய் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். பண்டிதர் மோடேராம் கொக்கைப்போல் தியானத்தில் ஆழ்ந்தவராய்க் கடைப்பக்கம் நோக்கிக் கொண்டிருந்தார். பேராவலினால் தூண்டப்பட்டவராய்க் கால்களையும் கைகளையும் இங்கும் அங்கும் அசைத்துக் கொண்டிருந்தார் அவர். 'ஓர் அணுவுக்கு ஸ்வீட்' என்று சொன்னவுடனே அவருடைய ஆசையில் மண் விழுந்தது. அதிலும் இவ்வளவு தாமதம் ஏற்படுவது எவ்வளவு பயங்கரமான நிலை! அவர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்த ரங்கிலீபாய், "அதோ இன்னும் அந்தப் பிராமணன் உட்கார்ந்திருக்கிறான். 'நாங்கள் கட்டாயம் விவாகம் செய்கிறோம்' என்று சொல்லிவிடுங்கள். பாவம்! பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறாள்" என்றாள்.

பாலசந்திரர்: நீ சில சமயங்களில் குழந்தையைப்போல் பேசுகிறாய். இப்போதுதான் அவனிடம் கல்யாணம் செய்ய இஷ்டமில்லையென்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அதற்கு ஒரு பெரிய பீடிகை போடவேண்டியிருந்தது. மறுபடியும் போய் வேறு மாதிரி சொன்னால் அவன் மனத்தில் என்ன நினைக்கமாட்டான்? சற்று யோசித்துப் பார். இதெல்லாம் கல்யாண விஷயம். குழந்தைகளின் விளையாட்டா என்ன, இப்போது 'சரி' என்றும் பின்பு 'இல்லை' என்றும் சொல்வதற்கு? இது பெரிய மனிதர்கள் பேசும் பேச்சு; விளையாட்டல்ல.

ரங்கீலீ: நீங்கள் உங்கள் வாயினால் ஒன்றும் சொல்ல வேண்டாம். அந்தப் பிராம்மணனை இங்கே அனுப்பிவிடுங்கள். உங்கள் வார்த்தையும் கெடாமல், என் வார்த்தையும் கெடாமல் நான் அவனிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன். இதில் உங்களுக்கு ஒன்றும் ஆக்ஷேபம் இல்லையே?

பாலசந்திரர்: உன்னைத் தவிர மீதி உலகமெல்லாம் மூடமென்று நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய். நீ சொன்னால் என்ன? நான் சொன்னால் என்ன? எல்லாம் ஒன்றுதானே? ஒரு தடவை நிச்சயமாகச் சொல்லிவிட்டது சொல்லிவிட்டதுதான். மறுபடியும் அதைப்பற்றி நான் பேசமாட்டேன். அங்கே வேண்டாமென்று நீதானே அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தாய்? உன்னால்தான் என் வார்த்தையை மாற்றும்படி யாயிற்று. இப்போது மறுபடியும் நீ பேச்சை மாற்றுகிறாயே. உன் இஷ்டப்படி நான் ஆடவேண்டுமா? என்னுடைய மானம் அவமானத்தைப்பற்றி நீ கொஞ்சமாவது யோசிக்கவேண்டாமா?

ரங்கீலீ: அந்த விதவை இவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டாளென்பது எனக்குத் தெரியுமா என்ன? கணவனின் சொத்தையெல்லாம் அவள் மறைத்து வைத்திருக்கிறாளென்றும், ஏழையென்று சொல்லிப் பாசாங்கு செய்து காரியத்தைச் சாதித்துக்கொள்ள விரும்புகிறாளென்றும், பொல்லாத பெண்களில் பொறுக்கி யெடுத்தவளென்றும் நீங்கள்தானே என்னிடம் சொன்னீர்கள்? நான் அதை நம்பினேன். நன்மை செய்துவிட்டுத் தீமை செய்வதில் வெட்கமும் சங்கோசமும் உண்டாகும். தீமை செய்த பின்பு நன்மை செய்வதில் சங்கோசம் எதற்கு? நீங்கள் 'ஆம்' என்று சொல்லிவிட்டு வந்து, நான் 'இல்லை' என்று சொல்லி யிருந்தால் உங்கள் சங்கோசம் நியாயமானதுதான். 'இல்லை' என்று சொன்ன பின்பு 'ஆம்' என்று சொன்னால் அதில் நமக்குப் பெருமைதானே?

பாலசந்திரர்: உனக்கு அது பெருமையாகத் தோன்றலாம். எனக்கோ அது நீசத்தனமென்றே தோன்றுகிறது. தவிரவும் வக்கீலின் மனைவி விஷயத்தில் கூறியவையெல்லாம் பொய் என்பதை நீ எவ்வாறு கண்டறிந்தாய்? இந்தக் கடிதத்தைப் பார்த்தா? உன்னைப் போலவே எல்லாரும் சாதுக்களாயிருப்பார்களென்று நீ நினைக்கிறாய்.

ரங்கீலீ: இந்தக் கடிதத்தில் கொஞ்சங்கூடக் கிரித்திரிமமே இல்லை. கிரித்திரிம வார்த்தையா யிருந்தால் மனத்தில் தைக்காது. அதன் செயற்கை வாசனை கட்டாயம் வீசியே தீரும்.

பாலசந்திரர்: கிரித்திரிம வார்த்தைகளுக்கு முன்பு உண்மை வார்த்தைகள் எம்மாத்திரம்? அவைதாம் உண்மை மொழிகளை விட நன்றாக மனத்திற் பதியும். கதைப் புத்தகங்களைப் படித்துவிட்டு நீ மணிக்கணக்காக அழ உட்கார்ந்து விடுகிறாயே; அந்தக் கதைகள், கட்டுரைகள் எழுதுவோரெல்லாம் உண்மையைத்தான்

எழுதுகிறார்களோ? அவர்கள் வெறும் பொய்க்கதையைக் கட்டி விடுகிறார்கள். இதுவும் ஒரு கலை.

**ரங்கீலீ:** நீங்கள் என்னையே ஏமாற்றுகிறீர்களே! உங்கள் வார்த்தையைச் சிறிது ஒப்புக்கொண்டதனாலேயே நீங்கள் என்னை முழு முட்டாளாக்கிவிடமுடியாது. உங்களுடைய ஒவ்வொரு நரம்பின் அசைவும் எனக்குத் தெரியுமே? உங்கள் துர்க்குணத்தை என்மீது சுமத்திவிட்டு நீங்கள் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறீர்கள். நான் சொல்வது பொய்யா? நீங்களே சொல்லுங்கள்: வக்கீல் உயிருடன் இருந்தபோது, 'வரதக்ஷிணையைப்பற்றி நிச்சயம் செய்யவேண்டிய அவசியமென்ன? அவரே எவ்வளவு உசிதமோ அவ்வளவு கொடுத்து விடுவார். நாம் கேட்காமல் இருந்தால் இன்னும் அதிகங்கூட வரும்' என்று நீங்கள் யோசனை சொல்லவில்லையா? இப்போது அவர் இறந்தவுடனே பல பாசாங்குகள் கூறுகிறீர்கள். இதுவா நல்ல மனிதருக்கு அடையாளம்? இதுதான் நீசத்தனம். இந்தக் குற்றமும் உங்கள் தலையில்தான் சாட்டப்படவேண்டும். இனி நான் இந்தக் கல்யாண விஷயத்திலேயே தலையிட்டுக் கொள்ளவில்லை. உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள். தூர்த்தர்களைக் கண்டாலே எனக்கு வெறுப்பாயிருக்கிறது. எது சொன்னாலும் ஸ்பஷ்டமாகச் சொல்லவேண்டும்; அது நல்லதாயிருந்தாலும் சரி; தீதாயிருந்தாலும் சரி. 'சொல்லுவது ஒன்று; செய்வது ஒன்று' என்னும் கொள்கை உங்களுக்கு அழகாயில்லை. இப்போதாவது கல்யாணம் செய்யப்போகிறீர்களா இல்லையா? சொல்லுங்கள்.

**பாலசந்திரர்:** நான்தான் நாணயமற்றவன், ஏமாற்றுபவன், பொய் சொல்பவனாகிவிட்டேனே? என்னை ஏன் கேட்கவேண்டும்? ஆனால் மனிதர்களின் சுபாவத்தைக் கண்டுபிடிப்பதில் உன் சாதுரியமே சாதுரியம்! இந்த வித்தையைக் கற்றுக்கொள்ள இனி எல்லாரும் உன்னிடத்தில்தான் பிச்சையெடுக்கவேண்டும்!

**ரங்கீலீ:** ரொம்ப நாணயமுள்ளவர்தான்! இன்னுமா உங்களுக்கு வெட்கம் வரவில்லை? மறைக்காமல் சொல்லுங்கள். நான் உங்கள் மனத்தில் உள்ளதைச் சரியாக ஊகித்துக் கொண்டேனா இல்லையா?

**பாலசந்திரர்:** போடீ போ! ஆண்களை அறியும் சக்தி வாய்ந்த பெண்கள் வேறு யாராவது இருப்பார்கள். இதுவரையில் நான் பெண்களின் பார்வை மிகக் கூர்மையானதென்றே கருதியிருந்தேன். ஆனால் இன்று அந்த நம்பிக்கை போய்விட்டது. பெண்களின் விஷயத்தில் பெரியோர்கள் கூறிய உண்மையை நான் ஒப்புக்கொள்ளும்படியாகிவிட்டது.

ரங்கீலீ: கொஞ்சம் கண்ணுடியில் பாருங்களேன், உங்கள் முகத்தை! என் ஆணே. கொஞ்சம் பாருங்கள், அசடு வழிவதை!

பாலசந்திரர்: நிஜமாகச் சொல். எவ்வளவு அசடு வழிகிறது?

ரங்கீலீ: ஒரு பெரிய மனுஷனுடைய திருட்டுத்தனம் வெளியாகி விட்டால், அவன் முகத்தில் எவ்வளவு அசடு வழியுமோ அவ்வளவுதான்!

பாலசந்திரர்: சரி, வழிந்தால் வழிகிறது. ஆனுல் கல்யாணம் அங்கே நடக்காது.

ரங்கீலீ: எனக்கு என்ன வந்தது? நீங்கள் எங்கே வேண்டுமானுலும் நடத்துங்கள். ஏன், புவனனை ஒரு வார்த்தை கேட்டு விட்டால்தான் என்ன?

பாலசந்திரர்: சரி. அவன் சொல்வதுதான் தீர்ப்பு.

ரங்கீலீ: நீங்கள் அவன் வாயில் கோலிடக் கூடாது.

பாலசந்திரர்: நான் அவனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. அவ்வளவுதானே?

நல்ல வேளையாகப் புவனமோஹனும் அதே சமயத்தில் அங்கு வந்து சேர்ந்தான். அவ்வளவு அழகும், அமைப்பும், வலிவும் வாய்ந்த இளைஞனைக் காலேஜ்களில் காண்பது அரிது. தாயையே உரித்துக்கொண்டு வந்திருந்தான். அதே சிவப்பு நிறம்; மெல்லிய ரோஜா இதழ்கள் போன்ற அந்த உதடுகளே; அகன்ற அதே மண்டை; பெரிய பெரிய அந்தக் கண்களே. உருவமாத்திரம் தகப்பனுருடையது. நீண்ட 'கோட்', 'ப்ரீசெஸ்', 'டை', 'பூட்ஸ்', 'ஹாட்' எல்லாம் அவன் அழகுக்கு ஏற்றனவாயிருந்தன. கையில் ஒரு 'ஹாக்கி' மட்டை இருந்தது. நடையில் இளமையின் கர்வமும், கண்களில் தற்பெருமையும் காணப்பட்டன.

"இன்று ஏன் இவ்வளவு நேரம்? இதோ பார்: உன் மாமியாரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. இப்போது கூடப் பிசகில்லை. நன்ருக ஸ்பஷ்டமாகச் சொல்லி வேண்டிய நேரம் இருக்கிறது. விடு: உனக்கு அங்கே கல்யாணம் செய்து கொள்வதில் இஷ்டமா, இல்லையா?" என்று வினவினுள் ரங்கீலீபாய்.

புவனமோஹன்: செய்து கொள்ளத்தான் வேண்டும், அம்மா! ஆனுல் நான் செய்துகொள்ளமாட்டேன்.

ரங்கீலீ: ஏன்?

புவன: நிறையப் பணம் அகப்படும் இடமாகப் பார்த்துக் கல்யாணம் செய்துவை. குறைந்தது ஒரு லக்ஷமாவது கிடைக்க வழியிருக்கவேண்டும். அங்கே இப்போது என்ன இருக்கிறது?

வக்கீல்தான் போய்விட்டாரே. கிழவியினிடம் இப்போது என்ன இருக்கப் போகிறது?

ரங்கீலீ: இம்மாதிரி பேச உனக்கு வெட்கமாயில்லையா?

புவன: இதில் வெட்கமென்ன, அம்மா? ரூபாய் என்ன கசக்குமா? லக்ஷம் ரூபாய் என்றால் லக்ஷம் ஜன்மங்களில் கூடச்



சேர்க்க முடியாதே? இத்த வருஷம் பாஸாகிவிட்டால், பிறகு குறைந்தது ஐந்து வருஷங்கள் வரையில் ரூபாயின் முகத்திலேயே விழிக்கமுடியாது. பின்பு மாதம் நூறு அல்லது இருநூறு ரூபாய் சம்பாதிப்பேன். ஐந்நூறு அல்லது அறுநூறு வரையில் எட்டு

வதற்குள் என் வாழ்க்கையில் முக்கால் பாகம் கழிந்துவிடப் போகிறது. இந்த லக்ஷணத்தில் எப்படி ரூபாய் சேர்க்கமுடியும்? உலகத்து இன்பங்களையும் சிறிது அனுபவிக்கவேண்டாமா? ஒரு பணக்காரப் பெண் கிடைத்தால், சுகமாகக் காலம் தள்ளலாம். எனக்கு அதிகம் வேண்டாம். ஒரு லக்ஷம் ரொக்கமாகக் கிடைத்தால் போதும்; அல்லது ஒரு பெண்ணுக்குத் தாயான பணக்கார விதவை மாமியாராயிருந்தாலும் சரி.

ரங்கீலீ: மனைவி எப்படியிருந்தாலும் பரவாயில்லை!

புவன: பணம் எல்லாக் குறைகளையும் மறைத்துவிடும், அம்மா. கறக்கும் மாடு முட்டத்தானே செய்யும்?

பாபு அவனை ஆதரிக்கும் முறையில், "அவர்கள் மீது எங்களுக்கும் அனுதாபந்தான்; அவர்களுக்கு விபத்து வரும்படி ஈசன் விதித்தானே என்று துக்கந்தான். ஆனால் நம் அறிவைக் கொண்டல்லவா ஒரு விஷயத்தைத் தீர்மானிக்கவேண்டும்? நாம் ஒன்றுமில்லாமல் உடுத்த துணியோடு போனாலும் நிறையப் பேர் விவாகத்துக்கு வந்துவிடுவார்கள். அங்கே சாப்பாட்டுக்கே வழியில்லை. உலகம் சிரிப்பதைத் தவிர வேறு ஒரு லாபமும் இராது" என்றார்.

ரங்கீலீ: நீங்கள் அப்பாவும் பிள்ளையும் ஒரு மண்தானே? இரண்டுபேரும் சேர்ந்து அந்த ஏழைக் குழந்தையின் கழுத்தை அறுத்துவிடுங்கள்.

புவன: ஏழையாயிருப்பவர்கள் ஏழைகளோடுதானே அம்மா, சம்பந்தம் செய்துகொள்ளவேண்டும்? தம் அந்தஸ்தை மீறி—

ரங்கீலீ: சும்மாயிருடா! பெரிய அந்தஸ்தைக் கண்டவன் நீ! நீ அப்படிப் பெரிய கோடீசுவரனோ? ஓர் ஆசாமி வீட்டு வாசலில் வந்தால் அவனுக்கு ஒரு லோடா தண்ணீர் கொடுக்க உன்னால் முடியாது; பெரிய அந்தஸ்துக்காரனைப் விட்டாய்! போடா போ!

இவ்வாறு கூறிவிட்டு ரங்கீலீபாய் அங்கிருந்து எழுந்து சமையலுக்கு ஏற்பாடுகள் செய்யப் போய்விட்டாள். புவனமோஹன் புன்சிரிப்புடன் தன் அறையில் நுழைந்தான். பாபுவோ மீசையை முறுக்கிக்கொண்டே, முடிவான தீர்மானத்தை மோடேராமுக்குத் தெரிவித்துவிட வேண்டுமென்று வெளியே வந்தார். ஆனால் அவரை அங்கே காணவில்லை.

மோடேராம் சிறிது நேரம் வரையில் வேலைக்காரனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் வெகு நேரமாகியும் அவன் வராமற் போகவே, 'இங்கே அமர்ந்திருந்தால் வேலை நடவாது. ஏதாவது செய்யத்தான் வேண்டும். விதியை நம்பி இங்கே கை

கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தால் பட்டினியாகச் சாகவேண்டி யதுதான். நம் பாச்சாவெல்லாம் இங்கே பலிக்காது' என்று யோசித்து, அவர் பேசாமல் தடியை எடுத்துக்கொண்டு வேலைக் காரன் போனவழியே நடந்தார். கடை கொஞ்சதூரத்தில் தான் இருந்தது. ஒரு நிமிஷத்தில் அங்கே போய்ச் சேர்ந்துவிட்டார். பரிசாரகக் கிழவன் அங்கே மிட்டாய்க் கடையில் புகை பிடித்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் அவர் சிறிதும் சங்கோச மின்றி, "என்னப்பா! இன்னும் ஒன்றும் தயாராகவில்லையா, என்ன? அங்கே உன் யஜமானர் நீ எங்கேயாவது கள் குடிக்கப் போயிருப்பாயென்று கோபித்துக் கொண்டிருக்கிறார். 'அப்படி ஒன்றும் இராது. கிழ மனிதன், பாவம்! வருவதில் கொஞ்சநேரம் பிடிக்கும்' என்று நான் சொன்னேன். ரொம்ப அற்புதமான ஆசாமி அவர்! அவரிடத்தில் வேலைக்காரர்கள் எப்படித்தான் நிலைத்திருக்கிறார்களோ!" என்று போட்டார் ஒரு போடு.

**பரிசாரகன்:** என்னைத் தவிர இங்கே வேறு எவனும் நிலைத்த தில்லை. ஒரு வருஷமாக இன்னும் சம்பளம் கொடுக்கவில்லை. யாருக்கும் சம்பளமே கொடுப்பதில்லை. சம்பளம் கேட்டால் அதட்டல்தான். பாவம், வேலைக்காரர்கள் வேலையை விட்டுவிட்டுப் போகவேண்டியதுதான். பங்கா போடுகிறார்களே, அந்த இரு வரும் சர்க்கார் வேலையாட்கள். சர்க்கார் ஆட்களானதனால், அவர்கள் அங்கேயே விழுந்து கிடக்கிறார்கள். நானும் அதுதான் யோசிக்கிறேன். மாவுக்குத் தக்க பணியாரம்! பத்து வருஷங்கள் கழிந்துவிட்டன. இன்னும் ஒன்றிரண்டு வருஷங்கள் இப்படியே கழிந்து போகும்.

**மோடேராம்:** அப்படியானால், நீ ஒருவன்தானா வேலைக் காரன்? எத்தனையோ வேலைக்காரர்களின் பெயர்களைச் சொல்லிக் கொண்டிருந்தாரே?

**பரிசாரகன்:** அவர்கள் எல்லோரும் இந்த இரண்டு மூன்று மாதங்களில் வந்து வேலையை விட்டுவிட்டுப் போனவர்கள். அவர் தம் பெருமையைக் காண்பிப்பதற்காக அவர்களின் பெயர்களையே இதுவரையில் ஜபித்துக்கொண்டிருக்கிறார். எனக்கு எங்கேயாவது ஒரு வேலை பார்த்துக் கொடுங்கள். தங்களோடு வரலாமா?

**மோடேராம்:** வேலைக்கு என்ன அப்பா குறைவு? இந்த நாட் களில் பரிசாரகன் தேடினால்கூட அகப்படுவதில்லை. நீயோ பழகிய மனிதன். உனக்கு வேலை கிடைக்காமல் என்ன?—சாப்பிடுவதற்கு அங்கே ஏதாவது நல்ல வஸ்து இருக்கிறதா? 'பொங்கல் செய்யச்

சொல்லட்டுமா? அல்லது ரொட்டி சாப்பிடுகிறீர்களா?' என்று என்னைக் கேட்டார். 'பாவம்! அவன் கிழவன். இரவு எனக்காகச் சமைப்பது அவனுக்குக் கஷ்டமாய் இருக்கும். நான் கடைக்கே போய் ஏதாவது சாப்பிட்டுவிடுகிறேன். அதைப் பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்' என்று நான் பதில் சொன்னேன். 'பரிசாரக னும் கடையில்தான் இருப்பான். போங்கள்' என்று சொன்னார்.— என்ன கடைக்காரரே, ஏதாவது புது வஸ்து இருக்கிறதா? லட்டு புதிதுபோல் இருக்கிறதே; ஒரு சேர் நிறுத்துக் கொடும், ஐயா! அங்கேயே மேலே வந்து விடலாமல்லவா?

இவ்வாறு சொல்லிக்கொண்டே மோடேராம் கடையில் போய் உட்கார்ந்து வயிறு நிறையப் புசித்தார். இரண்டரை அல்லது மூன்று சேர் 'ஸ்வீட்' சாப்பிட்டிருப்பார். சாப்பிட்டுக்கொண்டே கடைக்காரனைப் புகழ்ந்துகொண்டிருந்தார்: "உங்கள் கடையின் பெயரைப் போலவே உங்கள் வஸ்துவும் நன்றாயிருக்கிறது. பனாரஸ் காரர்களுக்கு இவ்வளவு நன்றாக 'ரஸகுல்லா' செய்யத் தெரிய வில்லை. 'கலாகந்த்' அவர்கள் நன்றாகச் செய்கிறார்கள்; ஆனால் இது வும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. பண்டங்களைக் கொட்டினால் மாத்திரம் நல்ல வஸ்துவாகிவிடுமா? இதுவும் ஒரு வித்தைதான்.

**கடைக்காரன்:** இன்னும் கொஞ்சம் வாங்கிக் கொள்ளுங்கள். கொஞ்சம் எள்ளுருண்டைகள் என் சார்பாக வாங்கிக் கொள்ளுங்கள்.

**மோடேராம்:** எனக்கு இஷ்டம் இல்லை. இருந்தாலும் ஒரு கால் சேர் கொடுங்கள்.

**கடைக்காரன்:** கால் சேர் எந்த மூலைக்கு? நல்ல வஸ்து; அரைச் சேர் வாங்கிக் கொள்ளுங்கள்.

இப்படியாகத் தம் இஷ்டப்படி சாப்பிட்டுவிட்டுப் பண்டிதர், சிறிது நேரம் கடைத்தெருவெல்லாம் சுற்றித் திரிந்தார். ஒன்பது மணி அடிக்கும்போது வீட்டுக்குத் திரும்பிவந்தார். வீடு நிச்சப்த மாயிருந்தது. உள்ளே ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவர் திண்ணையில் படுக்கையை விரித்துப் போட்டுத் தூங்கி விட்டார்.

மோடேராம் காலையில் தம் வழக்கப்படியே சுமார் எட்டு மணிக்கு எழுந்திருந்தபோது, பாபு அங்கே உலாவுவதைக் கண்டார். பண்டிதர் எழுந்துவிட்டதைக் கண்டு அவர் நமஸ்காரம் செய்து, "என்ன பண்டிதர்வாள்! ராத்திரி எங்கே போய்விட்டீர்கள்? இரவு வெகு நேரம் வரையில் உங்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். உணவுக்கு வேண்டிய சாமான்கள் வெகு நாழிகை வரையில்

தயாராக வைக்கச் சொன்னேன். தாங்கள் வராமற் போகவே உள்ளே எடுத்துவைக்கச் செய்தேன். தாங்கள் ஏதாவது சாப்பிட்டீர்களா, இல்லையா?'' என்றார்.

மோடேராம்: மிட்டாய்க் கடையில் ஏதோ கொஞ்சம் சாப்பிட்டேன்.

பாலசந்திரர்: ரொட்டியிலும் பருப்பிலும் இருக்கும் சுவை பூரியிலும் மிட்டாய்களிலும் ஏது? பத்துப் பன்னிரண்டணுக்கள் செலவழித்திருப்பீர்கள். வயிறும் நிரம்பி இராது. தாங்கள் என் விருந்தாளி. எவ்வளவு செலவழிந்ததோ, வாங்கிக் கொள்ளுங்கள்.

மோடேராம்: அந்த மூலையில் இருக்கிறனே, தங்கள் கடைக்காரன்; அவன் கடையில்தான் சாப்பிட்டேன்.

பாலசந்திரர்: எவ்வளவு பணம் கொடுத்தீர்கள்?

மோடேராம்: எல்லாம் உங்கள் கணக்கில் எழுதச் சொல்லியிருக்கிறேன்.

பாலசந்திரர்: எவ்வளவுக்கு வாங்கினீர்களோ என்னிடம் சொல்லிவிடுங்கள். இல்லாவிட்டால் கடைக்காரன் என்னை ஏமாற்றி விடுவான். சுத்த மோசக்காரன் அவன்!

மோடேராம்: சுமார் இரண்டரைச் சேர் மிட்டாயும், அரைச் சேர் எள்ளுருண்டையும் இருக்கும்.

பாபு விழி பிதுங்கப் பண்டிதரைப் பார்த்தார். அது அவருக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது. ஒரு மாதம் முழுவதற்கும் சேர்த்து அவர் கணக்கு மூன்று சேருக்குமேல் ஆகாது. இந்தப் பெரியவரோ ஒரே வேளையில் நான்கு ரூபாய்ச் சரக்கைத் தீர்த்துவிட்டார். இன்னும் ஒன்றிரண்டு நாட்கள் இருந்தால், வீடு குட்டிச் சுவராக வேண்டியதுதான். வயிறு, வண்ணுன் சாலா? மூன்று சேர்! என்னடா இது அக்கிரமம்!

ஆத்திரம் நிறைந்த அதே நிலையில் அவர் உள்ளே சென்று மனைவியினிடம், "கேட்டாயா சமாசாரத்தை! நேற்று வந்தானே, மஹாராஜன்! அவன் மூன்று சேர் மிட்டாயைத் தீர்த்துவிட்டான்! மூன்று சேர்! சேர் நாற்பது தோலா நிறை!'' என்றார்.

ரங்கீலீபாய் ஆச்சரியத்துடன், "அப்படி இராது. மூன்று சேர் எவன்தான் தின்பான்? மனிதனு, மாடா?'' என்றாள்.

பாலசந்திரர்: அவனே மூன்று சேர் என்று சொல்லுகிறுன். நான்கு சேருக்குக் குறைந்து சாப்பிட்டிருக்கமாட்டான்! சேர் நாற்பது தோலா நிறை!

ரங்கீலீ: வயிற்றில் பூதமிருக்கிறதா என்ன?

பாலசந்திரர்: இன்றைக்கு இங்கே இருந்தானனல் ஆறு சேர் விழுங்கிவிடுவான்.

ரங்கீலீ: அவன் இன்று ஏன் இங்கே இருக்கவேண்டும்? கடிதத்துக்குப் பதில் சொல்லி அவனைப் போகச் சொல்லுங்கள். அவன் இங்கே இருப்பதாயிருந்தால் ஸ்பஷ்டமாகச் சொல்லிவிடுங்கள். மிட்டாய் என்ன இனமாகக் கிடைக்கிறதா? பொங்கல் வேண்டுமானல் சமைத்துச் சாப்பிடட்டும். இல்லையானல் அவன் வழியைப் பார்த்துக்கொண்டு போகட்டும். இப்படிப்பட்ட சாப்பாட்டுராமர்களின் வயிற்றை நிரப்புவதனல் கிடைக்கும் முக்தி யாருக்கு வேண்டுமோ அவர்களே அவனுக்குச் சோறு படைக்கட்டும்; நமக்கு அப்படிப்பட்ட முக்தி வேண்டாம்.

பண்டிதர் புறப்படத் தயாராயிருந்தார். ஆதலால் பாபு அவரிடம் தந்திரம் செய்யவேண்டிய அவசியமே நேரிடவில்லை.

"என்ன, புறப்பட்டுவிட்டீர்களா?" என்று பாபு அவரைக் கேட்டார்.

மோடேராம்: ஆமாம்; போய் வருகிறேன். ஒன்பது மணி வண்டி இப்போது கிடைக்குமல்லவா?

பாலசந்திரர்: இன்றைக்கு இருந்துவிட்டுப் போகலாமே?

இதைச் சொன்னவுடனே, 'இவர் எங்கே உண்மையாகத் தங்கிவிடப் போகிருரோ' என்று பாபுவுக்குப் பயம் வந்துவிட்டது. ஆகையால் வாக்கியத்தைப் பூர்த்திசெய்துகொண்டே, "ஆமாம், அங்கே அவர்கள் தங்களை எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள்" என்று முடித்தார் அவர்.

மோடேராம்: ஒன்றிரண்டு நாளானல் ஒன்றும் பாதகம் இல்லை. த்ரிவேணியில் ஸ்நானம் செய்துவிட்டுப் போகலாமென்றுதான் நானும் நினைத்திருந்தேன். ஆனல், நான் சொல்லுகிறேனென்று கோபித்துக் கொள்ளக்கூடாது: உங்களுக்கெல்லாம் முன்போல் இப்போது பிராம்மணர்களிடத்தில் கொஞ்சங்கூடச் சிரத்தையே இல்லை. எங்கள் யஜமானர்கள் எங்கள் கட்டளையை நிறைவேற்றத் தயாராய்க் காத்துக் கொண்டிருப்பார்கள். நாங்கள் அவர்கள் வீட்டுக்குச் சென்றுல், தங்களுக்குப் பாக்கியோதயம் ஆகிவிட்டதாக அவர்கள் கருதுவார்கள். வீடு முழுவதும்—சிறியவர்களிலிருந்து பெரியவர்கள் வரையில்—எல்லோரும் எங்களுக்குப் பணிவிடை செய்வதில் முனைந்து விடுவார்கள். நமக்கு மரியாதையில்லாத இடத்தில் ஒரு க்ஷணம் இருப்பதுகூட நமக்குச் சகிக்காது. பிராம்மணனுக்கு மரியாதையில்லாத இடத்தில் மங்களமுண்டாகாது.

பாலசந்திரர்: நான் என்ன பிழை செய்துவிட்டேன்? கூற வேண்டும்.

மோடேராம்: பிழையா? வேறு என்ன பிழை செய்யவேண்டும்? நீங்கள்தாம் வீட்டில் சென்று சொன்னீர்களே: 'இந்த மஹான் மூன்று சேர் மிட்டாய் விழுங்கிவிட்டார்! சேர் நாற்பது தோலா நிறை!' என்று. நீங்கள் இன்னும் அதிகமாகச் சாப்பிடுபவர்களைப் பார்த்ததேயில்லை. வீசைக் கணக்காக மிட்டாய்கள் தின்று விட்டு ஏப்பமே விடாத மகாபுருஷர்களும் இருக்கிறார்கள், தெரியுமா? மிட்டாய் தின்னவேண்டும், தின்னவேண்டுமென்று எங்களை வேண்டிக் கொள்வார்கள். அதற்காக எங்களுக்கு ரூபாய்கள்கூடக் கொடுப்பதுண்டு. உங்கள் வீட்டு வாசலில் திரியும் பிச்சைக்காரர்களல்ல நாங்கள். உங்கள் பெயரைக் கேட்டு இங்கே வந்தேன். இங்கே சாப்பாட்டுக்கே பஞ்சமென்பது எனக்குத் தெரியாது. சரி, போகட்டும். இறைவன் அருளால் உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும்!

பாபுவின் முகம் சிறுத்துவிட்டது. வாயிலிருந்து பதிலே எழவில்லை. அவர் தமது வாழ்க்கையில் இவ்வித வெருட்டலைக் கேட்டதே இல்லை. எவ்வளவோ பாசாங்குகள் செய்தார். "அது தங்களைப் பற்றிச் சொன்ன வார்த்தையல்ல; வேறு ஒருவருடைய செய்கையைப் பற்றிய பேச்சு" என்று சொன்னார். ஆனால் பண்டிதரின் சினம் தணியவில்லை. அவர் எல்லாவற்றையும் சகித்துக்கொள்வார்; தம் வயிற்றைப் பிறர் நிந்திப்பது மாத்திரம் அவரால் சகிக்க முடியாது. பெண்களின் அழகைப் பழித்தால் அது அவர்களுக்கு எவ்வளவு கசப்பைத் தருகிறதோ, அதைவிட அதிகமான கசப்பைத் தருவது புருஷர்களின் வயிற்றைப் பழிப்பதாகும். பாபு எவ்வளவோ சமாதானம் செய்தார்; ஆனால், 'இவர் இங்கேயே தங்கிவிடப் போகிறாரே' என்ற திகிலுங்கூட அவருக்கு இருந்தது. அவருடைய கஞ்சத்தனம் அம்பலமாகிவிட்டது என்பதில் சந்தேகமே இல்லை. அந்தத் திரையை மீண்டும் மூடவேண்டியது அவசியமாயிருந்தது. தம் லோபித்தனத்தை மறைக்க அவர் எவ்வளவோ பாடுபட்டும் கடைசியில் விதிபோல் நடந்துவிட்டது. 'ஏன் இவர் பேச்சை வீட்டில் எடுத்தோம்? அதிலும் ஏன் உரத்துச் சொன்னோம்?' என்று பச்சாத்தாபப்பட்டார் அவர். 'இந்தத் துஷ்டனும் காதைத் தீட்டி வைத்துக்கொண்டிருந்தான். இனி வருந்துவதில் பயனில்லை. இன்றைக்கு யார் முகத்தில் விழித்தேனோ, இந்த ஆபத்து வந்து சேர்ந்தது. இவன் இந்தச் சமயம் இப்படியே கோபத்துடன் போய்விட்டால், அங்கே சென்று என் பெயரைக் கெடுத்துவிடுவான். என் தந்திரங்களெல்லாம் வெளிப்

பட்டுவிடும். இவன் வாய்க்கு எப்படியாவது பூட்டுப் போட வேண்டும்.'

இவ்வாறு யோசித்துக்கொண்டே, அவர் வீட்டிற்குள் சென்று ரங்கீலீபாயினிடம், "அந்தத் துஷ்டன் நம் பேச்சுக்களைக் கேட்டுவிட்டான். கோபத்துடன் போகிறான்" என்றார்.

ரங்கீலீ: அவன்தான் வாசற்படியில் நிற்கிறானென்று உங்களுக்குத் தெரியுமே. நீங்கள் ஏன் உரக்கக் கத்தினீர்கள்?

பாலசந்திரர்: ஆபத்து வந்தால் அது எப்போதும் தனியாக வராது. அவன் வாசற்படியில் நிற்பது எனக்கு எப்படித் தெரியும்?

ரங்கீலீ: யார் முகத்தில் விழித்தீர்களோ இன்றைக்கு?

பாலசந்திரர்: அந்தத் துஷ்டன்தான் எதிரே படுத்துக்கொண்டிருந்தான். தெரிந்திருந்தால் அவனை எட்டிக் கூடப் பார்த்திருக்க மாட்டேன். இப்போது அவனுக்கு ஏதாவது கொடுத்து அவனைச் சந்தோஷப்படுத்தவேண்டுமே.

ரங்கீலீ: போகட்டுமே! அங்கே கல்யாணமே செய்துகொள்ளாதபோது, அவனைப் பற்றி நமக்கென்ன? என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டும்; எது வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டுமே.

பாலசந்திரர்: அப்படித் தப்பித்துக்கொள்ள முடியாது. ஒரு பத்து ரூபாய் கொடு. அவனுக்குச் சம்பாவனை செய்து அனுப்பிவிட்டு வருகிறேன். இனி அவன் முகத்திலேயே விழிக்க வேண்டாம்.

ரங்கீலீபாய் மிக்க வருத்தத்துடன் பத்து ரூபாய் நோட் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள். பாபு அதைக் கொண்டு போய்ப் பண்டிதரின் திருவடிகளிற் சமர்ப்பித்துவிட்டார். பண்டிதர் தம் மனத்தில், 'அப்படிச் சொல்! இனி நீ என்னை மறக்காதபடி நொறுக்கிவிட்டேன். பத்து ரூபாய் கொடுத்தால் இவன் நம் வசத்தில் வந்துவிடுவானென்று நீ நினைக்கிறாய் போலும்! அப்படி நினைக்கவேண்டாம். உன் வண்டவாளமெல்லாம் எனக்குத் தெரியும்' என்று சொல்லிக் கொண்டார். ரூபாய் நோட்டைப் பையில் செருகிக்கொண்டே ஆசீர்வாதம் செய்துவிட்டுப் பண்டிதர் நடையைக் கட்டினார்.

பாபு வெகு நேரம் வரையில், 'இவன் இன்னும் என்னைக் கஞ்சனென்று கருதுகிறானோ என்னவோ? இல்லை, திரை மறைந்துவிட்டதோ? கடலில் கரைத்த வெல்லம் போல் இந்த ரூபாய் வீணாகாமல் இருக்க வேண்டுமே!' என்று யோசனை செய்துகொண்டே நின்றார்.

(தொடரும்)

# : திரவங்களின் சிறப்பியல்பு :

* ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., *

பதார்த்தங்கள் திடம் திரவம் வாயு வென்னும் மூன்று நிலை களிலே இருக்கின்றன என்பது யாவரும் அறிந்த விஷயம். அந்நிலை களுக்குத் தக்கவாறு அவற்றிற்குச் சில விசேஷ இயல்புகள் உண்டு. திரவ நிலையில் பதார்த்தத்தின் மேற்பரப்பில் தொழிற்படும் சக்தி இவ்வியல்புகளில் ஒன்றாகும். நீர் அடித்து நீர் விலகாது என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். அதற்குக் காரணம் இச்சக்திதான். இச்சக்தியைப் பரப்பு விசுவு என்று சொல்வார்கள். அன்றாட வாழ்க்கையில் தண்ணீரை உபயோகிக்கும்பொழுதெல்லாம் இதைப் பார்க்கலாம். இச்சக்தியை அறிவதற்கு அநேக பரிசோதனைகள் காட்டலாம். திரவப் பரப்பு இழுத்துக் கட்டப்பட்ட ஒரு ரப்பர்த் தோலை ஒத்திருக்கிறதென்றும், சுருங்கும் தன்மையைக் கொண் டிருக்கிறதென்றும் அவைகளிலிருந்து அறியலாம்.

வீடுகளில் உள்ள குழாயை நீர் சொட்டுச் சொட்டாக விழு மாறு திருகிச் சரிப்படுத்துக. ஒவ்வொரு சொட்டும் குழாயின் வாயி னடியில் முதலில் சிறிய அளவில் ஏற்பட்டு, வரவரப் பருமன் அதிகரித்துக்கொண்டே வருவதைக் காணலாம். ஓர் அளவுப் பருமன் அடைந்தவுடன் அச் சொட்டுக் குழாயினின்று விடு பட்டுக் கீழே விழுவதைப் பார்க்கலாம். மேலும் கவனித் தால் ஒவ்வொரு சொட்டும் இதைப்போலவே மிகச் சிறிய அளவில் முதலில் தோன்றி, வரவரப் பருமன் அதிகரித்துக் கொண்டே வந்து, கடைசியில் கீழே விழுவதைக் காணலாம். ஒவ்வொரு முறையும் கீழே விழுவதற்குச் சற்று முன்பாகச் சொட்டுகளெல்லாம் ஒரே பரு மனும் வடிவும் கொண்டிருப் பதையும் காணலாம். இவ்வாறு நிகழ்வதைக் கொண்டு, அச் சொட்டின் மேற்பரப்பு ரப்பர்த் தோலைப்போல் பெருத்துக் கொண்டு வந்து ஒரு நிலையை அடைந்தவுடன் உள்ளிருக்கும்



படம் 1.

திரவத்தின் கனம் தாங்கமாட்டாமல் குழாயின் அடியிலிருந்து விடு பட்டுக் கீழே விழுகின்றது என்று ஊகிக்கலாம். 1-ஆம் படத்தில் நீர்ச் சொட்டுத் தோன்றிப் பருமன் அதிகரித்து வரும் மாதிரி காட்டப்பட்டிருக்கிறது.

மற்ருெரு பரிசோதனையைப் பார்ப்போம். வாய் குறுகலான ஒரு பாத்திரத்தினுள் நீரைப் பெய்யவேண்டியிருப்பதாகக் கொள்வோம். வாயின் பக்கங்களில் படும்படி நீரை ஊற்றிச் சென்ருல், பாத்திரத்தின் பக்க முழுவதும் நனைந்து நீர் உட்செல்லும். பக்கங்களில் படாமல் நிதானமாக நீரை ஊற்றலாம். இம்முறையில் நீரை வேகமாக உட்செலுத்தமுடியாது. அவ்வாறு செலுத்த முயன்ருல் நீர் சேதமாகும். இந்த இரண்டு விதமும் அல்லாமல் வெகு சுலபமாகவும், சீக்கிரமாகவும் பாத்திரத்தை நிரப்பும் விதம் ஒன்று உண்டு. ஒரு கண்ணுடிக் குச்சியை 2-ஆம் படத்தில் கண்டபடி பாத்திரத்தின் வாய்க்குமேல் பிடித்துக்கொண்டு, குச்சியின் மேல் படும்படி நீரை விட்டால், அதன் வழியாகச் சிறிதும் சேதமின்றி நீர் விழுந்து பாத்திரம் நிரம்பிவிடும். குச்சி முதலில் நனைந்து அதன்மீது ஏற்படும் நீர்ப்படலத்தின் பரப்பு விகுவிணுல் இது சாத்தியமாகிறது.



படம். 2.

இன்னுமொரு பரிசோதனை: சிறிய துவாரங்கொண்ட புழை நாளமொன்றைச் செங்குத்தாக நீரில் சிறிதளவு முழுக்கினுல், அதனுள்ளிருக்கும் நீர் வெளிப் பாத்திரத்திலுள்ள நீர் மட்டத்திற்குச் சற்று உயர்ந்து நிற்பதைக்காணலாம். நாளத்தின் உட்புறம் நனைந்து, அதன் வழியாக நீர் ஏறி அத்திரவப் பரப்பு விகுவு தூக்கக்கூடிய நீர் நிறை நிற்கின்றது. வெவ்வேறு துவாரங்கொண்ட நாளங்களில் நீர் வெவ்வேறு மட்டத்தில் நிற்கும். 3-ஆம் படத்தைப் பார்க்க. ஏதேனும் ஒரு நாளத்தில் இருக்கும் நீர் நிறையின் உயரத்தை அளந்து, அத்திரவத்தின் பரப்பு விகுவை ஒரு வாய்பாட்டின் உதவியால் பெறலாம்.

மேலும் ஒரு பரிசோதனையைக் காண்போம்: ஒரு தைக்கும் ஊசியை எடுத்து, அதன்மேல் சிறிதளவு வாஸலின் மெழுகைத் தடவுக. பிறகு அதை ஒரு மையுறிஞ்சும் தாளின் மேல் வைத்து நீர் நிறைந்த ஒரு பாத்திரத்தினுள் மெதுவாகப் போடுக. சிறிது நேரத்தில் தாள் நனைந்து முற்றும் ஊறிப் பாத்திரத்தினடியில் விழுந்துவிடும். ஆனால் ஊசியோ மிதந்து நிற்கும். அது இவ்வாறு மிதப்பதற்கு அத்திரவத்தின் பரப்பு விகுவுதான் காரணமாயிருக்கிறது.



படம் 3.

நீர்ப் பரப்புச் சுருங்கும் இயல்பு கொண்டிருப்பதை அறியச் சில பரிசோதனைகளைக் கூறுவோம்.

ஒரு தூரிகையை நீரினுள் முழுக்கினால் அதன் மயிர்களெல்லாம் விலகிப் படர்ந்திருப்பதைக் காணலாம். நீரிலிருந்து எடுத்தவுடன் மயிர்கள் நெருங்கி ஒட்டிக்கொண்டிருப்பதையும் பார்க்கலாம். 4-ஆம் படத்தைப் பார்க்க. இதற்குக் காரணம்: மயிர்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் நீர், தன் பரப்பைச் சுருக்கிக் கொள்ள முயலுவதால், மயிர்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு குவிந்து நிற்கின்றன.

ஸோப்புக் கரைத்த நீரில் வட்டமாய் வளைந்ததொரு கம்பியை முழுக்கி எடுத்தோமானால் அதில் அதே வடிவுள்ள நீர்ப்படலம் இருப்பதைக் காணலாம். சிறிது நேரம் ஆனவுடன் நீர் வழிந்து படலம் மறைந்துவிடும். இக்கம்பி வளையத்துடன் அதன் ஒரு விட்டத்தின் இரு முனைகளிலும் ஒரு நூலிழையைச் சேர்த்துக் கட்டுக. இப்பொழுது அக்கம்பியை ஸோப்பு நீரில் முழுக்கி எடுத்தால் முன்போல ஒரு படலம் வளையத்தில் இருக்கும். அதன் நடுவில் இந்நூலிழை நெளிந்து மிதக்கும். இப்பொழுது நூலிழைக்கு ஒரு புறத்துள்ள நீர்ப்படலத்தை ஊசியினால் குத்தி மறையச்செய்க.

உடனே நூல் மற்றப் பகுதியினுல் பிருவாக இழுக்கப்பட்டுப் பரப்பு எவ்வளவு குறையக்கூடுமோ அவ்வளவிற்குப் படலம் சுருங்கி



படம் 4.

நிலைத்திருப்பதைக் காணலாம். பின் உள்ள இரண்டு படங்களையும் பார்க்க இது நன்கு விளங்கும் (படம் 5, 6.)

திரவப்பரப்பின் இவ்வியல்புக்கு அணு இயக்க வாதத்தைக் கொண்டு சமாதானம் கூறுகிறுர்கள். பதார்த்தங்களெல்லாம் சின்னம் சிறு அணுக்களா லானவையென்றும், அவ்வணுக்களெல்லாம் நாளுதிசைகளிலும் பல வேறு கதிகளோடு ஓடிக்கொண்டிருக்கின்றன வென்றும் இவ்வாதத்தினுல் அறிகிறேம். திடதிரவ வாயு நிலைகளின் வேற்றுமைக்கு இவ்வணுக்களின் நெருக்க வேற்றுமையே காரணமாகும். அணுக்கள் ஒவ்வொன்றுக்கும் இடையே பரஸ்பரம் கவர்ச்சிச் சக்திகள் தொழிற்படுகின்றன. அணுக்களெல்லாம் ஒன்றேடொன்று மோதுவதால் அவற்றின் கதிகள் மிகுந்தும் குறைந்தும் போகின்றன. இவ்வாறு அடிப்பட்ட அணுக்களில் சில திரவத்தின் மேற்பரப்பை அடைகின்றன. மற்ற அணுக்களின் கவர்ச்சிகளெல்லாம் சேர்ந்து திரவப்பரப்பிலிருந்து வெளி

யோட முயலும் அணுக்களைத் தடுத்து நிறுத்துகின்றன. அதனால் திரவப்பரப்பின் மீதுள்ள எல்லா அணுக்களும் உள்ளே இழுக்கப்



படம் 5.



படம் 6.

படுகின்றன. இதிலிருந்து திரவப்பரப்பானது சுருங்கும் தன்மை வாய்ந்திருப்பதை அறியலாம்.

ஒரு திரவத்தின் மேற்பரப்பில் தொழிற்படும் இச்சக்தியின் பலம் திரவத்திற்குத் திரவம் மாறுபடும். இதை ஒரு பரிசோதனையினால் காட்டலாம். வாய் அகலமாயுள்ள ஒரு வெண்களி அல்லது பீங்கான் தட்டில் சிறிது சிவப்புமை கலந்த தண்ணீரை எடுத்துக் கொள்க. சாராயத்தில் ஒரு கண்ணாடிக் குச்சியை நனைத்து அதன் முனையைத் தட்டின் மத்தியில் உள்ள நீரைத் தீண்டச் செய்க. உடனே நீர் நாலு பக்கங்களிலும் விலகித் தீண்டிய இடம் திட்டாக உலர்ந்து நிற்பதைக் காணலாம். இதை 7-ஆம் படத்தில்



படம் 7.

பார்க்க. இது எவ்வாறு நிகழ்ந்தது என்பதையும் சுலபமாக அறியலாம். கண்ணாடிக் குச்சியுடன் சிறிது சாராயம் தட்டின் மத்தியில்

விழுகிறது. அதனால் அவ்விடத்திலிருந்த தண்ணீர் மற்றவிடங்களிலுள்ள தண்ணீரால் கவரப்படுவதால் அந்த இடம் உலர்ந்து போய் விடுகிறது. சாராயத்தின் பரப்புவிகுவு தண்ணீரின் பரப்பு விகுவைக் காட்டிலும் குறைவாக இருப்பதால் இது ஏற்படுகிறது.

தவிர ஒரு திரவத்தின் பரப்பு விகுவு அதில் ஏதாவது ஒரு பொருளைச் சேர்க்கக் குறைந்துவிடும். இதை ஒரு பரிசோதனையினால் காட்டலாம். சுத்தமாய்க் கழுவிய பாத்திரமொன்றில் தூய்மையான நீரை எடுத்துக் கொள்க. கட்டிச் சூடத்தை ஒரு கத்தியினால் மெல்லிய துணுக்குகளாக நறுக்கி அவைகளில் சிலவற்றை அந்நீரில் போடுக. அத்துணுக்குகள் அங்கும் இங்கும் ஓடுவதைக் காணலாம். இதற்குக் காரணம் யாதெனில் துணுக்குகள் விழுந்த விடத்தில் நீரின் பரப்புவிகுவு குறைந்து விடுகிறது. ஆனால் அதற்குச் சமீபத்திலுள்ள தூய நீரின் விகுவு ஒரே அளவினதாக இருக்கிறது. அதனால் விகுவு குறைந்து நிற்கும் நீரை இழுக்கிறது. அதனுடன் துணுக்கு ஓடுகின்றது. அங்கே சென்றவுடன் அவ்விடத்திலுள்ள நீரின் விகுவு குறைந்துவிடவே மற்றொருபாகம் அதை இழுக்கிறது. இவ்வாறாக அத்துணுக்கு அங்கும் இங்கும் ஓடுகிறது. பொங்குகின்ற கடலில் எண்ணெயை ஊற்றினால் அலைகள் அடங்கிவிடும் என்று சொல்லுவார்கள். இதன் கருத்து என்னவெனில் எண்ணெயை விட்டவுடன் நீரின் விகுவு குறைவதால் கொந்தளிப்பு அடங்கிவிடும் என்பதுதான். இதே தத்துவத்தைக்கொண்டு தற்காலம் கொசுக்களைப் போக்குகிறார்கள். தேங்கி நிற்கும் சாக்கடை முதலிய இடங்களில் உள்ள தண்ணீரில் கொசு முட்டைகள் உற்பத்தி ஆகின்றன. அவைகள் நீரில் மிதந்து நிற்கின்றன. கொசுக்களும் நீரின் மேற்பரப்பின் விகுவினால் தாங்கப்பட்டு உட்கார்ந்திருக்கின்றன. எண்ணெயை விட்டவுடன் நீரின் பரப்பு விகுவு குறைய, முட்டைகளும் கொசுக்களும் நீரில் முழுகி மாய்கின்றன.



## : கண்ணில்லாக் காதல் :

* து. ராமமூர்த்தி *

### 1

**வா**ய்க்காலில் சல சல என்று தண்ணீர் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தது. தண்ணீர்க் கரையில் கூட்டம் கூடியிருந்த தவளைகள் காலடிச் சப்தம் கேட்டு வளைகளில் பதுங்கின. கிருஷ்ணன் தண்ணீரில் இறங்கிக் கைகால் கழுவிக்கொண்டு கரை ஏறினன்.

உச்சி வானத்திலிருந்து சூரியன், "இந்தப் பிரபஞ்சமே என்னுடையது தான்" என்று சொல்லிச் சிரிப்பவன்போல் தன் அக்கினி ஜ்வாலைகளை வீசிக் கொண்டிருந்தான். வாய்க்காலின் இரு பக்கங்களிலும் இருந்த வயல் வெளிகளில் பச்சைப் பசேலென்று வளர்ந்திருந்த நெற்பயிர் காற்றில் அசைந்தாடி ஓர் இனிய ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தது. அடுத்தாற்போல் மேய்ந்து கொண்டிருந்த மாட்டு மந்தையிலிருந்து எப்பொழுதாவது, "அம்மா—வ்!" என்று சப்தம் கேட்கும்.

கிருஷ்ணன் ஒரு மரத்தடிக்குச் சென்று, மரத்தின் மொட்டையான கிளையொன்றில் தொங்கிக்கொண்டிருந்த சோற்று மூட்டையை எடுத்து அவிழ்த்தான். பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அவனுக்குத் திடீரென்று என்னவோ ஞாபகம் வந்தது. எழுந்திருந்து மரத்தில் இருந்த ஒரு வங்கில் கையை விட்டு ஒரு சிறு பொட்டலத்தை எடுத்தான். அதைப் பிரித்து உள்ளே இருந்த எலுமிச்சங்காய் ஊறுகாயைப் பார்த்ததும் அவன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. அவன் மனம் வள்ளிநாயகியைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தது.

வள்ளிநாயகி அந்த ஊர்ப் பண்ணையாரின் மகள். அவர்கள் வீட்டு மாடுகளைத்தான் கிருஷ்ணன் மேய்த்துக்கொண்டிருந்தான். பண்ணையார் போன வருஷந்தான் காலஞ்சென்றார். அவர் மனைவியும் நோயாளி. எழெட்டு வருஷங்களாகவே அவள் முடக்கு வாதம் வந்து நடமாட்டம் இல்லாமல் படுத்த படுக்கையாய் இருந்தாள். 'இந்த அம்மாள் போயிருக்கக் கூடாதா? திடமாய் இருந்த பண்ணை ஐயா ஏன் இப்படித் திடீரென்று சாக வேண்டும்? அவர் நன்றாக இருக்கும்போதே அம்மா போய்ச் சேர்ந்திருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்? இருந்தும் பிரயோஜனமில்லையே...' என்று கிருஷ்ணன் நினைத்தான். அந்த எலுமிச்சங்காய் ஊறுகாய் தேவாமிர்தம் போல் அவனுக்கு ருசித்தது. நாக்கைச் சப்புக்கொட்டிச் சாப்பிட்டான். அவன் அன்று காலை பலபல என்று விடியும் நேரத்தில் பாலைக் கறந்துவிட்டு மாடுகளை அவிழ்த்து மேய்ப்பதற்காக ஓட்டிக்கொண்டிருந்த பொழுது வள்ளிநாயகி, "கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று கூப்பிட்டாள்,

"என் வள்ளியம்மா?" என்று கேட்டுக்கொண்டே கிருஷ்ணன் எதிரில் சென்று நின்றான். வள்ளிநாயகி கையை நீட்டி அவன் கையில் ஒரு காகிதப் பொட்டலத்தை வைத்தாள். "சாப்பிடும்போது திறந்து பாரு" என்றாள். 'இவள் மனசுதான் எப்பேர்ப்பட்ட மனசு! இவ்வளவு நல்ல மனசையும் சொத்துச் சுதந்தரத்தையும் நிலம் நீச்சையும் கொடுத்துவிட்டு, பாவம், பகவான் இவளுக்குக் கண்களை மட்டும் ஏன் பொட்டையாக்கி விட்டான்? அந்தச் சாமி தலையிலே இடி விழ!'

இப்படி அவன் யோசித்துக்கொண்டிருந்தபொழுது அவன் தலையில் லொட் என்று ஒரு சிறு கல் வந்து விழுந்தது. கிருஷ்ணன் திரும்பிப் பார்த்தான். சற்றுத் தூரத்தில் ஒரு பெண் தலையில் ஒரு சோற்று மூட்டையுடன் அவன் பக்கம் பாராமல் வேகமாய் நடந்து போய்க்கொண்டிருந்தாள்.

"ஏ தொரையம்மா!" என்று கிருஷ்ணன் கூப்பிட்டான். அந்தப் பெண் அவன் குரல் காதில் விழாதவள் போல் நடந்தாள்.

"ஏ தொரையம்மா!...ஏ.. அம்மாவ்!"

அந்தப் பெண் நின்றாள்.

"ஏன்; என்னத்துக்குக் கூப்பிடறே?"

"என் தலையில் கல்லைப் போட்டது யாரு?"

"யார் போட்டாங்களோ அவங்கதான் போட்டிருப்பாங்க."

"அது தெரியாதா எனக்கு? இங்கே வா சொல்றேன்."

"என்னத்துக்கு?"

"வாயேன்..."

"சரிதான்; எனக்கு வேலை கிடக்கு. நீ சாப்பிட்டு உக்காந்துண்டு இருக்கே. நான் போவணும். எங்க அப்பா பசியா இருப்பாரு" என்று சொல்லி அவனைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டுத் துரையம்மா நடந்தாள்.

துரையம்மா நல்ல பெண். குழந்தைப் பருவத்திலிருந்து கிருஷ்ணனுக்குத் தெரியும். அவளைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று அவனுக்கு ஆசை. "தொரையம்மாளா? அது அடங்காப் பிடாரி ஆச்சே!" என்பாள் அவன் தாய். தகப்பனுக்கு அவள் செல்லக் குழந்தையாதலால் வீட்டிலே ஒருவருக்கும் அடங்கமாட்டாள். ஆனால் கிருஷ்ணனைக் கண்டால் அவள் பொல்லாத்தனமெல்லாம் அடங்கிவிடும். இப்பொழுது மட்டும் வரவரக் கிருஷ்ணனிடமும் அவள் நடத்தை ஒரு தினுசாக மாறி வந்தது. அவள் இப்பொழுது அவனுடைய கண்ணிலேயே படுகிறதில்லை. பட்டாலும் ஏதாவது சாக்குச் சொல்லிக்கொண்டு ஓடிவிடுவாள். இதெல்லாம் கிருஷ்ணனுக்குப் புரியவில்லை. அந்த வயதிலே பெண்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்பது அவனுக்குத் தெரியாது. 'நம்மைக் கண்டால் பிடிக்காமற் போய்விட்டதா என்ன? என்ன காரணமாய் இருக்கலாம்? எப்ப கட்டிக் கொடுக்கறேன்னு மாமாவைக் கேக்கவேண்டியதுதான்' என்று நினைத்துக்கொண்டான்.

## 2

மேற்கே கண்ணுக்கெட்டின தூரம் வரையில் வயல் வெளிகள். குளுகுளு என்று கண்ணைக் கவரும் பசுமை நிறம். அவற்றின் கோடியில், அடிவானம் பூமியை முத்தமிட்டுக்கொண்டிருந்த இடத்திலே சூரியன் முழுகி மறைந்துகொண்டிருந்தான். மாடுகளின் கழுத்திற் கட்டியிருந்த மணிகள் சப்தித்தன. கிருஷ்ணன் மாடுகளை ஓட்டிக்கொண்டு ஊருக்குத் திரும்பினன்.

பண்ணையார் வீட்டில், மாட்டுத் தொழுவத்துக்குப் பக்கத்தில் வள்ளி நாயகி நின்றிருந்தாள். மாடுகளின் சப்தம் கேட்டு ஒதுங்கி நின்ருள். கண்ணில்லாதவர்களுக்குக் கடவுள் மற்றப் புலன்களில் அதிகமான சக்தியை அளித்திருக்கிருர். பிறப்பிலிருந்து பார்வை இல்லாவிட்டாலும், வள்ளிக்கு வீடு முழுவதும் தாராளமாய்ப் பழகும் வழக்கம் உண்டு. எங்கெங்கே என்ன இருக்கிறது, எங்கெங்கே அடிவைக்க வேண்டும், எந்த எந்தப் பக்கம் திரும்பவேண்டும், எங்கே படிகள் இருக்கின்றன என்பவையெல்லாம் அவளுக்கு நன்ருய்த் தெரியும். மனிதர்கள் அரவம் கேட்டால், காலடிச் சப்தத்திலிருந்து வருகிறது யார் என்று அறிந்துகொள்வாள். மாடுகளுக்குப் பின்னல் வந்த கிருஷ்ணன் சமீபித்ததும், "கிருஷ்ணு!" என்று கூப்பிட்டாள்.

மாடுகளைத் தும்பில் பிணைத்துக்கொண்டே, "என் வள்ளியம்மா?" என்ருன் கிருஷ்ணன்.

"ஊறுகாய் எப்படி இருந்தது?" என்று கேட்பதற்கு அவள் நாக்குத் துடித்தது. ஆனல் வெட்கமாய் இருந்ததால் ஆசையை அடக்கிக்கொண்டு, "வாய்க்காலில் இன்னும் தண்ணீர் ஓடுகிறதா?" என்று கேட்டாள்.

"ஆமாம் அம்மா; இன்னும் முழங்கா முட்டுத் தண்ணி ஓடிக்கிட்டுத்தான் இருக்கு."

வள்ளிநாயகி உலகத்தைப்பற்றி அறிந்திருந்த விஷயமெல்லாம் அவளுக்குக் கிருஷ்ணன் சொல்லித் தெரிந்திருந்ததுதான். அவன் சிறு வயதிலிருந்தே அவர்கள் வீட்டில் மாடு மேய்த்துக்கொண்டு வளர்ந்தவன். வள்ளி குழந்தையாய் இருந்தபோது எப்பொழுது பார்த்தாலும் அவன்தான் அவளைத் தூக்கிக்கொண்டு திரிவான். அவளுக்கு நடக்கத்தெரிந்த பிறகு கையைப் பிடித்துப் பல இடங்களுக்கு அழைத்துக்கொண்டு போவான். அவள் பார்வையற்றவள் என்பது அடிக்கடி அவனுக்கு மறந்துபோய்விடும். திடீரென்று, "வள்ளியம்மா! இதோ பாத்தியா, இந்தச் செடி எவ்வளவு பூத்திருக்கு!" என்பான். இல்லாவிட்டால், "இதோ பாத்தியா கிளி!" என்பான்.

வள்ளி, குரல் வந்த திசையைப் பிடித்துக்கொண்டு தன் முகத்தை நிமிர்த்தி அவன் முகத்தைப் பார்ப்பாள். "பூவா? அது எப்படி இருக்கும், கிருஷ்ணு?" என்பாள்.

பாவம், கிருஷ்ணனைக் கடவுள் நாவன்மையுடைய ஒரு கவியாகப் பிறப்பித்திருந்தால் எவ்வளவு நன்ருய் இருந்திருக்கும்! அவனே படிப்பு வாசனை

கூட அறியாத பட்டிக்காட்டுச் சிறுவன். புஷ்பங்களையும் கனிகளையும் அவன் எவ்வாறு வர்ணித்து வள்ளிக்கு உணர்த்துவான்? மனோகரமான மாலை நேரத்திலே தோட்டத்தினுள் நுழைந்தால் பலவிதமான பட்சிகள் இன்னிசை பாடிக்கொண்டிருக்கும். வள்ளிநாயகியின் காதுகள் அந்த இன்னிசையைப் பருகும். ஆனால் அந்தப் பட்சிகளின் அழகையும், அவை கொஞ்சிக் குலாவி விளையாடும் ஒய்யாரத்தையும் சொற்களின் மூலம் சித்திரங்களாய்த் தீட்டி அவள் மனக் கண்களைப் பிரமிக்கச் செய்யும் வித்தையைக் கிருஷ்ணன் அறியமாட்டான். மலருக்கு மலர் ஓடி விளையாடும் பட்டாம்பூச்சியின் சிறகிலுள்ள வர்ண விசித்திரங்களையே விவரிக்கத் தெரியாத அவனுக்கு, உதய சூரியனின் அழகையும், சூரியாஸ்தமனத்தின் ஜோதியையும், பூர்ண சந்திரனின் எழிலையும் வர்ணிக்க எவ்வாறு முடியும்? ஆகையால், "கிளி எப்படி இருக்கும்?", "நட்சத்திரம் எப்படிப் பிரகாசிக்கும்?", "வானவில் என்றால் என்ன, கிருஷ்ணா?" என்றெல்லாம் வள்ளிநாயகி கேட்கும்போது கொல்லென்று சிரிப்பான். பிறகு தன்னால் முடிந்த வரையில் அவள் கேள்விக்குப் பதில் சொல்ல முயல்வான். மாடுகள் மேய்க்கும் வயற்காட்டைப் பற்றியும், நடுவில் ஓடும் வாய்க்காலைப் பற்றியும் அவன் சொல்லித்தான் வள்ளிநாயகிக்குத் தெரியும்.

"வாய்க்காலில் இன்னும் தண்ணீர் ஓடுகிறது" என்று சொல்லிவிட்டுக் கிருஷ்ணன், "ஊறுகாய் கொடுத்தியே, ரொம்ப நல்லா இருந்ததம்மா" என்றான்.

வள்ளி ஒரு கணம் பேசாமல் நின்றாள். பிறகு, "உங்கம்மா சோறு கட்டிக்கொடுக்கறாளே உனக்கு, வெறுஞ் சோத்தையா கொடுக்கறா, ஊறுகாய்கூட இல்லாமே? வெறுஞ் சோத்தை எப்படித்தான் திங்கறது?" என்றாள்.

"என்ன அம்மா பண்றது? அம்மாவுக்கு வயசாயிட்டுது. ஒண்ணும் பண்ண முடியலே."

"அது வாஸ்தவந்தான். பாவம், கிழவி எத்தனை நாளைக்குத்தான் உழைப்பாள்?"

"அதுக்குத்தாம்மா பாக்கறேன், சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கலாமுண்ணு!"

வள்ளிநாயகியின் ஹிருதயத்தில் திக் என்றது. ஒரு வினாடி அதன் ஓட்டமே நின்றுவிட்டதுபோல் இருந்தது.

"கல்யாணமா? உனக்கா கல்யாணம்? யாரைப் பண்ணிக்கப்போறே?" என்றாள்.

"முத்தையா பிள்ளை இருக்காருல்ல, அவர் பெண்ணு தொரையம்மா இருக்குல்ல—"

அவனை மேலே பேசவிடாமல் வள்ளிநாயகி திடுக்கென்று, "மாடுகளுக்குத் தண்ணி காட்டினியா? வைக்கோலை எடுத்துப் போடு. லக்ஷ்மியை நேற்றுமாதிரி ஈரத்திலே கட்டாதே" என்றாள்.

## 3

கிருஷ்ணன் தன் வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். கறு கறு என்று இருள் கவிந்து உலகத்தை மூடிக்கொண்டது. வானத்திலே மேலண்டைக் கோடியில் பளிச்சென்று ஒரு நட்சத்திரம் தோன்றிக் கண்ணைச் சிமிட்ட ஆரம்பித்தது. "எல்லாருக்கும் முந்தி நான் உதித்துவிட்டேன்" என்று அது பெருமை அடித்துக் கொள்வதுபோல் காணப்பட்டது.

வள்ளிநாயகி மறுபடி வீட்டுக்குள்ளிருந்து மாட்டுத் தொழுவத்தை நோக்கி வந்தாள். பகலும் இரவும் அவளுக்கு ஒன்றுதான். வெளிச்சமாக இருந்தாலும் இருட்டாயிருந்தாலும் அவள் கண்களுக்குமட்டும் உலகம் எப்பொழுதும் அந்தகாரத்தில் ஆழ்ந்ததாகவே இருந்தது. அன்றிரவு அவள் பார்வை மட்டுமென்றி அவள் ஹிருதயமும் இருளுக்கு இருப்பிடமாய்விட்டது. "கிருஷ்ணனுக்குக் கல்யாணம்; கிருஷ்ணனுக்குக் கல்யாணம்" என்று ஓயாமல் அவள் மனம் முணுமுணுத்துக்கொண்டே இருந்தது. பிரபஞ்சத்திலே அவள் மனத்தைப் பாசத்தினால் பிணைத்திருந்த பொருள் கிருஷ்ணன்தான். மற்றவர்கள் கிருஷ்ணனைத் தங்கள் கண்களினால் மட்டுமே பார்த்து அறிந்திருந்தார்கள். வள்ளியோ அவனைத் தன் ஹிருதயத்தினாலேயே பார்த்து அறிந்தவள். தகப்பனாரிடமும் தாயிடமும் அவளுக்கு அதிகத் தொடர்பு இல்லை. அவள் தகப்பனார் தமக்குப் பிள்ளைக் குழந்தை ஒன்று பிறக்க வில்லையே என்று ஏமாற்றமடைந்து எதிலும் அதிகமாக மனத்தைச் செலுத்தாமல் தம் காலத்தை முடித்துக் கொண்டார். தாய்க்கோ பெண் பிறவிக் குருடாய் இருக்கிறதே என்று குறை. அதனால் தாயும் மகளும் ஒருவரை ஒருவர் சரியாக அறிந்து கொள்ளக் கூடவில்லை. அந்த மாட்டுக்காரப் பயல் கிருஷ்ணன் ஒருவன் தான் அந்தக் குருட்டுப் பெண்ணுக்கு ஓர் ஊன்று கோல்போல் வாழ்க்கையில் உதவினான். அவன் தனக்கே சொந்தமானவன் என்று அவள் மனமும் அவனிடம் ஏகபோக உரிமை கொண்டாடும் நிலையை அடைந்திருந்தது. கிருஷ்ணன் ஒரு நாள் கல்யாணம் செய்துகொள்வான், வேறொருத்திக்குச் சொந்தமாய்விடுவான் என்ற எண்ணம் அதுவரை அவள் மனத்தில் தோன்றினதே இல்லை. அந்த உண்மை அன்று அவளுக்கு வெளியானதும் உலகத்தைப்பற்றி அவள் மனத்தில் ஏற்பட்டிருந்த தோற்றமே முழுவதும் மாறிப்போய்விட்டது. அவளைப் பொறுத்தவரையில் என்றுமே உதித்திராத சூரியன் அன்று திடீரென்று அஸ்தமித்துவிட்டான்.

கிருஷ்ணனுக்கு இரண்டாவதாக அவள் மனத்தில் இடம் பெற்றிருந்தது லக்ஷ்மி என்ற பசு மாடுதான். தொழுவத்துக்குள் சென்று லக்ஷ்மியின் அருகில் உட்கார்ந்தாள் வள்ளி. அந்த வாயில்லாப் பிராணி தன் கண்ணில்லா எஜமானியின் உணர்ச்சிகளை அறிந்து கொண்டதுபோல் கழுத்தை நீட்டி அவள் கையை நக்கிற்று. "லக்ஷ்மி, லக்ஷ்மி" என்று முணுமுணுத்துக் கொண்டு வள்ளி அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். அவள் கண்களில்

நீர் துளித்தது. கிருஷ்ணனுடன் தான் விளையாடின விளையாட்டுக்களும், பொழுதைப் போக்கின விதங்களும் ஞாபகத்துக்கு வந்தன:

மாடுகளைக் குளிப்பாட்டுவதற்காக அவளையும் அழைத்துக்கொண்டு கிருஷ்ணன் தோட்டத்துக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருந்த ஆற்றுக்குப் போவான். வள்ளியை ஆற்றங்கரையில் ஒரு மரத்தின் வேரின்மேல் உட்கார வைத்துவிட்டு ஆற்றில் இறங்குவான். ஹை ஹை என்று மாடுகளைத் தண்ணீரில் விரட்டுவான். டபடப என்று தண்ணீரைக் கைகளால் தட்டுவான்; நாலு பக்கமும் வாரி இறைப்பான். மாட்டின் முதுகின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு, "ஆண்டிப் பண்டாரம், உனை, வேண்டிக்கொண்டேனே" என்று சந்தோஷமாய்ப் பாடிக்கொண்டு சவாரி செய்வான். வாயைத் திறவாமல், அவன் உட்காரவைத்த இடத்தில் இருந்துகொண்டு இந்த வேடிக்கைகளையெல்லாம் சிரித்த முகத்துடன் தன் காதுகளினாலேயே கவனிப்பாள் வள்ளி.

பொங்கல் வந்துவிட்டால் கும்மாளந்தான். மாலையில் மாடுகளை அலங்கரித்து வண்டியில் பூட்டிக் குழந்தைகளோடு குழந்தையாய் வள்ளி நாயகியையும் தூக்கி வண்டியில் உட்காரவைத்துக் கிருஷ்ணன் வண்டியைத் தெருக்களில் கன வேகமாய் ஓட்டுவான். வண்டிச் சக்கரத்தில் சாட்டைக் கம்பைக் கொடுத்துக் கடகட என்று சப்தம் செய்வான். குழந்தைகள் சந்தோஷ மிகுதியால் ஹோ என்று இரைவார்கள். வள்ளிநாயகி பயந்து போய்க் கிருஷ்ணன் தோள்பட்டையைக் கட்டிக்கொள்வாள்.

இப்படிக் குழந்தைப் பருவத்தில் நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்றாய் நினைவுக்கு வரவர வள்ளிநாயகியின் துக்கம் அதிகமாயிற்று. "வள்ளி!" என்று உள்ளே தாய் கூப்பிடும் குரல் கேட்டதும் கையும் களவுமாய்ப் பிடிபட்ட திருடனைப்போல் திடுக்கிட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

## 4

பனங்குடி கிராமத்தில் கிருஷ்ணனை அறியாதவர்கள் இல்லை. ஆகையால் கிருஷ்ணனுக்குக் கல்யாணம் என்றால் சொல்ல வேண்டுமோ! ஒருவர் பாக்கியில்லாமல் அனைவரும் கல்யாணத்திற்கு வந்திருந்தார்கள்.

இரவு பத்து மணிக்குப் பூர்ண சந்திரன் தன் மோகன நிலவை அள்ளிப் பொழிந்துகொண்டிருந்த நேரத்தில், கல்யாண ஊர்வலம் புறப்பட்டது.

தங்கள் தெருக்கோடியில் மேளச்சத்தம் கேட்டதுமே வள்ளிநாயகி தன்வீட்டில் ஜன்னல் எதிரில் வந்து தன் குருட்டுக் கண்களால் தெருவைப் பார்ப்பதுபோல் நின்றாள். அவள் மனத்தில் இவ்வளவு நாட்களாய் அலை மோதிக்கொண்டிருந்த கொந்தளிப்பெல்லாம் அடங்கிப்போய் அதற்குப் பதில் ஒரு தெய்விகமான அமைதி குடிகொண்டிருந்தது.

கிருஷ்ணனுக்கு அந்த வருஷம் கல்யாணம் நடப்பதே அவள் முயற்சியினால்தான் சாத்தியமாயிற்று. ஒரு நாள் அவள் அவனைப் பார்த்து, "கல்யாணம் எப்பொழுது கிருஷ்ணா?" என்று கேட்டபொழுது, அவன் வருத்தத்துடன், "இந்த வருஷம் இல்லையம்மா" என்றான்.

"இந்த வருஷம் இல்லையா? அதென்ன?"

"ஆமாம் அம்மா. கல்யாணம்னா சும்மா ஆயிடுமா அம்மா? பணம் வேண்டாமா? எங்கிட்டே பணம் ஏது? சிறுகச் சிறுகச் சேர்த்து அடுத்த வருஷம் பண்ணிக்கலாம்னு இருக்கேன். இல்லாவிட்டால் இந்த வருஷமே ஆகிற கல்யாணந்தான்."

திடீரென்று வள்ளிநாயகியின் மனம் சந்தோஷத்தினால் பூரித்தது. கிருஷ்ணனுக்கு இந்த வருஷம் கல்யாணம் இல்லை! இன்னும் ஒரு வருஷத்துக்கு அவன் துரையம்மாளுக்குச் சொந்தமாகமாட்டான்!

அடுத்தவினாடியே வள்ளிநாயகி துக்கித்தாள். தான் சந்தோஷப் பட்டதற்காகத் தன்னையே கடிந்துகொண்டாள். பாவம்! கிருஷ்ணன் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்று எவ்வளவு ஆவலாக இருந்தான்! எவ்வளவு சந்தோஷத்துடன் அதை எதிர்பார்த்தான்! இந்த வருஷம் கல்யாணம் இல்லை என்று சொன்னபோது அவன்குரலில் எவ்வளவு துக்கம் தொனித்தது! அவன் வருத்தத்தைப் பார்த்துத் தான் சந்தோஷப் படுவதா?

இப்படி அவள் நினைத்துக்கொண்டிருக்கையில் கிருஷ்ணன் கேட்டான்:

"என் கல்யாணம் கிடக்கட்டும், வள்ளியம்மா; உனக்கு இந்த வருஷம் கல்யாணமாமே?"

"சீ, விளையாடாதே" என்றாள் வள்ளி கோபத்தோடு.

"விளையாட்டு அல்ல, அம்மா; நிசமாய்த்தான் கேட்கிறேன். அம்மாவும் கணக்குப்பிள்ளை ஐயாவும் பேசிக்கிட்டிருந்தாங்க; காதிலே விழுந்திச்சு."

"பைத்தியமா உனக்கு?"

"இல்லை, நிசமாத்தானம்மா."

வள்ளி ஒன்றும் புரியாமல் கோபத்துடன் உள்ளே சென்றாள். படுத்துக் கொண்டிருந்த தாய் எதிரில் போய் நின்று, "எனக்கா கல்யாணம்?" என்று வினவினாள்.

"ஆமாம்; உட்கார், சொல்லுகிறேன்."

"மாப்பிள்ளை யார்?"

"எல்லாம் உன் மாமன்தான். மூணு வருஷத்துக்கு முந்தியே அவனுக்கு உன்னைக் கொடுக்கணும்னு பேச்சு நடந்தது. அவன் இஷ்டப் படாமல் வேறு இடத்தில் பண்ணிக்கொண்டான். மூணு வருஷமாகியும் குழந்தை பிறக்கவில்லை. அதனால் உன்னை இரண்டாந் தாரமாகப் பண்ணிக் கொள்ள இப்பொழுது ஒப்புக்கொண்டிருக்கிறான்."

"எனக்குக் கல்யாணம் வேண்டாம், அம்மா."

"சே அசடு! பெண்ணாய்ப் பிறந்தால் கல்யாணம் ஆகாமல் இருக்க முடியுமா? மாமன் இல்லாவிட்டால் உன்னை வேறு யார் பண்ணிப்பார்கள்? நம் வம்சம் இத்துடன் அழிந்தல்லவா போய் விடும்? நம் நிலபுலன்களெல் லாம் என்ன ஆகிறது?"

வள்ளிநாயகி பெருமூச்செறிந்தாள். மாமனுக்குக் குழந்தை வேண் டும்; தாய்க்கோ பணம் பிரதானம்; தன்னை விரும்புவார் ஒருவரும் இல்லை.

"சரி அம்மா; வேறொரு விஷயம் சொல்ல வந்தேன்."

"என்ன?"

"கிருஷ்ணனும் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறானாம். ஆனால் பணம் இல்லாததால் தடையாய் இருக்கிறதாம். நாம்தான் கொடுத்துக் கல்யாணம் பண்ணி வைக்கவேண்டும்."

"சரி, அதற்கென்ன? நம் கிருஷ்ணனுக்குத்தானா கல்யாணத்துக்குப் பணம் இல்லாமற் போயிட்டது? கொடுத்தால் போகிறது. கணக்குப் பிள்ளை ஐயா இப்பத்தான் பணம் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனார்."

"சரி, அப்படியானால் இப்பவே கொடுத்துவிடு" என்று வள்ளி நாயகி, "கிருஷ்ணா!" என்று கூப்பிட்டாள்.

கிருஷ்ணனுக்குத் தன் காதுகளையும் கண்களையும் நம்பமுடியவில்லை. அடக்கமுடியாத மகிழ்ச்சியுடன் பணத்தை வாங்கிக்கொண்டு, "வள்ளியம்மா, நீயே என் குலதெய்வம்!" என்று அவள் காலில் விழுந்து நமஸ்கரித்தான்.

## 5

மேளச்சத்தம் வரவர அருகில் நெருங்கிவந்தது. நாகஸ்வரக்காரன் சங்கராபரண ராகத்தை அலசிப் பிழிந்து கொண்டிருந்தான். அவர்கள் வீட்டெதிரில் வந்தபோது காந்த விளக்குகளின் வெளிச்சம் பளிச்சென்று ஜன்னல் வழியாய்ப் பிரவேசித்து வள்ளியின் முகத்திலும் பின்னால் இருந்த சுவரின் மேலும் துள்ளித் துள்ளி விளையாடிற்று. வள்ளியின் கால்கள் அயர்ந்தன. ஜன்னல் கம்பிகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பதுமை போல் நின்றாள்.

கல்யாணக் கூட்டம் அந்த வீதியைக் கடந்து சென்றது. வள்ளி நாயகியின் உடலில் உயிர் வந்தது. குங்குமச் சிமிழை எடுத்து நெற்றிக்கு இட்டுக் கொண்டாள். புஷ்பக்கொத்தை எடுத்துக் கூந்தலில் செருகிக்கொண்டாள். கொல்லைப்புறம் சென்று மாட்டுத் தொழுவத்தை அடைந்து, லக்ஷ்மியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அதன் நெற்றியில் முத்தமிட்டாள். பிறகு தோட்டத்தைத் தாண்டித் தட்டுத் தடுமாறிக்கொண்டு வெளியே வந்தாள்.

எதிரே அரசலாறு. பரிசுத்தமான ஞானிகளின் இதயம்போல் தண்ணீர் தெளிந்து காணப்பட்டது. காற்றடித்து நீர்ப்பரப்பிலே அலை மோதும் போது, ஆகாயத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்த பூர்ண சந்திரனின் உருவம் லக்ஷக்கணக்கான வைரங்களை வாரி இறைத்ததுபோல் தண்ணீரிலே பிரதிபலித்தது.

வள்ளிநாயகி சற்று நேரம் பிரமை பிடித்தவள்போல் நின்றாள். மறு நிமிஷம் ஆற்றில் 'குபுக்' என்று சப்தம் கேட்டது. தண்ணீரில் குமிழிகள் தோன்றி டுப்பென்று வெடித்தன.

வெகு தூரத்திலிருந்து, அந்த நாகஸ்வரக்காரன் ஸஹானா ராகத்தை ஆலாபனம் செய்யும் ஓசை காற்றிலே தவழ்ந்து வந்தது.

## : அபலை :

* ஸி. ஆர். சரோஜா *

"அபலை" என்று பெருமூச்செறிந்தான் ஸ்ரீதரன். "அபலை" என்று சுருதி கூட்டியது தென்றல். அப்பொழுதுதான் மாதா கோயில் கடியாரம் ஒன்பது அடித்து ஓய்ந்தது. சந்திரன் தன் அமுத வெள்ளத்தை வாரி இறைத்துக்கொண்டிருந்தான். அருகிலிருந்த மாதா கோவில், அதற்கப்பாலிருந்த தென்னந் தோப்பு எல்லாம் அந்த அமுத வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தன. எங்கும் நிச்சப்தம். குயில் ஒன்று தன் பேடையோடு பிணங்கிக் கொண்டு 'ஜிவ்' என்று பறந்து சென்று மற்றொரு கிளையில் அமர்ந்தது. சந்திரிகையை மாசு படுத்த எங்கிருந்தோ ஒரு கருமுகிற் குழாம் ஓடி வந்தது. அதோ சற்றுமுன் அமுத வெள்ளத்தை வாரி இறைத்தவன் மையிருட்டில் வாசம் செய்யப் போய்விடுகிறான். கீழே ஒரு பெண் தேனினும் இனிய குரலில், நீலாம்பரி ராகத்தில் தாலாட்டுப் பாடிக்கொண்டிருந்த அடிகளும் மறைந்துகொண்டே வந்தன. ஸ்ரீதரன் உள்ளத்திலும் கருமுகில் சூழ்ந்தது.

* * * * *

ஸ்ரீதரன் பக்கத்தில் ஒரு ரூபசுந்தரி வந்து உட்கார்ந்தாள். கரு வண்டைப் போன்ற கண்கள். எடுத்த நாசி. புன்சிரிப்புத் தவழும் வாய். வளைந்து படிப்படியாய்ச் சரிந்த கூந்தல். நெற்றியில் லேசான குங்குமப் பொட்டு. ஒரு தேவமங்கைபோல் விளங்கினாள் என்ற ஒரே வார்த்தையுடன் நிறுத்திக் கொள்ளலாம்.

"சுமதி!" என்றான் அவன்.

அவள் தன் முகத்தை ஒருபுறம் திருப்பி, வந்த சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"என் மேல் என்ன கோபம்?" என்றான் மறுபடியும்.

"கோபமா? கோபமே இராதுதான். நான் உயிரோடு இருக்கும்பொழுது 'சள் சள்' என்று விழுந்தீர்கள். இப்பொழுது என் அழகில் சொக்கிப் போய் ஏன் உட்கார வேண்டும்?" என்றாள் சற்றுக் கடுமையான குரலில்.

"சுமதி! இன்பத்தை அறியாத பருவம்; எதிலும் அகங்காரம், இறுமாப்பு நிறைந்த பருவத்தில் உன்னை வெறுத்தேன். ஆனால், சுமதி! உன் இணையிலா அழகு என்னை மயக்குகிறதே."

"ஓஹோ! நான் பன்னிரண்டு வயதுப் பெண்ணாயிருக்கும் போது என்னைக் கண்டால் விஷத்தைப் போல் நினைத்தீர்கள். இப்பொழுது அழகாம், மண்ணாங்கட்டியாம்" என்று படபட வென்று பேசிவிட்டு எழுந்தாள்.

"சுமதீ! சுமதீ! போகாதே" என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டான் ஸ்ரீதரன்.

"இன்னும் என்ன சொல்லவேண்டுமோ சொல்லி விடுங்கள். கேட்டுவிட்டுப் போகிறேன்" என்று உட்கார்ந்தாள்.

"நீயே சொல்லேன், நான் என்ன பண்ணினேன் என்று."

"சொல்லட்டுமா? கோபங்கொள்ள மாட்டீர்களே?" என்றாள் அவள்.

சிறிது நேரம் ஆழ்ந்த மௌனம் நிலவியது.

"கேளுங்கள்" என்று அவள் ஆரம்பித்தாள்.

"ஒரு நாள் நீங்கள் காலேஜிலிருந்து வந்தவுடன் தலைவலி என்று போய்ப் படுத்துக் கொண்டீர்களே; நினைவிருக்கிறதா?"

"ஆம்" என்று தலையாட்டினான் ஸ்ரீதரன்.

"அப்பொழுது உங்கள் அம்மா என்னைக் கூப்பிட்டு, 'ஸ்ரீதரனுக்கு உடம்பு சரியாக இல்லை. போய்ப் பார்' என்றாள். நான் வந்தவுடன் நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

"நினைவில்லையே."

"நினைவில்லையா? ஏன் இருக்கும்! 'சனியனே! உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டது முதல் இந்தத் தொந்தரவுதான். உன்னை யார் இங்கே வரச் சொன்னது?' என்று சொன்னீர்களே."

"ஆமாம், ஒரு வேளை சொல்லியிருக்கலாம். அப்பொழுது எனக்குப் பதினாறு வயசுதானே ஆயிற்று? ஆசை உண்டாகும் காலம் அது அல்லவே?"

"சரி, அதுதான் போகட்டும். கல்யாணத்தின்போது நலங்கு இட்டவுடன் தலையைச் சுற்றி அப்பளம் உடைத்தீர்களே. அப்பொழுது தலையில் 'நக்' என்று குட்டினீர்களே. முதலில் என்னைப் பார்த்தபொழுதே பிடிக்கவில்லை என்று சொல்லி விடுவதுதானே?"

"அப்பொழுது உன்னைப் பார்த்தால் எல்லோரும் அப்படித் தான் சொல்வார்கள். இறக்கி மரவட்டை மாதிரிப் பின்னல். காது, மூக்குத் தெரியாமல் நகை. முழக்கரைப் பாவாடை. முழங்கை வரை ரவிக்கை; தாவணி. பட்டிக்காட்டைவிடக் கேவலம். சுமதீ! இப்பொழுது உன்னைப் பார்த்தால், அடடா! எவ்வளவு மாறுதல்!"

"அப்படியானல் வெளி அலங்காரத்தில்தான் உங்களுக்கு நம்பிக்கை! என் உள்ளம் சதா உங்களையே விவரிக்க முடியாத ஸ்தானத்தில் வைத்துப் பூஜித்து வந்தது உங்களுக்கு எப்படித் தெரியப் போகிறது?"

"சுமதி! போனதை யெல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு பேசாதேயேன்" என்ருன் ஸ்ரீதரன்.

"கடைசியாக நடந்ததையும் சொல்லிவிடுகிறேன்" என்ருள் சுமதி. அதைக் கேட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான் ஸ்ரீதரன்.

"மார்கழி மாதத்தில் விடியற்காலை எழுந்து உங்கள் அப்பாவின் பூஜைக்காகக் கிணற்றண்டையில் குளிக்க ஜலம் இழுக்கப் போனேன். உங்கள் வீட்டில்தான் பாசி அதிகமாயிற்றே. சறுக்கி 'மடார்' என்று விழுந்து விட்டேன்."

"ஆமாம், உன் முடிவு அதில்தானே இருந்தது" என்ருன் ஸ்ரீதரன், துக்கங் கலந்த குரலில்.

"அன்று மத்தியானம் என்னண்டை வந்து பார்த்துவிட்டு, 'நடக்கும்போது பார்த்து நடக்கிற வழக்கமில்லை உனக்கு. எப்படியாவது தொலைந்துபோ!' என்று சொல்லிப் போய்விட்டீர்கள்."

ஸ்ரீதரன் முகத்தில் ஆழ்ந்த சஞ்சலம் நிலவியது.

"பிற்பகல் மூன்று மணிக்கு உடம்பு அதிகமாகிவிட்டதன் பேரில் அம்மா காலேஜுக்குச் சொல்லி அனுப்பியும், என் நினைவு தடுமாறுகிற சமயத்தில்தானே வந்தீர்கள்? அப்பொழுதாவது உங்கள் வாயால் 'சுமதீ' என்று கூப்பிட்டீர்களா? 'அடே! பிராணன் போகிற சமயத்திலாவது திருப்தியாய் ஒரு வார்த்தை சொல்' என்று அம்மா சொன்னபோது, 'நீ பார்த்துப் பண்ணினதை நீயே அனுபவி. திருப்தி என்னவாம், திருப்தி!' என்றீர்கள். இப்பொழுது 'சுமதீ! சுமதீ!' என்று குலாவத் தெரிகிறதா?"

"அதுதான் சொன்னேனே: ஒன்றும் சரியாகத் தெரியாத பருவத்தில் கல்யாணம், கார்த்திகை என்று செய்து வைத்து விட்டால் என்ன பண்ணுவது? சில சமயம் நான் உன்னைக் கூப்பிட்டால் அப்பொழுதுதான் நீ பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் கதை பேசிக் கொண்டிருப்பாய்."

"உங்களை ஏதாவது கேட்டால் 'சள்' என்று விழுவீர்கள். இந்தப் பொல்லாத புருஷருடன் இருந்து வாழ்க்கை நடத்த வேண்டாமென்றுதான் போய்விட்டேன்."

"இப்பொழுது அப்படியில்லையே; என் தப்பை யெல்லாம் மன்னித்துக் கொள்ளேன்."

"ஊஹும், முடியாது" என்று சொல்லிச் சுமதி எழுந்தாள்.

"சுமதீ! சுமதீ! போகாதே. உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது" என்று எழுந்து கையை நீட்டி அவளைத் தொடப்போனான்.

அந்த ரூபசுந்தரி மின்வெட்டுப் போல் மறைந்து விட்டாள்.

* * * * *

நீட்டிய கை மடக்க முடியாமல் 'சில்' என்று பனியால் நனைந்து போயிருந்தது. கீழே ஒரு பெண் குரல் தாலாட்டுப் பாடிக் கொண்டிருந்தது.

"கல்யாணீ! கல்யாணீ!" என்று கூப்பிட்டான்.

கல் கல் என்று மெட்டி சப்திக்க இடுப்பில் குழந்தையுடன் ஒரு பெண் வந்தாள்.

"இன்னும் தூங்கவில்லையா அவன்?" என்றான் ஸ்ரீதரன்.

"இந்தப் போக்கிரி, அவ்வளவு சீக்கிரம் தூங்கிவிடுவானா?" என்றாள் கல்யாணி.

குழந்தை தன் இளந்தளிர் போன்ற கையை நீட்டித் தந்தையிடம் தாவ எத்தனித்தது.

"போக்கிரி! அம்மாவண்டையே இருடா" என்று சொல்லிக் குழந்தையின் முகத்தை உற்றுப் பார்த்தான் ஸ்ரீதரன்.

"பனி 'சில்' என்று அடிக்கிறதே. உள்ளே போகலாமா?" என்றாள் அவள். அவன் பேசாமல் அவள் பின்னால் நடந்தான்.

குழந்தையைத் தொட்டிலில் விட்டு ஆட்டிக்கொண்டே, "கண்ணு! அப்பா தூங்கணும். பேசாமல் தூங்கு" என்று சொல்லிக் கொண்டிருந்தாள் கல்யாணி.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் குழந்தை ஆழ்ந்த புன்னகையுடன் நித்திரை செய்ய ஆரம்பித்தது.

தொட்டிலண்டை நின்றுகொண்டு, "கல்யாணீ! எல்லாம் அவன் பெரியம்மா ஜாடையாய் இருக்கிறான்; இல்லையா?" என்றான் ஸ்ரீதரன்.

"ஆமாம், சிரிப்பதுகூட அக்கா மாதிரிதான் இருக்கிறது என்று அம்மா சொன்னாள்" என்றாள் அவள்.

அந்தச் சிரிப்பின் அழகை அனுபவிக்க நாம் கொடுத்து வைக்கவில்லையே என்று ஏங்குவது போலிருந்தது ஸ்ரீதரன் முகச் சாயல்.

"மணி பத்துக்கு மேல் ஆய்விட்டதே. தூக்கம் வரவில்லையா?" என்றாள் கல்யாணி.

"ஏன், உனக்கு வருகிறதோ? நீ வேணுமானால் தூங்கு. நான் தாலாட்டுப் பாடுகிறேன்."

அவள் கன்னங்கள் நாணத்தால் சிவந்தன.

ஸ்ரீதரன் அவள் பக்கத்தில் நின்றுகொண்டு கட்டுக் கடங்காமல் பறந்து கொண்டிருந்த அவள் கூந்தலைச் சரிப்படுத்தினான்.

அவள் அங்கிருந்து விடுவிடென்று நடந்துபோய் ஜன்னலண்டை நின்று கொண்டாள்.

மறுபடியும் ஸ்ரீதரன் அவள் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டு புன்னகையுடன் நோக்கினான். கல்யாணி ஸங்கோசத்துடன் கையை விடுவித்துக்கொண்டு தலை கவிழ்ந்தாள்.

"இதென்ன வெட்கம், அசடு மாதிரி?" என்று லேசாக அவள் கன்னத்தில் தட்டினான்.

கருமுகிலிலிருந்து சந்திரன் வெளிப்பட்டு மறுபடியும் அமுத வெள்ளத்தை வாரி இறைக்க ஆரம்பித்தான். பிணங்கிச் சென்ற குயில் தன் பேடையுடன் குலவ ஆரம்பித்தது. எதிரில் மாட்டியிருந்த சுமதியின் படம், "என்னைப் பிரிந்து இருக்கமுடியாதா?" என்று கேலி செய்வது போலிருந்தது.

பாவம்! அபலையாகிய அவள் கொடுத்துவைத்தது அவ்வளவு தான்.



# : கறுப்பல்ல கரும்பு :

* வே. சேஷன் *

பாத்திரங்கள்

அனந்தாசாரி — ஜட்ஜ் பதவியிலிருந்து தாமே விலகிக் கொண்ட ஒரு கனவான்.

அமுதன் — அவர் மகன்.

மாதவன் — ஒரு டாக்டர்; அனந்தாசாரியின் நண்பன்.

குமுதம் — அனந்தாசாரியின் மனைவி.

கமலி — அமுதனின் மனைவி.

ரங்கம் — குமுதத்திற்குத் தெரிந்தவள்.

## காட்சி 1

இடம்:—தமிழ் நாட்டில் ஒரு நகரம். அதில் ஒரு தெருவில் ஒரு வீடு. இருட்ட ஒரு நாழிகை இருக்கும். ரங்கம் வீட்டுக் கதவைத் தட்டுகிறள்.

குமுதம்: (உள்ளிருந்து) யாரங்கே? வந்துவிட்டேன். (கதவைத் திறந்தவுடனே) நிஜந்தானு, ரங்கந்தானேடி? பார்த்து எத்தனையோ நாளாச்சே! எப்போடி வந்தே? உள்ளே வாடி.

ரங்கம்: குமுதம், உள்ளே வர நாழி இல்லே. 7 மணி வண்டிக்குக் கட்டாயம் போகணும். இந்த ஊருக்கு வந்துட்டு உன்னைப் பார்க்காதே போறத்துக்கு மனசு வல்லே. சௌக்யமாயிருக்கயா? உன்னைப் பார்த்து 15 வருஷம் இருக்குமேடி. அப்போ உனக்கு 7, 8 வயசிலே ஒரு பிள்ளை இருந்துதே; அதானே? அப்பறம் ஏதாவது உண்டானியோ? பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணியாச்சா? மாட்டுப்பொண் ஆத்துக்கு வந்துட்டாளா?

குமு: ஏண்டி! ஆத்து வாசலே மிதிச்சுட்டுப் போகவா வந்தே? நின்னுண்டே பேசிட்டுப் போயிடப்போறயா? இப்படி ரேழியிலேயாவது வந்து உட்காருடி. ஆத்திலே வேறே ஒத்தரும் இல்லேடி; அவர் மாத்திரம் மாடியிலே ஏதோ எழுதிக்கிண்டு இருக்கார். பிள்ளை எங்கேயோ வெளியிலே போயிருக்கான். என்னடி, இப்படிக் கூச்சப்படறே? அன்னிக்கி இருந்தாப் பலேதான் இருக்கே. இப்படி வா; நன்னு உக்காரு.

[இருவரும் ரேழித்திண்ணையில் உட்காருகிருர்கள்.]

ரங்: வேறே ஒண்ணுமில்லேடி; பேச ஆரம்பிச்சா நாழியாறது தெரியாது. வண்டி தப்பிப் போயிடும். ஏண்டி, கேட்டத்துக்கு ஒண்ணும் பதிலில்லே?

குழ: நீ படற அவசரத்திலே எல்லாம் மறந்து போச்சு. எனக்கு அந்த ஒரு பிள்ளைதான். அவனுக்குப் போன சித்திரையிலே கல்யாணம் பண்ணித்து. மாட்டுப்பொண் ஆத்துக்கு வந்துட்டா. நீ வந்த சமயம் அது கூட ஆத்திலே இல்லேடி. கோடி ஆத்திலே ஏதோ மணையிலெ வச்சுப் பாடறான்னு பிடிவாதம் பிடிச்சு அழைச்சிண்டு போனா. செத்தெ இருந்தியானா வந்துடும். நீ பார்த்துட்டுத்தாண்டி போகணும். நானே சொல்லிக்கப் படாது, அதன் அழகையும் குணத்தையும். பத்து விரலும் பத்துக்காரியம். படிப்புச் சொல்லி வச்சிருக்கா; பாடறது. இவ்வளவு இருக்கே, ஆத்திலே யாரோ வந்திருக்கான்னு இருக்காண்டி எம் பிள்ளை! என்ன நெனச்சிண்டு இருக்கானோ தெரியலேடி. பொண் கண்ணுக்குப் பார்த்தா செத்தெக் கறுப்புன்னு தோணும். எங்களைப்போல இராது. அதனாலே என்னடி? எங்க சம்மந்தி அம்மா நல்ல செகப்பு. பத்தும் பெத்து இன்னும் கட்டழகியாத்தான் இருக்கா. சம்மந்திப் பிராமணன் செத்தெக் கறுப்பு. பொண், அழகுக்கு அம்மாவையும், நிறத்துக்கு அப்பாவையும் கொண்டுட்டா. செகப்பாப் பொறக்கறத்துக்கும், கறுப்பாப் பொறக்கறத்துக்கும் நாம் என்னடி பண்ணிக்கிறது?

ரங்: கறுப்பா இருந்தா என்னடி மோசம்? நாம் எல்லாம் நேரே சீமையிலிருந்து கப்பல்லே வந்து இறங்கினமோ? ஆனால் இந்தக் காலத்திலே ரொம்பக்குட்டிகள் அப்படித்தான் நினைச்சிண்டு இருக்கு. இல்லாட்டா இந்தப் பாடு படுமா? எல்லாம் சினிமாத் தோரணையாத்தானே ஆயிட்டுது? விதம் விதமாப் பொடவை, விதம் விதமா ரவிக்கை, போது விடிஞ்சாப் புதுப் பாஷன். இந்தத் துணி படுத்தற பாடு, அடி அம்மா! சொல்லித் தரமில்லை. துணியும், பவுடரும், பொட்டும், பின்னலும், மினுக்கும், தளுக்கும் என்னடி பண்ணிப்பிடும்? முகத்திலே துளிக் களை இல்லாதே, பார்த்தாப் பொண்ணுன்னு தெரியாதே, பகட்டினுமட்டும் அழகாயிடுமோடி? பொறக்கச்சேயே அழகாப் பொறக்கணும். கையும் காலும், மூக்கும் முழியும் ஒத்து அமையணும். முகத்திலே நல்ல களை இருக்கணும். குணம் இருக்கணும். அப்புறம் செகப்பா இருந்தாலென்ன? கறுப்பா இருந்தாலென்ன? இதெல்லாம் சொன்னா, கர்நாடகம், கட்டுப் பொட்டின்னு சொல்லுவா.

குழ: ரங்கம், கர்நாடகமாயிருந்தால் குடி கெட்டுப்போமோடி? எங்காத்தவரும் ஜட்ஜ் வேலையிலேதானேடி இருந்தார்? ஏண்டி உனக்குத் தெரியாதோ? அப்புறம் என்னத்தையோ நெனச்சிண்டு—அதெல்லாம் எனக்குச் சொல்லவா தெரியறது?—வேலையை ராஜிநாமா பண்ணிட்டார். இப்போ, ஓயாதே புஸ்தகம், இல்லாட்டா எழுத்து, இல்லாட்டாப் பேச்சு. அவருக்கு ஏத்தாப்பலே இந்தத் தெருவிலேயே ஒரு டாக்டர். ஆனால், வெறுமே சொல்லப்படாது; ரொம்ப நல்ல பிள்ளை. மாதவன்னு பேரு. இரண்டு பேரும் பேச ஆரம்பிச்சுட்டா அவாளுக்கு இந்த லோகமே மறந்துபோயிடும். பேசறத்துக்கு டாக்டர்; இல்லாட்டாப் பிள்ளை. பிள்ளை பெரிய பாஸ் பண்ணியிருக்கான்னு சொன்னேனேடி. எதுக்குச் சொல்ல வந்தேன், அப்பாவுக்கும் பிள்ளைக்கும் இந்தக் காலத்துக் கூத்து ஒண்ணுவது பிடிக்கிறதில்லை. எங்காத்திலே இன்னிக்கும் வாசனைப் பொடியும், மஞ்ச

ளுந்தான். பட்டுக் குங்குமந்தான், நெத்திக்கு இட்டுக்க. வாழை நார் வச்சுத்தான் பின்னிக்கிறது. துணியிலே கன்னுபின்னுன்னு வாங்கறதே இல்லே. இந்த ரவிக்கை நான்தான் தெச்சேன். நன்னயில்லியா? மறஞ்சு இருக்கிறதுதானேடி? இப்படி எல்லாம் கர்நாடகமா இருக்கமே, நமக்கு ஒத்தாப்பலே மாட்டுப்பொண் அமையணுமேன்னு கவலைப்பட்டுண்டு இருந்தேன். அடி, சொல்லிவச்சாக்கூட நேராது; அப்படி இருக்கம்மா அந்தப் பொண்! அவளாச்சு, அவனாச்சு, இன்னமே நமக்கென்னன்னு இருப்போம்னு...

அமுதன்: (உள்ளே நுழைந்துகொண்டே) அம்மா!

குமு: இதோ அவனே வந்துட்டாண்டி!

ரங்: இவன்தான் பிள்ளையா? குழந்தையிலே பாத்தது; அடையாளம் தெரியலே. குமுதம், ஒண்ணுக்கும் கவலைப்படாதே. முதல்லே பொறக்கறது பேத்தியாப் பொறக்கணும். ரொம்ப நாழியாயிட்டுது. நான் போய்ட்டு வறேன். வருத்தப்படாதே. (போய்விடுகிறாள்.)

அமு: அம்மா, யார் அது? ஆசீர்வாதம் கடுமையா இருக்கே. உம், இருக்கட்டும். அம்மா இராப் பள்ளிக்கூடத்தில் இன்று என் முறை. சீக்கிரம் சாதம் போட ஏற்பாடு பண்ணு. சாப்பிட்டுப் போய்விட்டால் அங்கேயே படுத்துக்கொண்டு விடுவேன்.

குமு: உன் இஷ்டம். இப்படியே எத்தனை நாள் வேணுமானாலும் இரு. நீ என்ன தெரியாதவனா?

அமு: அம்மா, சீக்கிரம் சாதம் போடப்போகிறாயா? இல்லையா? ஒரு வேளை பட்டினி கிடந்தால் உடம்பு இளைத்துவிடாது. இன்றைக்கு உபவாசம் இருந்து விடட்டுமா?

குமு: அப்பா, வேண்டாண்டா. தெரியாதே சொல்லிப்பிட்டேன். வயத்தையும் பட்டினி போட்டுடறேன் என்கிறாயா? இன்னும் ஏதாவது சொன்னால் சன்யாசமே வாங்கிண்டுடுவே. காலம் இப்படியேவா இருந்துடும்? அப்பா, உன்னைச் சொல்லப்படாது. நான் கொடுத்துவச்சது அவ்வளவுதாண்டா.

அனந்தாசாரி: (மாடியிலிருந்து) அமுதா, இங்கே வா; கீழே என்ன தர்க்கம்?

அமு: இதோ வந்து விட்டேன். (மாடிக்குப் போய்விடுகிறான்.)

[கமலி வருகிறாள்.]

குமு: கமலி, நல்லவேளை; நீயும் வந்துட்டே; சீக்கிரம் சாப்பிட்டுட்டு அவனுக்கு எங்கயோ போகணுமாம், செத்தெச் சுருக்குப்படுத்து.

## காட்சி 2

### இடம்:—மாடி

அன: அமுதா, என்னடா, கீழே தர்க்கம்?

அமு: ஒன்றுமில்லே, அப்பா. இராப் பள்ளிக்கூடத்தில் இன்று என் முறை. சீக்கிரம் போகவேண்டுமென்று சொன்னேன். அம்மா ஏதோ சொல்ல...

அனந்: சரி சரி, அவள் வார்த்தையில் ஒன்றிரண்டு என் காதில் விழுந்தது. அதைப்பற்றிக் கேட்கலாம் என்றுதான் உன்னைக் கூப்பிட்டேன். நீ செய்வதெல்லாம் சரிதான். ஆனால் முன் மாதிரியே நினைத்துக்கொண்டு இராப்பகல் வீட்டில் தங்காமல் நீ பொதுக்காரியம் பார்த்துக்கொண்டிருந்தால் ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு, அதை வீட்டிற்கும் அழைத்து வருவானேன்? அந்தப் பெண்ணின் பொறுமையைக் கண்டு எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது. என்ன அடக்கம்! மட்டு மரியாதை! அவள் குரல் எப்படி இருக்குமென்றுகூட எனக்குத் தெரியாது. நான் இருக்கும்போது அவள் பேசினால்தானே? யார் பண்ணின புண்ணியமோ இப்படிக் கிடைத்தது என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நீயோ கல்யாணம் பண்ணிக்கொண்டு பிரம்மசாரி விரதம் அனுஷ்டிக்கிறாய். உன்னைக் கேட்காமல் நான் ஒன்றும் செய்துவிடவில்லையே. எதற்காக இப்படி இருக்கிறாயென்று எனக்காவது தெரியவேண்டாமா?

அமு: நீங்கள் கேட்கு முன்னமே இதைப்பற்றி நானே சொல்லி இருக்கவேண்டியது என் கடமை. அப்படி, ஏன் சொல்லாமல் இருந்து விட்டேனென்று என் வாக்கு மூலத்தைக் கேட்ட பிறகு தங்களுக்கே தெரியும். கறுப்பைக் கண்டால் எப்போதும் எனக்கு ஒரு விதமான கூச்சம் உண்டாகும்; காரணம் தெரியாத கூச்சம், மனக் கலக்கம், ப்ரமம். காரணமில்லாத ஒரு மனச் சேஷ்டையைப் பெரிதாகக் கொண்டாடி இந்தப் பெண் வேண்டாம் என்று சொல்ல எனக்கு இஷ்டமில்லை. 'என் புத்தி பலத்தாலே, ஆழ்ந்து யோசித்து மனத்தைப் பழக்கி, அந்த ப்ரமத்தைப் போக்கிக்கொள்ளலாம்; இது ஒரு பிரமாதமா?' என்று நினைத்து, அதைத் தங்களிடம் கூடச் சொல்லாமல் இருந்துவிட்டேன். இப்போது தெரிகிறது, மனத்தை வெல்வது அவ்வளவு லகுவல்ல என்று. அந்தக் கூச்சம் இன்னும் என்னை விட்ட பாடில்லை. மனம் கூசிக்கொண்டே அவளோடு உறவாடுவது எப்படி? மனம் ஒத்துக் கொள்ளாத சடங்கு இன்பம் தருமா? தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு நானும் தவித்துக்கொண்டிருக்கிறேன். இதுதான் என் நிலை.

அனந்: அமுதா, இது என்ன கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட மாதிரி? நிறத்தைக் கண்டு நீ இப்படிக் கலங்குவானேன்? நிறம் என்பது என்ன? அது ஒரு பொருளா? அதற்குத் தனியே ஓர் உருவுண்டா? நாம் மேலே பறந்து சென்றால் வானவில்லைப் பிடித்துவிடலாமா? வான வெளியிலே நீர்த்துளியும் ஒளிக் கதிரும் ஒன்றுபட அக் கூட்டிலே பிறக்கும் அந்த வர்ணக்களஞ்சியம் நம் கைக்கு அகப்படுமோ? ஒளியிலே தோன்றி, ஒளியிலே அடங்கும் அது, கடலிலே தோன்றி, கடலிலே அடங்கும் அலைகள் போன்றதுதானே? அது கிடக்கட்டும். நிறத்துக்கும், குணத்துக்கும் என்ன சம்பந்தம்? ஒரு பொருளின் நிறத்தைக் கொண்டு அதன் குணத்தை அறிவது நியாயமா? நிறமில்லாவிட்டால் பொருள்களுக்கு எது குறைந்துவிடும்? கனமா, ருசியா, மணமா? இருட்டிலேயும் மல்லிகை மணக்கிறது; சர்க்கரை தித்திக்கிறது. மறைந்தது அவற்றின் நிறம் மட்டுந்தானே? வெளிச்சம் இல்லாதபோது பொருள்களுக்கு நிறம் எது? இருட்டிலே கண் இருந்தும்

என்ன பயன்? வெளிச்சம் இல்லாதபோது, எல்லாரும் குருடர்கள் தானே? மனமும், கண்ணும், ஒளியும், பொருளும் கலந்தால்தானே நிறம் என்ற ஒரு நினைவு உண்டாகிறது? அது நினைவா? அதைக் கனவு என்று சொன்னால்தான் என்ன? விழிப்பிலே, வெளிச்சத்திலே காணும் இக் கனவிலே, கறுப்பென்ன, வெளுப்பென்ன? கமலியின் கறுப்பு அவள் அழகை முறித்து, அவள் குணத்தைக் கெடுத்துவிட்டதா?

அழ: அப்பா, இப்படிப் பேசிக் கேட்டு எத்தனை நாளாயின!

அனந்: அமுதா, இவையெல்லாம் உனக்குத் தெரியாதவையா? மனிதர் நிறவேற்றுமை எல்லாம் தோலின் மேற்புறத்திலேதானே? கொஞ்சம் தோல் புரண்டுபோய் ரத்தம் கசிந்தால் ஒரே சிவப்புத் தவிரத் தோலின் நிறம் மாதிரியா ரத்தமும் இருக்கிறது? தோல் வெளுப்பானாலும் கறுப்பானாலும் மஞ்சளானாலும் ரத்தம் சிவப்பு அல்லாமல் வேறுண்டோ? இது மனிதர்க்குள் மட்டுமா? உயிர்ப் பொருட்கெல்லாம் ரத்தம் ஒரே நிறந்தானே? இந்த ஒருமையைத் தோலால் மூடிவிட்டு வெள்ளை உயர்வு, கறுப்புத் தாழ்வு, மஞ்சள் மட்டம் என்று என்ன என்ன விந்தைப் பேச்சுக்கள், குழப்பங்கள், கொடுமைகள்! நிறத்தின் பெயரால் செய்யப்படும் அநீதிகள் எத்தனை!

அழ: அப்பா, என்ன! என் கூச்சத்துக்குக்கூட ஒரு மதிப்பு இருப்பது போல் தோன்றுகின்றதே. அதுதானே தங்களை இப்படிப் பேசத் தூண்டிவிட்டது?

அனந்: அது இருக்கட்டும்; அமுதா, இகழ்வதை விட்டுக் கறுப்பை நாம் கைகூப்பிப் புகழவேண்டாமா? அவதாரங்களில் பகவான் கறுப்பை நீக்கிப் பிறக்கவில்லையே! யோசித்தால் தெரியும், அவன் கறுப்பை உயர்த்தின மாதிரி. கிருஷ்ணனாய்ப் பிறந்தான். நிறத்தாலேயே அவனுக்குப் பெயர். கிருஷ்ணன் என்றால் என்ன, கறுப்பன் என்றால் என்ன? இது என் அபிப்பிராயமா? அல்லது புதுக் கொள்கையா? இதைப்பற்றி அவனை அறிந்தவர்கள் சொல்வதையே கேள்: அவனைக் காண 'உள்ளே உருகி' நைந்த ஆண்டாளுக்குக் கண்ணன் 'கருந்தெய்வம்'. அவளைப் பெற்ற பெரியாழ்வாருக்கு அவன், 'காண இனிய கருங்குழற் குட்டன்.' 'கரும் பெரும் மேகங்கள் காணில்' நம்மாழ்வார், 'கண்ணனென்று ஏறப் பறப்பர்.' 'காக்கைச் சிறகினிலே' பாரதியார் கண்ணன் நிறங்கண்டார். அவன் நிறத்துக்குச் சாக்ஷி போதாதா? 'ஆணிலே கறுப்பாய், அவன் புகழ்படைத்தது சரி; பெண்ணிலே கறுப்பாய் இம் மண்ணிலே சிறந்தவள் யார்' என்று சந்தேகமா? ஆஹா! நினைக்கும்போதே என் மனம் பூரித்து மயிர் கூச்சிடுகிறது. அவள் பாண்டவர்க்கு உயிர். மஹா பாரதத்தின் நாயகி பாஞ்சாலி, கிருஷ்ணை; அவள் நிறம் கறுப்பல்லவா? ஐவர் மயங்கியது அவள் கறுப்பிலே. பாரதப்போர் பிறந்தது அவள் சிரிப்பிலே. அவள் அழகுத் தெய்வம், கற்புக்கரசி, இன்றும் தொழப்படும் சக்தி. அவளை நம்பி நம் ஜனங்கள் நெருப்பில் நடந்துவிடுகிறார்களே! அமுதா, கறுப்பும் தெய்வ நிறம் என்று சொன்னால் அது என் கற்பனையா?

அழ.: அப்பா, இதைப் பற்றித் தாங்கள் இவ்வளவு கனிந்து பேசுவீர்களென்று......

அனந்: அமுதா, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்: நம் நாட்டு ஜனங்களின் தோல் நிறங்களைப் பொறுத்து ஒரு கொடி அமைத்தால் அதில் எவ்வளவு இடம் கறுப்பாக இருக்கும்? நம் நாட்டில் எத்தனை பேர் கறுப்பு? அவர்களைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லையா? அவர்கள் நன்மையை நாடி நீ உழைக்கவில்லையா? உன் இராப் பள்ளிக்கூடத்தில் வெள்ளைக்காரர்களா படிக்கிறார்கள்? இந்தத் தேசியத் தெய்விகக் கறுப்பு உன் பெண்டாட்டியிடந்தானா ஆக்ஷேபமாகிவிட்டது? அடே, நாட்டுக்கு ஒரு தருமமும், வீட்டுக்கு ஒரு தருமமுமா?

அமு: அப்பா, தாங்கள் சொல்வதில் ஏதாவது தப்பு என்று சொல்லுகிறேனா? சொல்லத்தான் முடியமா? என் அறிவுக்கும் உணர்ச்சிக்கும் உள்ள பிணக்குத் தீராதபோது எனக்கு இன்பம் ஏது? அது தீர ஒரு வழி சொல்லுங்கள். என் அறிவை மயக்கும் இந்தக் கலக்கம் எப்படி வந்தது?

அனந்: அமுதா, உடல் நோய்களை நிதானிக்க வழி ஒன்றல்ல, இரண்டல்ல. வைத்தியர்கள் உடலின் உட்புறத்தை உள்ளங்கை போலப் பார்த்துவிடுகிறார்கள்; பிறர்க்குக் காட்டி விடுகிறார்கள். நெஞ்சைப் பிளந்து, அதில் உள்ள குற்றம் களைந்து, அதை மறுபடி மூடிவிடுகிறார்கள். அது போல நினைவைப் பிளந்து, மனக் கவலையை நீக்கி, உள்ளத் தெளிவு கூட்ட முடிகிறதா? மனத்திற்கு ஏற்பட்ட ருசி வாசனைகள் எதைப் பொறுத்தவை என்று நிச்சயமாகச் சொல்லமுடிகிறதா? சிலர் தித்திப்பு என்றால் 'பிடிக்காது' என்கிறார்கள். அந்தப் பிடிக்காது என்பது எங்கே எப்படிப் பிறந்தது? அவர்களுக்கெல்லாம் சர்க்கரை கசக்குமா? சிலருக்கு மல்லிகை மணம் பட்டால் தலைவலி வந்துவிடும். அவர்களுக்கு மட்டும் மல்லிகை நாறும் என்று சொல்லுவதா? கறுப்பைக் கண்டால் உனக்கு என்ன பண்ணுகிறது? நீ குழந்தையாய் இருக்கும்போது உன் தாய் உன்னை 'இருட்டிலே போகாதே, இருட்டிலே போகாதே' என்று சொல்லிக்கொண்டே இருப்பாள். நம் வீட்டிலே ஒரு கறுப்புப் பூனை இருந்தது. நீ அழாமல் சீக்கிரம் தூங்க வேண்டுமானால், 'கறுப்புப் பூனை, வந்து பிடிச்சுக்கோ' என்பாள். தூங்குவாயோ இல்லையோ, அழுகை உடனே அடங்கிவிடும். அந்தக் கறுப்புக்கிலி இன்னமும் உன்னை விடவில்லையா?

அமு: அப்பா, இன்று உங்கள் பேச்சிலே புகுந்த புதிய சக்தி என்னைப் பரவசமாக்கிவிட்டது. ஆனால் என் கலக்கம் இப்போதே ஒழிந்துவிட்டது என்று சொல்லிவிடமுடியாது. கலக்கமற்று என் மனம் தெளியும்வரை...

அனந்: உன் இஷ்டம்போல் இரு. இதைப் பற்றின உண்மை உனக்கே விளங்கட்டும். தானே அறிவது போல உள்ளத் தெளிவு தருவது வேறு இல்லை. தன்னை அறிவதுபோலப் பேரின்பம் தருவதும் இல்லை. அமுதா, நாழிகையாய் விட்டது. ஏன் இப்படித் தயங்கித் தயங்கி நிற்கிறாய்? கலங்காதே. போய் உன் காரியத்தைப் பார். நடக்க நடக்கப் பார்த்துக் கொள்ளுவோம்.

அமு: (கீழே வந்து) அம்மா, ரொம்ப நாழியாய் விட்டது. சாப்பிட உட்கார்ந்தால் இன்னும் நாழியாகிவிடும். சும்மா வேலை செய்கிறேன்

என்றால் இஷ்டப்பட்டபோது போகலாமா? நடந்து போனால் சீக்கிரம் போய்ச் சேர முடியாது. சைக்கிளிலேயே போகிறேன். நான் ராத்திரி வராவிட்டால் நீ தூங்காமல் உட்கார்ந்திராதே.

தூழ: அடே, அப்பா என்னடா சொன்னார்? ஏண்டா சாப்பிடாதே போறே? ஒரு வாய் கரைச்சாவது தரேண்டா. ராத்திரியில் வயத்தைப் பட்டினி போடாதேடா.

அமு: அம்மா, உனக்கு உன் கவலை. எனக்கு என் கவலை. நீ கதவைச் சாத்திக்கொண்டு போ.

[அமுதன் சைக்கிளில் ஏறிப் போய் விடுகிறான்.
சுமார் 2 நிமிஷம் கழித்துத் தெருக்கோடியில் ஒரு விபத்து.]

## காட்சி 3

இடம் :—அதே தெரு; டாக்டர் மாதவன் வீட்டு வாசல்.

அனந்: மாதவா, மருந்துப் பெட்டியை எடுத்துக்கொண்டு சீக்கிரம் வா.

மாதவன்: ஏன் சுவாமி? யாருக்கு என்ன?

அனந்: அமுதன் சைக்கிளிலிருந்து விழுந்துவிட்டான். தெருக் கோடியில் திரும்பும்போது முடக்கிலிருந்து வந்த வண்டியில் மோதிக் கொண்டானாம். மூர்ச்சை போட்டிருக்கிறது. காலிலே ஒரு காயம். ரத்தம் கொட்டுகிறது. கோடி வீட்டுக்காரர் வண்டியில் போட்டுக்கொண்டு வந்தார். அப்படியே மாடிக்கு எடுத்துப்போய்க் கட்டிலில் விடச்சொல்லி விட்டு உன்னைக் கூப்பிட வந்தேன். உன்னைப் பார்த்ததும் எனக்குப் பாதிக் கவலை நீங்கிவிட்டது. வேண்டியதை எடுத்துக்கொண்டு உடனே வா.

மாத: இதோ வந்துவிட்டேன். (சற்றுக் கழித்து அனந்தன் வீட்டு மாடியில்) அம்மா, விலகி நில்லுங்கள். காற்றைத் தடுக்காதீர்கள். சுவாமி, இந்த ஒரு காயந்தானே? இருந்தாலும் ரொம்ப ரத்தச் சேதம். தலையில் ஏதோ அடிபட்டிருக்கிறது. இதோ பாருங்கள், புடைத்திருப்பதை. இதனால் தான் மூர்ச்சை. முதலில் காயத்தைக் கட்டிவிடுகிறேன். மற்ற யோசனை அப்புறம்.

தூழ: அடே மாதவா, நான் என்னடா பண்ணுவேன்? குழந்தை சாப்பிடக்கூட இல்லைடா! பிழைப்பானடா?

அனந்: வெறுமே இரு. இப்போது பேச்சுக் கொடுக்காதே.

மாத: பெத்த வயிறு அப்படித்தான் இருக்கும். காயத்தைக் கட்டி விட்டேன். இனி ரத்தம் வராது. இதற்கு மேலே எனக்கு ஒரு சிகிச்சை தோன்றுகிறது. இவன் ஸ்திதிக்கு அது கை கண்ட முறை. உங்களில் ஒருவர் ரத்தம் இவனுக்கு ஒத்துக்கொண்டால் அதை எடுத்து இவன் உடம்பில் ஏற்றிவிடலாம். எது ஒத்துக்கொள்ளுமென்று முதலில் பரீக்ஷை செய்யவேண்டும். தங்கள் யோசனை என்ன?

அனந் : மாதவா! என்னை ஏன் கேட்கிறாய்? உன் சாஸ்திரத்திற்கு நீ அதிகாரி. வேண்டியதைச் செய்.

மாத : சரி, சோதிக்கக் கொஞ்சம் ரத்தம் போதும். இப்படி வந்து விரலை நீட்டுங்கள். இந்த ஊசியால் குத்திக் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன். (அப்படிச் செய்தபின்) அம்மா, நீங்கள் இப்படி வாருங்கள். விரலை நீட்டுங்கள். (ஊசியால் குத்துகிறார்.)

குழ: அம்மாடி!

மாத: வலிக்கிறதா, அவ்வளவுதான், போங்கள். (கமலியைப் பார்த்து) இப்படி வா அம்மா, விரல் முன்னமே தயாரா? (குத்தி எடுத்தபின்) போதும், போ. (எதையோ பெட்டியில் தேடுகிறார்.) அடடா, நெருப்புப் பெட்டியை எடுத்து வீட்டிலே கீழே வைத்தேன்; அப்படியே மறந்து விட்டேன். என்ன செய்வது? அது வேண்டுமே. (உடனே கமலி கீழே போகிறாள். அதைக் கண்டு) கீழே போகிறாயா, அம்மா? நெருப்புப் பெட்டிக்காகத்தானே? சரி.

கமலி: (கீழே போய்) ஈசுவரா! இது உன் சோதனையா? கைக்கு எட்டாதது கண்ணுக்கும் எட்டாமல் போகட்டும் என்ற நினைவா? என்னுடையது என்ற நினைவிலாவது உயிர் வைத்துக்கொண்டிருந்தேனே. அதற்கும் ஆபத்தா? டாக்டர் ரத்தம் போதும் என்கிறாரே. ஐயோ! என் உயிரைக் கறந்து அவர் உடம்பிலே ஏற்றிவிட முடியாதா? அதற்கு வைத்தியத்தில் வழியில்லையா? ஈசுவரா! ஒரு வரன் கொடு. மூன்றில் என் ரத்தம் மாத்திரம் ஒத்துக்கொள்ளட்டும். நான் என்ன செய்கிறேன் பார்! என் மனத்தை அதிலே புகுத்தி, என் அன்பை அதிலே திணித்து, என் உயிரை அதிலேயே கரைத்துவிடுகிறேன். நான் அவர் உயிரிலே கலந்துவிட்டேனானால்...

குழ: (மாடியிலிருந்து) கமலீ, சுருக்க வா. (கமலி மாடிக்குப் போய் நெருப்புப் பெட்டியை டாக்டரிடம் கொடுக்கிறாள். அவர் விளக்கேற்றி ஏதோ ஓர் ஊசியைக் கொதிக்கவைக்கிறார்.)

மாத: அது கொதிக்கட்டும். சுவாமி, இப்படி வந்து இதைப் பாருங்கள். மூன்றில் இந்தப் பெண்ணின் ரத்தந்தான் இவனுக்கு ஒத்துக் கொள்ளுகிறது. அது கலந்தும் அவன் ரத்தம் திரியவில்லை, பார்த்தீர்களா? இனித் தாமதம் வேண்டாம். அம்மா, இங்கே வா. (கமலி அப்படியே வருகிறாள்.) இப்படிக் கொஞ்சம் சாய்ந்து படுத்துக்கொள். (அதுவும் செய்து, கமலி கண்ணை மூடிக் கொள்கிறாள்.) என்ன அம்மா, பயமாயிருக்கிறதா? ஒன்றும் செய்யாது. (வேண்டியது செய்து ரத்தத்தை எடுத்துக்கொண்டு) அம்மா, அவ்வளவுதான், மெள்ள எழுந்திரு. (கமலி எழுந்து நிற்கிறாள்.) நீ இங்கே இருந்தால் நின்றுகொண்டுதான் இருப்பாய். சிரமமாய் இருக்கும். கீழேபோய் உட்கார்ந்துகொள். அப்புறம் வரலாம். (கமலி இறங்கிப் போய்விடுகிறாள்.) சுவாமி, நீங்கள் இப்படி வந்து இவனைப் பிடித்துக் கொள்ளுங்கள். இதை இவன் உடம்பில் ஏற்றிவிடுகிறேன். (அப்படியே செய்தபின் அமுதன் கொஞ்சம் அசைந்து கொடுக்கிறான்.)

அமு: அப்பா! அப்பா!

அனந் : அமுதா! (பதிலில்லை.) அமுதா, என்னடா இப்படிப் பண்ணிக்கொண்டாய்? கலக்கம் தீர இதுவா வழி? மாதவன் இல்லாவிட்டால் என் கதி—என் கதி மட்டுமா!

மாத : சுவாமி, காப்பாற்றினது மாதவன்தான். 'அவன்' பெயர் கொண்டதற்காகவா, எனக்கு இவ்வளவு மதிப்பு?

அனந் : ஏன், மாதவா, உனக்கு அப்பெயர் பொருந்ாதா? உனக்கு என்ன குறை?

மாத : ஆமாம், உங்கள் உறவு இருக்குமட்டும் எனக்குக் குறைவு ஒன்றும் இல்லை. நேரமாய்விட்டது. இன்று பார்க்க வேண்டிய கேஸ் ஒன்று பாக்கி. நான் போய்வருகிறேன். இனி, அமுதனைப் பற்றிக் கவலை இல்லை. மூர்ச்சை தெளிந்துவிட்டது. களைப்பினுல் கொஞ்சம் கண் அயர்ந்திருக்கிருன். அவ்வளவுதான். அம்மா, கவலைப்படவேண்டாம். எல்லாம் கொஞ்ச நாழியில் சரியாய்ப் போய் விடும். நான் போய் வருகிறேன். (சாமான்களைச் சேகரித்துக்கொண்டு புறப்படுகிருர்.)

அனந் : மாதவா, உனக்கில்லாக் கவலை எனக்கு இல்லை. நானும் உன்னுடன் வருகிறேன். இவ்வளவு சாமான்களையும் நீயே எப்படி எடுத்துப் போவாய்? அந்தப் பெட்டியை என்னிடம் கொடு. (பெட்டியை எடுத்துக் கொண்டு குமுதத்தைப் பார்த்து) இதைக் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்துவிடுகிறேன்; கவலைப்படாதே.

[மாதவனும் அவரும் இறங்கிப் போகிருர்கள்.]

## காட்சி 4

இடம்: அதே வீடு.

[டாக்டரும் அனந்தாசாரியும் சென்றபின், சிறிது நேரம் கழித்ததும், அமுதன் புரண்டு விழித்துக்கொள்கிருன்.]

அமு : அம்மா, அம்மா,

குமு : என் கண்ணே!

அமு : அம்மா, கமலி எங்கே? களைப்பாக இருக்கிறது. பால் இருந்தால் கொஞ்சம் கொண்டு வரச்சொல்.

குமு : நிஜந்தானு? நீதான் பேசறயா? என் கண்ணே, நீ பிழைச்சாப் போரும்னு இருந்துதுடா; நீ பிழைச்சு, உன் வாயாலே கமலியை வரச்சொல்லுன்னு கேக்கக் கொடுத்து வச்சேனே, யார்பண்ணின தபஸ்டா இப்படிப் பலிச்சுது! என்ன அதிசயமடா இது?

அமு : அம்மா, என்ன சொல்லுகிருய்? தூக்கக் கலக்கமா? சீக்கிரம் அவளை வரச்சொல். அதிசயம் அப்புறம் ஆகட்டுமே.

குமு : என் கண்ணே! நன்ரு வரச்சொல்றேண்டா. எல்லாம் அவளையே கேட்டுக்கோடா. சிறுசானுலும் சமத்து. பெரிய இடம், பெருத்த பணம், ரொம்பப் படிச்ச பொண் என்னு எத்தனையோ வரன் வந்துதே; அதெல்லாம் உங்க அப்பாவுக்குப் பிடிச்சுதா? அவர் செய்த

காரியம் எதுடா சோடையாப் போச்சு? உனக்கு நடுவிலே ஏதோ போராத காலம்; அப்படித் தோணியிருந்தது. இன்னிக்குக் கூட...

அழ: அம்மா, பிரசங்கம் பண்ண ஆரம்பித்துவிட்டாயே.

தழ: இல்லேடா அப்பா. இதோ வரச்சொல்றேண்டா. (கீழேபோய்) கமலி, அங்கே என்னடி பண்ணிண்டு இருக்கே? பாலா காச்சறே? அடி என் சமத்துக் கிளியே! உன் பொறுமை தலைக்கூடித்துடி. அவனும் பிழைச்சு, அவன் மனசும் திரும்பித்தே.

கமலி: என்ன அம்மா! என்ன!

தழ: அவனுக்குக் களைப்பா இருக்காம். பாலை எடுத்துண்டு உன்னை வரச்சொன்னான்.

கம: என்ன அம்மா சொல்லுகிறீர்கள்? என்னையா வரச்சொன்னார்? மாமனார் மாடியில் இல்லையா?

தழ: மாமனார்தான் மாதவனோடு போனாரே; மாடியிலே இல்லை. அவன் உன்னைத்தான் வரச்சொன்னான். சீக்கிரம் போ.

கம: அம்மா, நீங்கள் இப்படித் திரும்பி நில்லுங்கள். (சேவிக்கிறாள்.)

தழ: என்னடி இது! என்னை என்னத்துக்கடி இப்போ சேவிக்கிறே?

கம: அம்மா, நீங்கள் சுமந்து பெற்ற பிள்ளை. அதை நான் மறந்து விடுவது எப்படி? பழத்தைத் தின்பதுதானா? அது பழுத்த மரத்தை நினைப்பதில்லையா?

தழ: கமலி, நீ அழகுன்னு இருந்தேன்; சமத்துன்னு இருந்தேன். அடி! இப்படிப் பேசுவேன்னு யாருக்கடி தெரியும்! என் கண்ணே, நீ மஹாராஜியாய் ஆயிரங் காலத்துக்குத் தாலியைக் கட்டிண்டு இருடி. எனக்கு இருப்பது ஒரு பிள்ளை. உன்னாலே என் குலம் விளங்கணுமடி.

அழ: (மாடியிலிருந்து) கமலீ, கமலீ.

தழ: அவனே கூப்படறது கேக்கறதா? நான் சொன்னது நிஜந்தானே? சட்டுன்னு போடி.

கம: (மாடியில் ஏறிக்கொண்டே) ஸ்வாமீ! நான் கேட்டது எவ்வளவு? நீ கொடுத்தது எவ்வளவு? இனி, நான் கேட்க மாட்டேன். நீ பார்த்துக் கொடுத்ததுதான்.

அழ: (காலடிச்சப்தம் கேட்டும் கமலி நுழையாதது கண்டு) கமலீ, ஏன் அங்கே நிற்கிறாய்? இப்படி வா. (அவள் உள்ளே வந்ததும்) கமலி, உன்னைக் கறுப்பு என்று நினைத்துக் கலங்கினேனே; நீ கறுப்பல்ல; கரும்பு; முல்லை அரும்பு. கரும்பு தித்திக்கும்; முல்லை மணக்கும். நீ தித்திக்கிறாயா அல்லது மணக்கிறாயா பார்க்கிறேன்; கிட்டே வா.

---

## : குழந்தை சக்தி ஸ்வரூபம் :

* எஸ். ஜகந்நாதன் *

தாய் தந்தையர் குழந்தையை அழகுஸ்வரூபமாகவும், உற்றார் உறவினர் அன்புஸ்வரூபமாகவும், அன்பர்கள் ஆனந்த ஸ்வரூபமாகவும், சாதுக்கள் சாந்தஸ்வரூபமாகவும், புராணிகர் பாகவதர் பேரறிஞர் வித்துவான்கள் வேதாந்திகள் பக்தர் பித்தர் பண்டிதர் பாமரர் எல்லோரும் பரப்பிரும்மஸ்வரூபமாகவும் போற்றுகிறார்கள். குழந்தையின் மனோதத்துவசாஸ்திரிகளும் அதன் அபிவிருத்தியைத் தினமும் கவனிக்கிறவர்களும் அதைச் சக்திஸ்வரூபமாகவே கருதுகிறார்கள். சுயசக்தியில் அதற்கு நம்பிக்கை உண்டு. சுயசக்தியினாலேதான் அது நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. சுயசக்தியானது கடவுளது கடாக்ஷமாகும்.

அறிவு வளர்ச்சியில் காணப்படும் குணாதிசயங்கள்: ஒரு குழந்தை எப்படி வரவரத் தேகவளர்ச்சியைப் பெறுகிறதோ, அம்மாதிரியே அறிவுவளர்ச்சியையும் பெற்றுவருகிறது. மித உஷ்ண ஜலத்தில் அது ஸ்நானம் செய்கிறது. கெண்டியிலிருந்து தண்ணீர் குடிக்கிறது. ஜலத்தை அளைகிறது. மழைஜலம் விழுவதைப் பார்க்கிறது. தாய் தண்ணீர் மொண்டு வருகிறதைக் கவனிக்கிறது. குழாய் வழியாகத் தண்ணீர் வீழ்கிறதும் அதற்குத் தென்படுகிறது. தண்ணீரை ஊற்றி ஓடவிட்டுப் பார்க்கிறது. அடுப்பு மூட்டி வெந்நீர்ப்பானை வைக்கிறதையும் கவனிக்கிறது. தானே ஒரு சமயம் ஒரு விறகு, ஒரு வறட்டி, நெருப்புப்பெட்டி கொண்டுவர இஷ்டப்படுகிறது. இவைகளெல்லாம் தினசரி ஸம்பவங்களேயாகும். ஒரே விஷயத்தைப்பற்றின தொடர்ச்சியான அறிவும், அது மற்றொரு சம்பவத்துடன் பிணைக்கப்படுவதும், தானே செய்து கற்கவேண்டுமென்பதும் அதனிடத்தில் இயற்கையாகவே கல்விகற்பதற்குரியனவாகக் காணப்படும் குணாதிசயங்கள் ஆகும். சொல்வதைச் சொல்லும்; செய்வதைச் செய்யும்; ஆசைதீரச் சொல்லும்; ஆசைதீரச் செய்யும். இத்தகைய சுபாவமுடையதே குழந்தை.

வளர்ச்சிக்கு ஏற்ற கல்விப் போதனை: குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருகிறது. அந்த வளர்ச்சியையும் பருவத்தையும் அனுசரித்த கல்விப் போதனையும், சுய சக்தியை வளர்க்கக்கூடிய கல்விமுறைகளுமே ஏற்றன

வாகும். குழந்தை தன்னையும் தன் சுற்றுப்புறத்திலுள்ள விஷயங்களையுமே சீக்கிரம் அறிந்துகொள்ளுகிறது. தன் தேகம் தன் உணவு தன் உடை தன் வீடு இவை நான்கும், தன் இருப்பிடமும், அங்கே தோன்றும் முயற்சிகளும் சதாகாலமும் அதன் கண்ணைக் கவருகின்றன. அத்தகைய விஷயங்களை மேலே சொல்லப்பட்ட இயல்புக்குத் தக்கபடி ஒழுங்குபடுத்துதல், முன்பின் யோசனையை அனுஷ்டித்து மாற்றிக்கொள்ளுதல், குழந்தைகளின் மனோபாவத்தைக் கண்டு திருத்தியமைத்தல் முதலிய ஏற்பாடுகளைக் கைக் கொள்ளுவதுதான் நன்மையாகும்.

**காலசக்கரத்தின் வேகம்:** 'ஒருவர் இராமாயணக் கதையைப் படித்துவிட்டால் அவர் வேறொன்றும் படிக்க வேண்டியதில்லை; அறிவுப் பெருக்குக்கு அது ஒன்றே போதும்' என்று சொல்லுவதுண்டு. பூகோள சாஸ்திரம், தேசசரித்திரம், இயற்கை அழகு, பிரயாணம், குடும்ப பரிபாலனம், சண்டைசச்சரவு, சமாதானம், தயை, பக்தி, இம்மாதிரியான பல முக்கிய விஷயங்கள் அக்கதையினின்று தெரிய வரும். அவ்வாறே வாழ்க்கையிலுள்ள ஒரு சம்பவத்திலேயே பாஷை, கணிதம், பூகோளம், இயற்கைச்சாஸ்திரம், கைத்தொழில் இவை காணப்படுமாதலால் தற்காலக் கல்வியில் இம்முறையை ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டு விட்டார்கள். காலசக்கரத்தின் வேகத்தைப் பாருங்கள்: பழையன கழிதலும் புதியன புகுதலும் ஒருவகை. புதியன மறையப் பழையன திரும்பத் தோன்றுதல் மற்றொரு வகை. தற்காலம் நாம் இரண்டாவது வகையை அனுஷ்டித்துவருகிறோம். இம்மாதிரியான அனுஷ்டானத்தில் மற்றொன்றும் தெரியவருகிறது: தனிப்பட்ட பள்ளிக்கூடம் என்பது மறைந்து பாலர் குருகுலம் தோன்றவேண்டும் என்பது தெளிவாகிறது. அப்பொழுதுதான் இம்முறையைச் செம்மைபெற அனுஷ்டிக்கமுடியும்.

**பள்ளியில் அனுஷ்டிக்கக்கூடிய வாழ்க்கைச்சம்பவங்கள்:** உபாத்தியாயர்களே குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தக்கபடி முறைகளையும் விஷயங்களையும் அமைத்துக்கொள்ளுவது அவசியமாகும். கைவேலைக்கு அனுகுணமாக ஆராய்ந்தெடுப்பது பொருத்தமானது.

1. பொம்மைக்கடை
2. பாப்பாவின் வீடு
3. சுத்தமான வீடு
4. தெரு அமைப்பு
5. ஊர் அமைப்பு
6. தேதிப்பெட்டி
7. கோயில் உற்சவம்
8. ரெயில் பிரயாணம்
9. வாகனங்கள்
10. பாலம் கட்டுதல்

11. கல் சூளை
12. புஸ்தகக்கடை
13. ரெயில்வே ஸ்டேஷன்
14. நவராத்திரிக்கொலு
15. தபாலாபீஸ்
16. மிருகக் காட்சிச்சாலை
17. தேத்தண்ணீர்
18. பிறந்தநாள் விழா
19. மாதப்பத்திரிகை
20. புஸ்தகசாலை முதலியன

ஒரு சம்பவத்தை முன்யோசனை செய்து ஒழுங்குபடுத்துவது: உதாரணம்: தபாலாபீஸ்.

நேரில் பார்வையிடுதல்

போஸ்ட் மாஸ்டர் உத்தரவு பெற்றுக்கொண்டு அங்குள்ள நடவடிக்கைகளைக் குழந்தைகளுடன் கவனித்தல்:

கை வேலை

வகுப்புக்குழந்தைகளை 7, 8 பாகமாகப் பிரித்தல்.

1. அட்டைவேலை—நடவடிக்கைகளுக்கு வேண்டிய இட அமைப்புச் செய்தல்.
2. தையல் வேலை—துணிப்பைகள் 2 செய்தல்.
3. கார்டும் கவரும்: டிராயிங் காகிதத்தில் கார்டையும், சதுரக் கவர்களுக்கும் நீண்ட சதுரக் கவர்களுக்கும் அச்சுச் செய்துகொண்டு அவற்றையும் செய்தல்.
4. கடிதங்களைப் பிரிக்கும் அலமாரிகள்: பழைய சோப்புப் பெட்டி, சாக்குப் பெட்டிகள், மெல்லிய ஆணி, சுத்தி:
   (அ) பெட்டியில் சேர்ந்த கடிதங்களை ஊர் வாரியாகவும் செல்லும் ரெயில்வே லயன் வாரியாகவும் பிரிக்க 6 அறையுள்ள அலமாரி.
   (ஆ) ஊருக்கு வந்த கடிதங்களைத் தெரு வாரியாகப் பிரிக்க 6 அறையுள்ள அலமாரி.

5. தபால் பெட்டி: பழையபெட்டி ஒன்றைத் தபால் பெட்டியைப்போல் அமைத்தல்.

6. ஸ்டாம்பு குத்துவதற்கேற்ற பிரகாரம் உருளைக்கிழங்கு வாழைக்காய் இவைகளில் எழுத்துக்களைச் செதுக்குதல். கூடுமானால் இதைமாத்திரம் மரத்திலேயே செய்து கொள்வது உத்தமம்.

எழுத்து வேலை

1. மணியார்டர் பாரம் பூர்த்தி செய்தல்.
2. மணியார்டர் ரசீது ஒன்றின் மாதிரி தயார் செய்தல்.
3. சேவிங்க்ஸ் பாங்கியிலிருந்து பணம் திரும்பப்பெறப் பாரம் தயார் செய்தல்.

4. கடிதம் எழுதுதல். (கடிதத்தில் எழுதக்கூடிய அம்சங்களைக் குறித்த சில விவரங்களை உபாத்தியாயர் குறிப்புக்களாக எழுதலாம்.)

ஸ்டாம்பு சேர்த்தல்

ஒரு ரூபாய்க்குச் சரியான காலணா, அரையணா, ஓர் அணா, இரண்டணா, கால் ரூபாய், அரை ரூபாய் ஸ்டாம்புகளை வரிசைப்பட ஓர் அட்டையில் ஒட்டச்செய்யலாம். நாணயக்கணக்குகளிலும் கால் அரை பின்னவாய்பாடுகளிலும் இவற்றை உபயோகிக்கலாம்.

அனுஷ்டானம்

சேவிங்க்ஸ் பாங்கி நடவடிக்கை: தினம் ஒவ்வொருவர் புஸ்தகத்திலும் அவரவர் செலுத்துகிற அல்லது திருப்பிப் பெறுகிற பணத்தை ஒருவர் எழுதி முத்திரை குத்தவேண்டும். மற்றொருவர் தினசரி வசூல் புஸ்தகத்தில் பெயர், கட்டப்பட்ட பணம் அல்லது எடுத்த தொகை, கையிருப்பு இவற்றைக் குறிக்கவேண்டும்.

மணியார்டர்: பூர்த்தி செய்த பாரத்தை ஒருவர் கவனித்து ரசிதில் எழுதவேண்டியவற்றைச் சொல்ல மற்றொருவர் ரசீது பூர்த்திசெய்யவேண்டும். பிறகு முத்திரையிட்டுப் பணம் அனுப்புகிறவருக்கு ரசீது கொடுத்துவிடவேண்டும்.

தபால் கடிதங்கள்: அனுப்பு:

1. எழுதின கடிதங்களை முத்திரையிடுதல்.
2. ஊர், ரெயில்வேக்குத் தக்க பிரகாரம் பிரித்தல்.
3. மூட்டை கட்டுதல்.

வரவு:

1. வந்த மூட்டையைப் பிரித்தல்.
2. கடிதங்களை முத்திரையிடுதல்.
3. தெருவாரியாகப் பிரித்தல்.
4. கடிதங்களை விலாசதாரருக்குச் சேர்ப்பித்தல்.

ஆசிரியரும் நூதனபாடதிட்டமும்: மேலே காட்டிய முறைப்படி பாடம் நடத்த உபாத்தியாயர் பெருமுயற்சி செய்கிறவராயும் பல விஷயங்களில் அறிவு முதிர்ந்தவராயும் முன் யோசனையுடன் தம் வேலைகள் எல்லாவற்றையும் ஒழுங்காக அமைக்கக்கூடியவராயும் போட்ட திட்டத்தை அனுஷ்டித்துக் காட்டுவதில் சிரத்தையுள்ளவராயும் இருக்கவேண்டும். சுருங்கச் சொல்லின் இவர் அஷ்டாவதானம் செய்யக்கூடியவராயும் அதேசமயத்தில் அதிகப் பொறுமை

யுள்ளவராயும் இருத்தல் அவசியம். பற்பல குழந்தைகளுக்கு அவரவர் எடுத்துக்கொண்ட விஷயங்களைப்பற்றி மேனமேலும் யோசனைகள் சொல்லி, எழுதிவருகிறதைத் திருத்தியோ, செய்து வருகிறதை அபிவிருத்தி செய்தோ பிள்ளைகள் அபிவிருத்தியில் கண்ணுங் கருத்தும் உள்ளவராய் இருக்கவேண்டும். ஒவ்வொரு பிள்ளையிடமும் நெருங்கிப் பழக அரிய சந்தர்ப்பம் நேரிடுகிறபடியால் அவரவர்கள் மனோபாவம், விருப்பம், சுபாவம், புத்திக்கூர்மை இவற்றை அறியக்கூடும். மனமில்லாதவன் செய்யும் வேலை அன்பில்லாதாள் இட்ட அமுதுக்கு ஒப்பாகும். ஆகவே முழுமனத்துடன் வேலைசெய்பவருக்கு இம்முறையில் நூதனமான அரிய உணர்ச்சி தோன்றும். தமது சக்தி ஓங்கப் பாலர்களது சக்தி ஓங்குவதையும் கவனிக்கக்கூடும். குழந்தைகளுடனிருந்து குழந்தைகளுக்காக ஜீவிப்போம் என்கிற நோக்கத்தை இவர்கள் தமது வாழ்நாள் கொள்கையாகக் கொள்ளவேண்டும்.

**குழந்தைகளும் நூதன பாடதிட்டமும்:** "எங்கள் வீட்டுக் குழந்தைக்கு விளக்கு ஏற்றத் தெரியாது. அவன் கடைக்குப் போய் அறியான். பள்ளிக்கூடம் உண்டு, வீடு உண்டு; வாசற்படி விட்டுக் கீழ் இறங்கமாட்டான்" என்றெல்லாம் சிலர் சொல்லுகிறதுண்டு. நூதன முறையானது சகல வேலைகளையும் தாமே செய்து பழகிக்கொள்ளுவதற்குரிய சந்தர்ப்பத்தை அளிக்கிறது. குப்பை கூட்டுதல், மண்வெட்டி எடுத்துக் கொத்துதல், உலாவிவருதல் இவைகள் எல்லாம் சிலருடைய வேலைகளே என்றும் சில தாழ்ந்தவை என்றும் நினைக்கமுடியாது. எல்லாவற்றையும் தமது சுய அனுபவத்தில் கொண்டுவர அப்பியாசம் செய்தாகவேண்டும். உலக நாடகத்தையே நடித்துக்காட்டும் சுபாவமுள்ள குழந்தைக்கு இது ஏற்றதேயாகும்.

**நூதன பாடதிட்டத்தைத் தழுவிய சில ஏற்பாடுகள்:** இந்நாள் வரையில் உபாத்தியாயர் சொல்லியதை மாத்திரம் மனத்தில் ஞாபகம் வைத்து ஒப்பிக்க வேண்டும் என்ற முறையினால் சுயசக்தியைப்பற்றி யாவரும் கவனிக்கவே இல்லை. மேலும் அப்படிச் சுயேச்சையாக ஏதாவது செய்யச்சொன்னால் ஒரே ஆர்ப்பாட்டமும் கூச்சலும் ஏற்படுகின்றனவே தவிர, ஒழுங்கான வேலைத்திட்டம் காணப்படவில்லை. பெற்றோர்களும் உபாத்தியாயர் பாடம்சொல்லுவது, குழந்தைகள் ஒப்பித்துப் பரீக்ஷை தேறுவது என்பவற்றை மாத்திரம் பொருட்படுத்துகிறார்களேயன்றி, செய்கைப் பரிசோதனை முறைக்குச் செவிசாய்ப்பதில்லை. ஓய்வு நேரம் இருப்பினும், அதைக் கல்விவளர்ச்சிக்கு அனுகுணமான வழியில் பயன்படுத்திக் கொள்ளத்தக்க அனுஷ்டானம் ஒன்றும் காணப்படுவதில்லை. மேலே

சொல்லப்பட்ட நூதனமுறையை ஆரம்பிப்பின் தற்சமயம் காட்டிய குறைகள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து போகும். சொல்லிக் கொடுத்த பாடமும் கட்டிக்கொடுத்த சாதமும் எத்தனை நாள் நிற்கும் என்பது பழமொழி. இயற்கை வாசனையை மேலும் பரிமளிக்கச்செய்யச் செயற்கை வாசனையும் வேண்டியதே.

இம்முறையைக் கைக்கொள்ளப் பள்ளிக்கூடத்தில் அடிப்படையான சில உபகரணங்கள், புத்தகசாலை, தொழிற்கூடம், பரிசோதனைஸ்தலம் போன்ற சில சாதனங்கள் ஏற்படவேண்டும். வெறுங்கை முழம் போடமுடியாது. ஆரம்பத்தில் சிலவற்றைத் தேடி வைத்துக்கொண்டால் பின்பு தக்க காலத்தில் அனுபவத்தினாலும் தேவைக்கு ஏற்றபடி வேண்டியவற்றைச் சேர்த்துக் கொள்ளமுடியும். முக்கியமாக, வீணாய்ப் போகும் பண்டங்கள், படங்கள், படப்புஸ்தகங்கள், மரப்பலகை, அட்டைத் துண்டுகள், பெட்டிகள், பழைய ஸ்டாம்புகள் இவைகளைக் கொண்டே பல சாதனங்களைச் சுலபமாய்ச் சேகரிக்கக்கூடும். சில பேர் இவைகளைச் சாதித்துக் காட்டவேண்டியும் இருக்கிறது. இம்மாதிரி பழைய வஸ்துக்களைப் புதுப்பித்து உபயோகிப்பதிற்கூட நல்ல யோசனையும் முயற்சியும் வேண்டியிருக்கின்றன.

இம்முறையைத் திடீரென்று கைக்கொண்டால் தற்காலப் படிப்புக்கு ஹானி வந்து விடுமா அல்லது படிப்புக் குறைந்து விடுமா, தற்காலப்படிப்புடன் நூதனமுறையை எப்படிப் பொருந்த வைக்கலாம் என்பவற்றைக் கவனிக்க வேண்டும். பொது அறிவு சம்பந்தமான பாடங்களாகிய பூகோளம், சரித்திரம், ராஜாங்க முறை, இயற்கைப்பாடம், சிறுவர் கைவேலை, சுகாதாரபோதனை இவைகளில் நூதன முறையில் சில விஷயங்களை அடிப்படையாக எடுத்துக்கொண்டு அவைகளைப் பிணைத்துக் கொள்ளக்கூடும். இவைகளின் பொருட்டுத் தனிப்பாடத்திற்கு அவசியம் ஏற்படாது. சில முக்கிய அம்சங்கள் நீக்கப்படுமாயினும் அவைகளைப் பிரத்தியேகமான வகுப்புக்கு என்று தனிப்படுத்தாமல் பல குழந்தைகளுக்கு ஓரேதடவையில் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஏற்பாட்டை அனுஷ்டிக்கக்கூடும். இவை சம்பந்தமான பாஷை கணிதம் முதலியவற்றைப் பிரத்தியேகமான பாடங்களிலும் வேறு நேரங்களிலும் கூட எடுத்துக்கொள்ளலாம்.

வார்தாதிட்டமும் குழந்தையின் செய்கைமுறையையும் சக்தியை வெளிப்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டதே. மேலேகாட்டிய முறையைப் பாலர்கள் விஷயத்தில் அனுசரிப்பின் பருவத்திற்கேற்ற பிரகாரம் ஒரே விஷயத்தில் அவர்கள் செய்கையைத் திருப்பி, அதில் முன்னேற்றம் அடையச் செய்யலாம்.

அந்தக் காலத்தில் தொழில்மூலம் கல்வி புகட்டுவது ஏற்றதாகவே இருக்கும். வார்தா திட்டப் பாடமுறையில் மூன்று அம்சங்கள் உள்ளன. அவை கைத்தொழிற் கிரமம், பாடதிட்டக் கிரமம், கைத்தொழிலுடன் கலந்த பாடதிட்ட விஷயங்கள் என்பவைகளே. மேலே நாம் சொன்னமுறையிலும் உபாத்தியாயர் இம்மூன்று திட்டங்கள் வகுத்தால் ஒன்றிலும் குறைவின்றிக் கல்வியைப் புகட்டக்கூடும். காலைவேளையில் பாஷை, கணிதம் போன்ற பாடங்களுக்கும் மத்தியான்ன வேளையில் செய்கை, சக்தியை வெளிப்படுத்துதல், கைவேலை, தோட்டம், உலாவிவருதல், குழந்தைச்சங்கங்கள், விளையாட்டு முதலியவைகளுக்கும் இடங்கொடுக்கவேண்டும். ஒழிவு நேரங்களிலும் விடுமுறை நாட்களிலுங்கூட இவற்றில் சிலவற்றை ஒழுங்கு படுத்தவோ, தொடர்ந்து நடத்தவோ வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படும். இம்முறையில் அமைந்த கல்வியில் பாஷைப் பெருக்கு, தன் கதையைத் தானே சொல்லும் முறைகள், நூதன விடுகவிகள், உலக ஞானம், தினசரி நடவடிக்கைகள் சம்பந்தமான மனக்கணக்குப் பயிற்சி முதலியவை அதிகமாக ஏற்படுகின்றனவென்று நிச்சயமாகச் சொல்லக்கூடும்.

"இனி, குழந்தைகளுக்கென்றே ஒரு புதுமையான உலகம் சிருஷ்டிக்கவேண்டும். சுயசக்தியின் மூலமாகவும் குழந்தைகளுடைய தேகமன வளர்ச்சிக்குத் தக்கவாறும் கல்வி கற்க ஒரு பாடதிட்டமும் அமைக்கவேண்டும்" என்கிறார் ஆராய்ச்சியுடன் அனுபவம் வாய்ந்த மாண்டிஸாரிப் பெருமாட்டியார். சதாகாலமும் கைகட்டி வாய்பொத்திப் பாடம் கற்பது மறையவேண்டும். சுயசக்தியைப் பெருக்குவதிலும் கற்பதைப் பிள்ளைகள் தாமே அனுஷ்டித்துக் காண்பிப்பதிலும் ஆசிரியர் கவனத்தைச் செலுத்த வேண்டும். ஆசிரியரே கல்வித்தேருக்குச் சரியான அச்சுப் போன்றவர். குழந்தைகளுக்காகச் சிருஷ்டிக்கப்படும் நூதனமான குழந்தை உலகத்தில் உபாத்தியாயர்களுக்கும் பங்கு உண்டு. சிரத்தையும் ஊக்கமும் குழந்தைகளின் சக்திப்பெருக்கில் அன்பும் அபிமானமும் உள்ளவருக்குத்தான் பங்கு கிடைக்கும். உலகமே கடவுளின் சிருஷ்டி விசித்திரங்கள் நிறைந்ததாகும். தேகசக்தி, மனோசக்தி, ஆத்மசக்தி நிறைந்த குழந்தைதான் அச்சித்திரங்களில் முதன்மையாகத் தோன்றுகிறது. அதே குழந்தை தன் சக்தியைப் பெருக்கி, தன் சக்திக்கேற்ற நூதன சித்திரங்களை அமைத்துக் காட்டுகிறது.

# : அவர் எங்கே இருப்பார்? :

* எஸ். அம்புஜம்மாள் *

ஏன்? மற்றப் பெண்களைப்போலத்தான் நானும். மனத்திலே நகை புடைவைகளில் அளவற்ற ஆசை; தன் சௌந்தர்யத்தைப் பிறர் புகழ்ந்துகூற அதைக் கேட்பதில் ஒரு குதூஹலம்; கணவன் காதலைப் பெறுவதில் ஒரு நாட்டம்; கணவன் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்க நல்ல அந்தஸ்தில் வீடு வாசல் குழந்தை குட்டிகளுடன் குடித்தனம் செய்வதைப்பற்றிய பகற் கனவு பல காண்பதில் ஒரு தனி மோஹம்.

என்னே பெண்மையின் தன்மை! பிறர் ஆதரவை எதிர்நோக்கி, வெளித் தோற்றங்களிலே, வீண் பொருள்களிலே, நாட்டம் வைத்து, பல மனக் கோட்டைகளைக் கட்டி, அவற்றிலே உயிரை வைத்து வாழ்தல்!

வாழ்க்கையிலே பெண்களுக்குத் தாங்கக் கூடாத துயரம் எதுவோ, அவர்கள் எதிர்பார்க்கக்கூடாத ஏமாற்றம் எதுவோ, அத்தகையதொரு துயர் பலருக்கு உண்டாவது போல எனக்கும் ஏற்பட்டு விட்டது.

அப்பருவந்தான் என்ன? காதலனைக் கண்டுகொள்ளாத போதிலும், காதல் உணர்ச்சி அரும்பிப் பாவையர் பகற்கனவு காணும் பருவம். அப்போது தான் பால்யம் நீங்கி மங்கைப் பருவத்தின் முதற்படியில் காலை வைப்பது. உடலிலோ ஒரு சுறுசுறுப்பு; மனத்திலோ பருவ சௌந்தர்யத்தினால் உண்டானதொரு கர்வத்தின் தாண்டவம்; எண்ணத்திலே ஒரு பரபரப்பு; பேச்சிலே ஓர் ஆர்வம்; பார்வையிலே ஒரு சொகுசு; நடையிலே ஓர் ஒய்யாரம்; செயலிலே ஒரு தனி அழகு; வெறும் வாழ்க்கையிலே ஓர் உத்ஸாஹம். இவையெல்லாம் ஒருங்கே சேர்ந்து பார்ப்பவர் கண்ணை மயக்கி என்பால் அவர் திருஷ்டி சதா நிலைத்திருக்கும் வண்ணம் செய்தது.

அந்தோ அத்தகைய பருவத்திலே இத்தகைய சோகம் ஏற்பட்டால் அதை ஓர் அபலை எவ்வாறு சகிப்பது?

உள்ளஞ் சோர, உடல் கட்டுத் தளர, முகக்களை மாற, வாழ்க்கையின் உத்ஸாஹம் முற்றும் முறிய, ஒரு நடைப்பிணம்போலக் கிடந்தேன் நான். அப்போது கடவுள் கிருபையால் எனக்கு எஞ்சியிருந்த பாக்கியங்கள் யாவும் நஞ்செனத் தோன்றவே அவைகளைப் பொருட்படுத்தவில்லை.

பெற்றோர் அன்பு, செல்வப்பேறு, தோழிகளின் சல்லாபம், சினிமாக் காட்சி, புதிய புதிய நவீனங்கள், இவைகள் விஷயத்தில் தெய்வம் எனக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. ஆயினும் என்ன? துளஸீதாஸர், 'கணவனில்லாப் பெண்ணுக்குத் தாய், தந்தை, சுற்றம், சௌந்தர்யம், கல்விப்பேறு, செல்வப்பேறு இவை யாவும் சத்துருவே' என்று கூறுவது ஓரளவில் நிஜமாகவே தோன்றியது.

"பார்த்தாயோ சாந்தா! விசாலத்தின் ஆத்துக்காரர் போட்டோ 'ஹிந்து'வில் வந்திருக்கிறதே? இனி அவளைக் 'கலெக்டர் அம்மா' என்று தானே கூப்பிடவேண்டும்? நம்மோடொத்தவள்தானே அவள்? அவளுடைய அதிருஷ்டத்தைப் பார். ஆத்துக்காரர் 'ஐ. ஸி. எஸ்' பரீக்ஷையில் தேறினதைக் கேட்டதும் ஒரு சுற்றுப் பெருத்துவிட்டாளாம்!"

"சாந்தம்! கேட்டாயோ சேதி? கல்யாணத்திற்குப் பிள்ளைக் குழந்தை பிறந்திருக்கிறதாம். ஏற்கெனவே மாமியாரும் கணவனும் அவளைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடுகிறதாகக் கேள்வி. அவள் எள் என்பதற்குள் ஆம்படையான் எண்ணெய் என்பானும். மாமியார் பிண்ணாக்கு என்பாள் போலும்! பணக்கார ஆத்துப் பெண்ணே இல்லையோ! இனிமேல் கேட்கவும் வேண்டுமா?"

"சாந்தீ! சாந்தீ! பார்வதியின் விஷயம் தெரியுமோ? வடக்கே எங்கோ வெகு தொலையில் அவளாத்துக்காரருக்கு வேலையாகி இருக்கிறதாம். தனிக் குடித்தனம் பண்ணப் புறப்பட்டு விட்டாள். 'சிறிசு; தூர தேசம் போய் ஒண்டியாகக் குடித்தனம் செய்யவேணுமே! கூடப் போகப் பொன்னுப் பாட்டியும் இல்லையே' என்று அங்கலாய்த்தாள் அவளம்மா. பார்வதியோ 'பாட்டியுமாச்சு, கீட்டியுமாச்சு! அவர்கள் யாரும் எனக்கு வேண்டாம். அவர் இருக்கும்போது இந்தக் கிழங்கள் எதற்கு?' என்று ஓர் அதட்டுப் போட்டாள். என்ன நெஞ்சுத் தைரியம், பார்!"

தோழிமார்களின் இந்த இனிய சல்லாபம், கள்ளங் கபடமற்ற வம்புப் பேச்சு, என் மனத்திலே மறதியையும் ஆறுதலையும் தரவில்லையே! அதற்கு மாறாக உள்ளத்தே ஆழப் புதைந்து கிடந்த ஆசைப் பேய்களை வெளிக் கிளப்பிப் பொறாமை என்ற தீயை மூட்டிவிட்டனவே! என் மனத்திலே அடக்க முடியாத காட்டுத்தீப் போன்ற ஓர் ஆவேசத்தைத் தம் பேச்சுக்கள் கிளப்பி விட்டனவென்று அப்பாவையர் அறியவில்லையே!

"சும்மா கண்ணும் கண்ணீருமாய்ப் படுத்திருக்கலாமா? உனக்கு வேண்டியவைகளையெல்லாம் வாங்கித்தர நாங்கள் சித்தமாக இருக்கிறோம். பிரம்மா விதித்த விதியை நம்மால் விலக்க முடியுமா? அம்மா! தைரியமாக இரு. பொழுது போக்குக்கான நல்ல நாவல்களைப் படியேன். சாயந்தர வேளைகளில், சினிமா, பாட்டுக் கச்சேரி, கிளப்பு இவைகளுக்குச் சிநேகிதைகளுடன் போய் வா. வீணை அழுது அழுது உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே" என்பார் அன்பார்ந்த தாய்தந்தையர்.

தினம் ஒரு சினிமாவோ, பாட்டுக்கச்சேரியோ, டிராமாவோ தவறாமல் போய் வந்தேன். ஆடையாபரணங்களுக்கும் குறைவு இல்லை. பகலெல்லாம் கையில் நாவலுடன் ஒரு ஸோபாவில் என் போது செல்லும். எனினும், திருப்தியோ சாந்தியோ எள்ளளவும் ஏற்படவில்லை. அதற்கு நேர் மாறாக அவை என் மனோ வியாதியை அதிகரிக்கவே செய்தன.

மறுபடியும் மனச் சோர்வுற்று, உலக விஷயங்களில் சலிப்புக் கொள்ளலானேன். வேளைக்கு ஸ்நானம் அன்னபானம் இல்லை.

"அக்கா, சினிமா பார்க்கப் போவோம், வாயேன். 'பிரேம் கஹானி' என்ற ஹிந்திப் படம் மிகவும் நன்றாக இருப்பதாகச் சொல்லிக் கொள்ளு கிறார்களே! அதைக் கட்டாயம் பார்க்க வேண்டாமா? நீ வந்தால்தானே நான் போகமுடியும்?" என்று என்னை வற்புறுத்துவாள், என் தம்பி அகமுடையாள். விதியே என்று வாய் திறவாமல் அவளுக்காகப் போவேன். சினிமா பார்க்கச் சென்று உள்ளத்தீ இரண்டு மடங்கு அதிகரித்துக் கொழுந்து விட்டெரிய வீடு திரும்புவேன்.

கையில் ஒரு நாவலை எடுத்தாலோ அதில் சித்திரித்திருக்கும் காதலன் காதலியர் சரிதை என் மனக்கடலிலே பல எண்ண அலைகளைக் கிளப்பி விடும்.

"பகவானிடம் பக்தி செலுத்து. பெரியார் வார்த்தை பொய்யாகுமோ? நம் முன்னோர்களில் எத்தனைபேர் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து நற்கதி அடைந்திருக்கிறார்கள்! இவ்வழியில் மனத்தைச் செலுத்தினால் உனக்கு மனச்சாந்தி நிச்சயமாக ஏற்படும்" என்று உபதேசம் செய்து சென்றார் ஒரு பெரியார்.

தந்தையார் மனமும் என் நிமித்தம் லௌகிக விஷயங்களை விட்டு வேதாந்த விஷயங்களில் செல்லலாயிற்று. அவர் இராமாயணத்தையும் பகவத் கீதையையும் பாராயணம் செய்யத் தொடங்கினார். "ஈசுவரனைத் தேடி அடைவோம். அவனே நமக்குக் கதி; உனக்கும் எனக்கும் பிரபு; லோக நாயகன்; அவனைக் கண்டுகொண்டு விட்டால் மனம் வேறு எதையும் விரும்பாது" என்று அடிக்கடி உபதேசிப்பார்.

"அவர் எங்கே இருப்பார்? அவரைக் கண்டு கொள்ளுதல் எப்படி?" என்று கேட்டேன். "நம் பூர்வாசாரியர்கள் சொல்லுவதுபோல நடந்து வந்தால் ஈசுவர கடாக்ஷம் ஏற்படும்" என்றார்.

பௌர்ணமி, ஏகாதசி, சனிக்கிழமை முதலிய தினங்களில் விரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்தேன். காலை ஸ்நானம், ஜபம், ஆழ்வார் திருப்பாடல்களின் அனுசந்தானம், கோயில் செல்வது இவைகளைச் செய்யத் தொடங்கினேன்.

உடனே என்னுடைய இந்த வைதிக நியமத்துடன் ஒரு தனிக்கர்வமும் தலைப்பட ஆரம்பித்தது. என் பக்திமேலீட்டைப் பிறர் பார்த்துப் புகழ வேண்டுமென்று ஆசை கொள்ளலானேன். நான் இப்போது மற்றவர்களைக் காட்டிலும் ஒரு படி உயரத்தில் இருப்பதாக எண்ணிக்கொண்டேன்.

எனக்குத் தெரிந்த வேதாந்த ஞானத்தைப் பிறருக்கு எடுத்துக் கூறி அவர்களது முகஸ்துதியைப் பெற முயன்றேன். அனுஷ்டானம் இல்லாதவர்களைச் சற்றுக் கேவலமாகவே கருதத் தலைப்பட்டேன். எனினும் மன ஆறுதல் ஏற்படவில்லை. விகற்ப எண்ணங்கள் என் உள்ளக் கோட்டையை விட்டு நீங்கினபாடில்லை.

* * * * *

எனக்குக் கல்யாணம் பதின்மூன்றாம் வயதில் நடந்தது. 'ஸ்கூல் பைனல்' வரையில் படிக்கட்டுமே என்று என் பெற்றோர் கேட்டுக்

கொண்ட தன்பேரில் அதன்படியே விட்டுவைத்திருந்தனர், என் புருஷர் வீட்டார். அவர் சென்னையிலே பி. எல். வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். கல்யாணமானதும் பண்டிகைகளுக்கு வந்ததில் இரண்டு மூன்று முறை நான் அவரைப் பார்த்ததுண்டேயொழிய எனக்கு ஸ்வபாவமாக இருந்த சங்கோசத்தினால் அதிகம் பேசவில்லை. மேலும் எனக்கு அப்போதைய நினைவெல்லாம் பள்ளிக்கூடப் பாடங்களிலும் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறுவதிலுமே லயித்திருந்தது.

எனக்குப் பதினைந்து பிராயமும் ஆகிவிட்டது. பரீக்ஷையும் எழுதிவிட்டேன். கோடைவிடுமுறையில் என்னைப் புக்ககம் கொண்டுவிடுவதாகப் பேச்சு நடந்தது.

திடுமென்று ஒரு நாள் தந்திச்செய்தி கிடைத்தது. முதல் நாள் இரவிலிருந்து அவரைக் காணவில்லையாம்; மாலை, பீச்சுக்கு உலாவப் போனவர் திரும்பி வரவில்லையாம். மறுநாள் காலையில் அவருடைய சட்டையும் அங்கவஸ்திரமும், கடியாரமும் பணப்பையும், சென்னைச் சமுத்திரக் கரையில் சில செம்படவர்கள் கண்டெடுத்ததாகச் செய்தி கிடைத்ததாம். புலன் விசாரித்தும் ஒன்றும் பயன் படவில்லை. மூன்றுநாள் தேடியும் சமுத்திரக்கரையில் யாதொரு சவமும் கிடைக்கவில்லை. ஆச்சு! அன்றுடன் முடிந்தது என் சுகவாழ்க்கை.

* * * * *

இங்ஙனம் வருஷங்கள் பல கடந்தன. ஆனாலும் என் மனநிலை மாறவில்லை. பருவமுதிர்ச்சி ஏற்பட ஏற்பட வளர்பிறைச் சந்திரன் போல என் மன வட்டத்திலே ஆசையாகிற கிரணங்கள் விருத்தியடைந்தே வந்தன.

"சாந்தீ, ஸ்தல யாத்திரை செய்துவரலாமா?" என்றார் ஒரு நாள் என் தந்தையார்.

'நம் நாட்டிலே பல புராதனமான கோவில்கள் இருக்கின்றன. அவைகளில் உள்ள மூர்த்திகள் சக்திவாய்ந்தனவென்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களைத் தரிசிப்பதன் மூலம் நம் பக்தி நிலைபெறக் கூடும்' என்று எண்ணிப் புறப்பட்டேன். திருச்சிராப்பள்ளியிலே தோழி கமலாசனியின் இல்லத்தில் தங்கினோம். அன்று ஸ்ரீரங்கம் கோயிலில் ஒரு சிறு உத்ஸவம்.

கோபுர வாயிலிலே பல கடைகள். ரவிக்கைச்சீட்டி வாங்குவாரென்ன; புஷ்பம் குங்குமம் வாங்குவாரென்ன; தலைச்சவரி, வளையல்கள், பொம்மை, தட்டுமுட்டுச் சாமான் முதலியவைகளின் வியாபாரமும் நடந்தது. ஒரு புறத்தே பெருமாள் பிரசாதங்கள்: வடை, முறுக்கு, தோசை. இவை ஈ மொய்க்க விற்பனைக்குச் சித்தமாக இருந்தன. அப்பா! என்ன கூச்சல்! என்ன இரைச்சல்! பிராகாரங்களில் காந்தவிளக்குகள் கண்ணைப் பறித்தன; ஆனால், கீழே காலடியிலோ, வாழைப்பழத்தோல், தேங்காய் ஓடுகள், புஷ்ப இதழ்கள் சிதறிக் கிடந்தன. எண்ணெயும் இளநீரும் சிறு கால்வாயாக ஓடி நடப்பவர் காலை வழுக்கச் செய்தன. கோவில் மாடங்களிலேயும்,

துலாக் கட்டைகளிலேயும் சிலந்தியும், ஒட்டடையும் இருக்க, வௌவால்கள் தொங்கலாடின. இதுவோ எம்பெருமான் வாழும் பவித்திரமான ஸ்தானம்!

இதற்குள் உள்ளே மணி ஓசை கேட்க, நாங்கள் பிராகாரத்தைத் தாண்டிக்கொண்டு கர்ப்பக்கிருஹத்திற்குச் சமீபத்திற் சென்றோம். கோயில் சிப்பந்திகள் பல ஏழை உபாசகர்களை வெருட்டிக்கொண்டு எங்களை அக் கூட்டத்தில் வெகு மரியாதையுடன் அழைத்துச் சென்றனர்.

காலையிலே சர்க்கரைப் பொங்கல் தளிகையிட்டுத் தாயார் திருமஞ்சனத் திற்கும் ஏற்பாடாகியிருந்தது. தாயாருக்குச் சாத்தியிருந்த புஷ்பப் பாவாடையும், வைரக்கண்டியும் கண்களைப் பறித்தன. எங்களைப்போலப் பல்லாயிரம் பக்தர் அங்கே குழுமி இருந்தனர்.

ஸ்வாமிக்குத் தளிகை அமிசை செய்ய அரை மணிநேரம் சென்றது. பொங்கல் பிரசாதத்தை எல்லோரும் மேல்விழுந்து, எனக்கு உனக்கென்று பிடுங்கிக்கொண்டனர். வாங்கி ருசி பார்த்தவர் சிலர் நெய் போதாது என் றனர். சிலர் வெல்லம் குறைவு என்றார். ஒருவர் முந்திரிப் பருப்பே இல்லை என்று புகார் செய்தார். பிறருடன் பெருமாள் பிரசாதம் வாங்கக் கை நீட்டிய நான், கோவில் மடைப்பள்ளிக் கோலம் கண்முன் தோன்ற, அதில் பாச்சையோ, பல்லியோ, சிலந்திப் பூச்சியோ விழ யாதொரு தடையும் இரா தென்று எண்ணித் தொப்பென்று அப்படியே கீழே கொட்டிவிட்டேன்.

"சாந்தம், என்ன அபராதம் செய்துவிட்டாய்! பெருமாள் பிர சாதத்தைத் தவறியும் கீழே போடலாமோ?" என்றாள் என் அன்னை.

"அம்மா, இதில் ஒரு கரப்பு இருப்பதுபோலத் தோன்றிற்று" என்று அருவருப்புடன் கூறினேன்.

மறுநாள் நாங்கள் மதுரைக்குச் சென்றோம். காந்தம் இரும்பை இழுப்பதைப்போல அம்பிகை மீனாட்சியின் தரிசனம் பல கோடி பக்தர்களைத் தினந்தோறும் மதுரைக்கு இழுத்துச் சென்றது. ஆனால் கோவிலில் போடப்பட்ட காந்த விளக்குகள், தங்கக் கலசங்கள், அம்பிகையின் வைரக் கவசம், பெனாரிஸ் பட்டுப் புடைவை இவை என் கண்களை மயக்கினவே யன்றி மனத்தை மயக்க முடியவில்லை. பிறகு நாங்கள் பல க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டே திருச்செந்தூர் சென்றோம். அன்று பௌர்ணமி இரவு. கோவிலின் மண்டபத்தின் முன்பு ஒளி வீசிய சந்திரனின் வெள்ளிய நிலவொளியில் அலை மோதும் ஆழ்கடலின் கம்பீரமான தோற்றம் என் இதயத்தை நெகிழச் செய்தது. சுற்றும் ஒரு முறை பார்த்தேன். எங்கும் சாந்தமும் கம்பீரமும் குடிகொண்டிருக்க, தூய்மையின் வடிவம் போலக் காணப்பட்டது அந்தப் புராதனமான கோயில்.

பிறகு, "நீலத் திரைக்கடலோரத்திலே நின்று நித்தஞ் தவஞ்செய் குமரி யெல்லை" என்று பாரதியார் பாடின அந்தக் குமரி முனைக்குச் சென்றோம். அக்கோயிலில் நான் கண்ட தூய்மை என்னை வசப்படுத்திவிட்டது.

"இந்தத் தேவி உண்மையாக உயிருடன் தவஞ்செய்யும் ஒரு கன்னி கையே; தன் காதலனுக்காகக் காத்திருக்கும் ஓர் ஆரணங்கே" என்று என் மனத்தில் பட்டது. "அம்மா! உன்னைப்போல நானும் என் தலைவனுக்காகக்

காத்திருந்து தவங்கிடக்கும்படி அருள் செய்'' என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன்.

பிறகு அங்கிருந்து நாங்கள் பட்டணம் போகப் புறப்பட்டோம். 'நந்தனாது உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அந்தத் தில்லையம்பதியை மிதியாமலும் போகலாமோ?' என்ற எண்ணம் உண்டாக, வழியிலே சிதம்பரத்தில் ஒரு நாள் தங்கினோம். அங்கே ஆனந்தமாக நடராஜ மூர்த்தியைத் தரிசித்தோம்.

சென்னைக்குச் சென்று சில நாள் தங்கிவிட்டுப் பிறகு நாங்கள் வடக்கே யாத்திரைக்குப் புறப்பட்டோம்.

'லக்ஷ்மணஜூலா': என்ன இனிமையான பெயர்! அப்பெயரை எடுத்தவுடன் இப்பொழுதுதான் காண்பதுபோன்ற ஓர் ஸ்வப்னக் காட்சி என் மனத்திலே தோன்றுவது சகஜமாகிவிட்டது. மாலை வேளையில், அந்திப் பொழுதில், காற்றிலே தவழ்ந்துவரும் கோவில் மணியோசையைக் கேட்ட வளவில் இதே காட்சிதான் என் கண்முன் எழுகிறது அடிக்கடி. பர்வதத்தின் தாழ்வரைகளிலே ஜோவென்று சதா வண்டினங்கள் ரீங்காரம் செய்யும் அடர்ந்த காடுகள். மலைச்சிகரங்கள் அந்திப்பொழுதின் செவ்வானத்தின் ஒளி வீச, பல ரத்தினங்கள் இழைத்த பொன் கிரீடங்களோ இவை யெனத் தோன்றின.

கதிரவன் கரம் பட்ட அளவில் பசுமைக் காடுகள் நீல நிறங்கொண்டு மாற, நீலமேனி படைத்த திருமாலின் திருமார்பு இதுதான் என அந்த இமய கிரியின் பரந்த சரிவு காணப்பட்டது.

வனத்திலே குதித்து விளையாடும் வெண்பட்டாடை உடுத்த கன்னிப் பெண்போல ரிஷிகேசத்திலே நுரைபூத்துப் பெருத்த இரைச்சலுடன் ஆரவாரித்துக் கரை புரண்டோடிய கங்கை, இந்தப் பர்வதமாகிய திருமாலின் அடியிலே, கம்பீரமான மலைச்சரிவுகளின் மத்தியிலே, நீல நிழல் படிய, அளப்பற்ற ஆழங்கொண்ட ஒரு மடுவிலே, பச்சைத் துகில் தரித்த ஆரணங்கொருத்தி சுக நித்திரை செய்வதுபோலச் சலனமற்றுக் கிடந்தாள்.

கறுத்த வானத்திலே சிதறிக் கிடந்த நக்ஷத்திரங்களின் ஒளியும், கங்கைக்கரையைச் சுற்றுமுள்ள கோபுரங்களிலும் கட்டிடங்களிலும் மினுக்கு மினுக்கெனப் பிரகாசித்த தீபங்களின் ஒளியும் ஒன்று சேர்ந்து கங்கையின் பரந்த தடத்திலே பிரதிபலிக்க நீலப் பட்டாடையுடுத்துப் பொன்னுபரணமும் பூமாலையும் அணிந்த தேவி இமய குமாரியே இங்கே எழுந்தருளி இருக்கிறாளோ என்ற மயக்கம் உண்டாயிற்று.

நாங்கள், 'காலீகம்பளிவாலா'வைச் சேர்ந்த ஒரு சத்திரத்தின் மாடியில் தங்கினோம். சமயம் சந்தியா காலம். புது வசந்தம். தென்றல் காற்று இவ்விடத்தே தாழ்வரைகளின் தண்மையுடன் கலந்து ஜில்லென வீசியது. மணி ஆறு இருக்கும். தூரத்தே இருந்த அவ்வாலயங்களிலிருந்து மாலைப் பூஜைக்குரிய மணியோசை இடைவிடாது கேட்டது. வேத பாடசாலைகளிலே சிறு பிள்ளைகள் ஓதும் வேத கோஷம் ஒரு புறம் கேட்டது.

நான் சத்திரத்தின் மாடியிலிருந்து கீழுள்ள கடை வீதியையும் அதற்கு அப்பால் இருந்த ஆழ்ந்த கங்கையையும் கண் கொட்டாமற் பார்த்திருந்தேன். பதிரிநாதத்துக்குச் செல்லும் யாத்திரிகர்களின் பாதக் குறடுகள் 'சர்க் சர்க்' என்று வீதி வழியே ஒலித்தன. ஒரு கூட்டம் யாத்திரிகர் வந்து கங்கைக் கரையைச் சேர்ந்தவுடன் 'கங்கா மாயீக்கு ஜே! ஜே!' என்ற சப்தம் ஆகாய மட்டும் எழும்பிப் பிரதித்வனித்தது.

* * * * *

அதிபரிசுத்தம் வாய்ந்த அந்த லக்ஷ்மண ஜூலாவில் இமயமலைச் சாரலின் அடிவாரத்திலே கால் வைத்தது முதல், என் மனம் அந்த ஸ்தானத்தின் இயற்கைச் சௌந்தர்யத்திலே ஒரு மோகம் கொண்டுவிட்டது. இதைக்காட்டிலும் உயர்ந்த இயற்கைச் சௌந்தர்யம் வாய்ந்த இடங்கள் இப் பரந்த உலகில் இருக்கக்கூடுமானாலும் என் வரைக்கும் இதைவிடச் சிறந்த பிரதேசம் இருக்க முடியாது. இன்பத்துடன் கலந்த ஒருவிதத் துன்பமும், தண்மையுடன் கலந்த ஒருவித வெம்மையும், இசையுடன் கூடிய ஒருவிதப் பிரலாபமும் என் உள்ளத்தை நெகிழச் செய்தன.

தொடுவதற்குக் கங்கையின் தூய நீர் பனிக்கட்டிபோன்று ஜில்லென்றிருந்தது. படிக்கட்டில் நின்று வெகுநேரம் யோசித்தேன். கால் பின்புறம் இழுக்க, மனம் முன்புறம் தள்ளச் சட்டென்று அதில் இறங்கினேன்.

மூச்சுத் திணறி உடல் நடுக்கங்கொண்டதாயினும் ஒரு சுகானுபவத்தை உணர்ந்தேன். தண்ணீரை விட்டு வெளியே வர மனம் எழவில்லை.

எங்கும் இருள் பரவியது. அந்த இருள் சூழ்ந்த நிச்சப்த வேளையிலே, கம்பீரம் வாய்ந்த கங்கையின் தண்மை நிறைந்த தோற்றத்திலே, பயமும் வருத்தமும் சாந்தமும் இனிமையும் கலந்ததோர் உணர்ச்சி எனக்கு ஏற்பட, அச்சமயம் உண்டான மன நிலையை என்னென்று வர்ணிப்பேன்!

பலவித எண்ணங்களாகிய அலைகள் என் மனக்கடலிலே ஒன்றன் பின் ஒன்றாய் எழ, நான் வெகுநாழிகை அந்தக் கங்கைத்தடத்திலேயே நின்றிருந்தேன்.

அப்போது என்முன் எதிர்கரையிலே கங்கைப்படித்துறையிலே, ஓர் இளஞ் சந்நியாஸி அப்புண்ணியப் புனலில் நீராடுவதைக் கண்டேன். அவருடைய தேக காந்தி, அவருடைய முகமண்டலத்தின் ஒளி, அவருடைய காவியுடை எல்லாம் ஒன்று சேர்ந்து, தண்மை வாய்ந்த ஒரு ஜோதிமண்டலம் போன்று விளங்கியது. என் கண்கள் அவரையே பார்த்துக்கொண்டிருந்தன. கட்டு மீறிய மதயானை போல என்மனம் வரம்பு மீறி அவர்பால் சென்றது. ஹிருதயம் படபடத்தது.

"சீ! உன்னை அடக்கிக்கொள், பாழும் மனமே!" என்றேன்.

"அம்மா! அங்கே ஒன்றியாகவா ஸ்நானம் செய்கிறாய்? இந்த அந்தி வேளையில் ஒன்றியாக நதிக்கரைக்குச் செல்லலாமா?" என்று கேட்டுக் கொண்டே என் பிதா என்னை நோக்கிப் படிக்கட்டுகளில் இறங்கிவரக் கண்டேன்.

'இந்தச் சாரமற்ற வாழ்க்கை, உத்தேசமற்ற ஜீவனம் என்றால் இனிச் சகிக்க முடியாது. ஈசனே! இந்தப் புண்ணியஸ்தலத்திலே, இந்தத் தூய நன்னீரிலே என் மனம் பின்னும் பாப எண்ணங்களுக்கு இடங் கொடாதவாறு நீ என்னை ஏற்றுக்கொள்; இடைப்பட்ட ஆசாபாசங்களின் தளை தறித்துப்போக, அழியாத சாந்தியை எனக்கு இவ்விடத்தே தந்தருள் வாய்' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டே கங்கையில் இறங்கி விட்டேன். என்னையும் மீறி என் வாயினின்றும் ஒரு சிறிய கூச்சல் வெளிப்பட்டது.

"ஐயோ! பெண் கால்நழுவிக் கங்கையில் விழுந்து விட்டாளே! காப்பாற்றுவார் இல்லையா?" என்று என் தந்தை கூச்சலிட்டது மட்டும் கேட்டது. பிறகு எனக்கு ஒன்றும் தெரியாது.

* * * * *

அந்த யுவா சந்நியாசியும், என் தந்தையும் பக்கத்தில் வீற்றிருக்க என்னை அந்தக் 'காலீ கம்பளிவாலா' சத்திரத்தின் திண்ணையிலே கிடத்தி இருப்பதைக் கண்டேன். பக்கத்தில் ஒரு கும்மட்டியில் நெருப்பு இருந்தது. என்மீது கறுப்புக்கம்பளி போர்த்தியிருந்தார்கள். தலைமாட்டில் ஒரு கிண்ணத்தில் சூடான பால் வைத்திருந்தது.

என் உடற் சிலிர்சிலிர்ப்பு நீங்கின பாடில்லை. எதிரே அந்த யுவா சந்நியாசியைக் கண்டதும் மனம் திடுக்குற்றது. 'ஹா! பாபிஷ்டி! உனக்கு இன்னும் சாவு வரவில்லையா?' என்று எண்ணிக்கொண்டேன். எழுந்திருக்க முயன்றேன். "அம்மா, பிரக்ஞை வந்ததா? பேசாமல் சற்றுப் படுத்திரு. உடம்பை அலட்டிக்கொள்ளாதே" என்று என்னிடம் கூறி விட்டு, அந்தச் சந்நியாசியைப் பார்த்து, "உங்களால் என் பெண் உயிர் பிழைத்தாள். உங்களுக்கு என் நன்றியறிதலை எங்ஙனம் காட்டுவேன்! நீங்களோ சந்நியாசி. தாங்கள் இருப்பதெங்கே?" என்றார் என் தந்தையார். அதற்கு அந்தச் சந்நியாசி, "நான் இங்கேதான்சமீபத்திலுள்ள ஓர் ஆசிரமத் தில் இருக்கிறேன். இது ஒரு பெரிய காரியமன்று. நான் செய்த கொடுமை களுக்கும் பாபங்களுக்கும் இது ஒரு பிராயச்சித்தமே! என்னால் பலருக்குத் துன்பம் சம்பவித்தது. இவளைப்போன்ற ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்துள்ளேன் நான்" என்றார் அந்த யதி.

"நீங்கள் இந்த இளம் வயதிலே சந்நியாஸம் வாங்கிக் கொள்வா னேன்? உங்களைப் பார்த்தால் சாதாரண பைராகிபோலக் காணப்பட வில்லையே. படித்தவர் போலக் காணப்படுகிறீர்களே" என்று விசாரித்தார் என் தந்தையார்.

"நான் படித்தவன்தான். அதிருக்கட்டும். உங்களை நான் எங்கோ பார்த்தது போல இருக்கிறதே! உங்கள் பெயரென்ன? ஊர் எது?" என்று வினவினார் அந்தச் சந்நியாஸி.

"எங்களூர் பெங்களூர். பெயர் சுந்தராச்சாரி" என்பதற்குள் சந்நியாஸி திடுக்குற்று எழுந்து, "இவள்... இவள்... நான் காப்பாற்றிய இவள் உங்கள்

பெண் சாந்தையா?" என வினவ, "ஆம் உங்களுக்கு இவளை எவ்வாறு தெரியும்?" என்றார் என் தந்தை.

"இவள் என் மனைவி; நான் கைவிட்டுச் சென்ற பேதைப்பெண்."

நான் திடுக்குற்றேன். மறுபடியும் பிரக்ஞையை இழந்தேன். என் தகப்பனார் மெல்ல என்னை எடுத்து மடியில் கிடத்தி ஆசுவாசம் செய்து வாயில் ஒரு குவளை பாலையும் விட்டார்.

திறந்தகண் திறந்தபடியே காணாமல் போய்த் திரும்பவும் கிடைக்கப் பெற்ற கணவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"பட்டணத்தில் ஹாஸ்டலில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தபோது துர்வசத்தால், எனக்கொரு சினிமா நக்ஷத்திரத்தின் சிநேகம் ஏற்பட்டது. தகப்பனாருக்கு இச்செய்தி எங்ஙனமோ எட்டிவிடவே கட்டாயம் ஊருக்குத் திரும்பும்படியும் இனிமேல் தாம் என் படிப்புச் செலவிற்குப் பணம் அனுப்பப் போவதில்லை யென்றும் கண்டிப்பான கடிதம் வந்தது. உங்களுக்குத்தான் என் தகப்பனார் குணம் தெரியுமே! உங்களுக்கும் தெரிந்துவிட்டால் பெரிய அவமானமாய்விடும் என்ற ஏக்கம் ஒரு பக்கம்; அழகியை விட மனமிசையாமை ஒரு பக்கம். கடைசியில் கடற்கரையில் போய் அடையாளமாக எனது கோட்டு, அங்கவஸ்திரம் இவைகளைக் கழற்றிவைத்து, அவளுடன் பம்பாய் சென்றுவிட்டேன். அங்கே ஒரு கம்பெனியில் நானும் அவளும் நடிக்கத் தொடங்கினோம். நாளடைவில் என்மீது அவளுக்கிருந்த பற்று நீங்கவே அவள் நடத்தை எனக்குப் பிடியாமற் போய்விட்டது. மனம் கசந்தது. ஊரூராய்த் திரிந்து வந்தபோது ஒரு பெரியவரின் உபதேசத்தினால் சந்நியாசம் வாங்கிக் கொண்டேன். உங்கள் முகத்தில் திரும்பவும் விழிக்க எனக்குத் தைரியம் இல்லாமற் போயிற்று. இன்றைக்குத் தெய்வச்செயலால் உங்களை மீண்டும் காணும்படியாயிற்று. உங்கள் இஷ்டப்படி இனிமேல் நடப்பதே என் கடமை" என்று கூறிமுடித்தார்.

அவர் கதையைக் கேட்டும் நெஞ்சம் துயர் தாளாதுபோயிற்று. திரும்பவும் பிரக்ஞை இழந்து கிடந்தேன்.

என் தந்தையும் கணவரும் என் பக்கத்தில் வீற்றிருந்தவாறே அந்த இரவைக் கழித்தனர்.





# சிறுவர் பகுதி

## : அதிசயக் கணக்கு :

* 'வாசகன்' *

ஓர் அரசனுக்குப் பல மந்திரிகள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் மிகவும் புத்திசாலி. அவருடைய கூரிய புத்தியைக் கண்டு அரசன் ஸந்தோஷப்பட்டான். அவரிடத்தில் அதிகப் பிரியம் உடையவனாக இருந்தான். அவரை முதல் மந்திரியாக ஆக்கினான்.

இதை அறிந்த மற்ற மந்திரிகளுக்குப் பொறாமை உண்டாயிற்று. "இவனுக்குமட்டும் என்ன உயர்ந்த பதவி?" என்று பேசிக்கொண்டார்கள்.

முதல் மந்திரி கணக்கில் நல்ல சாமர்த்தியம் உடையவர். அரசாங்கத்தின் வரவு செலவுகளை ஒழுங்காகக் கவனிப்பவர். சரியான காலத்தில் கணக்கை ஒழுங்குபடுத்தி வைப்பார். வருவாய்க்கு அதிகமாகச் செலவழிக்கமாட்டார். அவரது முயற்சியால் ராஜ்யத்தில் சுபிக்ஷம் உண்டாயிற்று. அவருடைய புகழும் அதிகமாயிற்று.

இப்படி அவருடைய செய்கைகளால் நன்மை உண்டாக உண்டாக மற்ற மந்திரிகள் மனத்திலோ பொறாமைத் தீ பொங்கி எழுந்தது.

அந்த அரசனுக்கு ஒரு பிள்ளை இருந்தான். அவன் புத்திசாலியாக இருந்தாலும் நல்லோருடைய பழக்கம் இல்லாமையால் வீண் செலவு செய்து வந்தான். மந்திரிகளிற் சிலர் அவனோடு சேர்ந்து கொண்டு அவனைக் கெடுத்தார்கள். 'இவன்தானே

பிறகு பட்டத்திற்கு வரப் போகிறவன்? இவனை நாம் வசப்படுத்திக் கொண்டால் நமக்கு நல்லது’ என்று எண்ணினார்கள். முதல் மந்திரியைப் பற்றி அடிக்கடி அரசகுமாரனிடம் அவதூறு சொல்லிவந்தார்கள்.

அரசன் கிழவனாக இருந்தமையால் நோய்கண்டு இறந்துவிட்டான். பிறகு அரசகுமாரன் பட்டத்துக்கு வந்தான். அவன் வீண் செலவு செய்பவனென்பது முதல் மந்திரிக்குத் தெரியுமாகையால், ‘இனிமேல் நம்முடைய கணக்கு வழக்குகள் உபயோகப்படுவது கஷ்டம்’ என்று எண்ணினார். “பணத்தைச் செலவிடுவதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்” என்று புதிய அரசனிடம் சொன்னார்.

அரசன், “எனக்குத் தெரியும்; நீர் சொல்ல வேண்டுவது அவசியம் அன்று” என்று துடுக்காகப் பதில் சொன்னான்.

மற்ற மந்திரிகள் அரசனுடைய மனத்தைக் கலைக்கத் தொடங்கினார்கள். “இவனுக்குக் கணக்கும் தெரியாது! ஒரு மண்ணும் தெரியாது. வீண்பெருமை அடித்துக் கொள்கிறான்” என்றெல்லாம் சொன்னார்கள்.

“இவர் அவ்வளவு கெட்டிக்காரராக இருந்தால் இந்த ஊரில் எவ்வளவு காக்கைகள் இருக்கின்றன என்பதைச் சொல்லட்டுமே” என்று ஒருவன் கூறினான்.

அரசன் அவர்களுடைய போதனைக்கு உட்பட்டான். அந்தக் கேள்வியை முதல்மந்திரியிடம் கேட்பதென்று தீர்மானித்தான்.

ஒரு நாள் புதிய அரசன், “உம்மை எல்லோரும் கணக்கில் வல்லவரென்று சொல்லுகிறார்கள். இந்த ஊரில் எவ்வளவு காக்கைகள் இருக்கின்றன? சொல்லும். ஒரு வாரத்தில் கணக்கு ஒப்பிக்கவேண்டும்” என்று முதல் மந்திரியிடம் சொன்னான்.

அவர் திடுக்கிட்டார்; 'இது கணக்கில் அடங்குவதா!' என்று பிரமித்தார். அன்று அரண்மனையிலிருந்து தம் வீட்டுக்குப் போனது முதல் பெரிய துயரத்தில் ஆழ்ந்திருந்தார். என்ன செய்வதென்று அவருக்குத் தோன்றவில்லை. சாப்பாட்டிற்கூடப் புத்தி செல்லவில்லை.

அவருக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் பெரிய புத்திசாலி. தன்னுடைய தகப்பனுர் மனத்தில் ஏதோ ஒரு வருத்தம் இருப்பதை அவள் ஊகித்து அறிந்து கொண்டாள்.

"அப்பா, இன்றைக்கு ஏன் நீங்கள் சாப்பிடக் கூடவில்லை?" என்று அவள் கேட்டாள்.

"ஒன்றும் இல்லை அம்மா" என்று அவர் சொன்னுர்.

அந்தப் பெண் மேலும் மேலும் கேட்டாள்; கடைசியில் விஷயத்தைத் தெரிந்துகொண்டாள்; "இதுதானு பிரமாதம்? நீங்கள் வந்து சாப்பிடுங்கள். நான் சொல்லிவிடுவேனே. நீங்கள் நாளைக்கு அரண்மனைக்குப் போகும்போது ஞாபகப்படுத்துங்கள். அதற்குள் தெரிந்துகொண்டு நான் சொல்கிறேன்" என்ருள்.

**மந்திரி :** அம்மா, நீ சிறுபெண். அரசனுடைய ஆக்ஞையின் கடுமையை நீ தெரிந்து கொள்ளவில்லை. அவ்வளவு சுலபமாகச் சொல்லுவது எப்படிச் சாத்தியமாகும்?

**மகள் :** நீங்கள் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப் படவேண்டாம். நான் சொல்வதை நம்புங்கள்.

மந்திரி அவள் தொந்தரவு பொறுக்காமல் சாப்பிட்டுவிட்டுப் படுக்கச் சென்ருர். தூக்கம் வரவில்லை. இரவுமுழுவதும் தூக்கமின்றி இருந்தார்.

மறுநாள் பொழுது விடிந்தது. அரண்மனைக்குப் புறப்பட எண்ணித் தம் மகளைக் கூப்பிட்டார்; "எங்கே அம்மா! உன் கணக்கு?" என்று கேட்டார்.

"சாப்பிடுங்கள். புறப்படும் சமயத்தில் சொல்லு கிறேன்" என்றாள் அவள்.

அவர் போஜனம் செய்தார். செய்துவிட்டுப் புறப்படும்போது அவருடைய மகள் வந்தாள். "நீங்கள் தைரியமாக நான் சொல்வதை அரசரிடம் சொல்லுங்கள்; இந்த ஊரில் லக்ஷத்து ஐம்பதினாயிரத்து நானூற்று மூன்று காக்கைகள் இருக்கின்றன என்று சொல்லுங்கள்" என்றாள்.

மந்திரி ஆச்சரியம் அடைந்தார்; "எப்படி எண்ணினாய்?" என்று கேட்டார்.

**மகள் :** 'என் மகளுக்குக் கூட இந்தக் கணக்குத் தெரியும்; அவள்தான் எண்ணிச் சொன்னாள்' என்று சொல்லுங்கள்.

**மந்திரி :** இந்தக் கணக்குத் தவறாக இருந்தால் என்ன செய்வது?

**மகள் :** தவறென்று யார் சொல்வார்கள்? யார் எண்ணப் போகிறார்கள்?

**மந்திரி :** யாரேனும் எண்ணி இது தவறென்று நிரூபித்தால்?

**மகள் :** ஒருகாலும் எண்ண மாட்டார்கள். அப்படி எண்ணித் தவறென்று சொன்னால் சமாதானம் சொல்லிவிடலாம்.

**மந்திரி :** என்ன சமாதானம் சொல்வது?

**மகள் :** இந்தக் கணக்கு அதிகமாக இருந்தால், வேறு ஊரிலிருந்து புதிய காக்கைகள் வந்திருக்குமென்று சொல்லலாம்; குறைவாக இருந்தால், வேறு ஊருக்குப் போயிருக்குமென்று சொல்லலாம். வாஸ்தவத்தில் இது கணக்கே அல்ல. புத்தி சாமர்த்தியந்தான்.

மந்திரிக்கு விஷயம் விளங்கிற்று. 150403 என்பது வெறும் கற்பனை என்பதையும் அறிந்தார்.

அவர் ஸந்தோஷத்தோடு அரசனிடம் போய்க் காக்கைகளின் கணக்கைச் சொன்னார். முட்டாள்



களாகிய மற்ற மந்திரிகள் பிரமித்துப் போனார்கள். அது தப்பென்று அவர்களால் எப்படி நிரூபிக்க முடியும்?

"இந்தக் கணக்கைச் சொன்ன உம் மகள் புத்திசாலிதான்" என்று அரசனே ஒப்புக்கொண்டான். அவளையே அவன் கல்யாணம் செய்துகொண்டான். அதற்குப் பிறகு, அவள் காக்கைகளை எண்ணாமலே சாமர்த்தியத்தால் தன் தந்தையின் கவலையைப் போக்கினதை, அவள் மூலமாக அரசன் தெரிந்து கொண்டான்.

---

# குறிப்பும் திரட்டும்

## தமிழ்த் தாத்தா

ஸ்ரீமகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் ராயபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். மார்ச்சு மாதம் இரண்டாம் தேதி அவர்கள் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். மார்ச்சு மாதம் 10-ஆம் தேதி அவர்களது 86-ஆம் ஜன்மதின வைபவம். அன்று அவர்கள் வீட்டில் அவர்களது நன்மையைக் கருதி ஆயுஷ்ஹோமம் முதலியன நடைபெற்றன.

இறைவன் அருளால் தமிழ் நாட்டுக்கு இன்னும் பல தமிழ்ச் செல்வங்களைக் கொணரும் நிலையில் அவர்கள் நோயினின்றும் மீண்டதைத் தமிழர்களும் சந்தோஷத்தோடு கொண்டாடுவார்களென்றெண்ணுகிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் ஐயரவர்களுடைய வெளியீடுகளைக் குறைந்த விலைக்குக் கொடுப்பதாக அவர்கள் குமாரர் எண்ணியிருக்கிறார். தமிழன்பர்கள் இந்த நல்ல சமயத்தை உபயோகித்துக் கொள்வார்களென்பதில் தடை யாது?

## தேவேந்திர சத்தியார்த்தி

கிராமம் கிராமமாகக் குடும்பத்துடன் அலைந்து 'நாடோடிப் பாட்டுக்களை'த் தொகுப்பதையே தம் வாழ்க்கை லக்ஷியமாக ஒருவர் கொண்டிருக்கிறாரென்றால் 'அவர் ஒரு பைத்தியக்காரராகத்தான் இருக்கக்கூடும்' என்று சிலர் நினைக்கலாம். கிராமத்துப் பாடல்களிலே பித்துப்பிடித்துச் சுற்றும் அந்த 'நாடோடி'யின் பெயர் ஸ்ரீ தேவேந்திர சத்தியார்த்தி என்பது. ஸ்ரீ ரவீந்திரநாத் டாகுர், மகாத்மா காந்தி முதலிய பெரியோர்கள் அவரைப் பாராட்டியிருக்கின்றார்கள். இப்போது அப்பெரியார் தமிழ் நாட்டுக் கிராமங்களை நோக்கி வந்திருக்கிறார். 'கலைமகள்' பத்திரிகையில் முன்பு வெளி வந்த பாட்டுக்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். தமிழ் நாட்டில் வழங்கும் நாடோடிப் பாடல்களைத் தொகுத்து வெளியிடவேண்டுமென்பதை அவர் மிகவும் வற்புறுத்துகின்றார். கலைமகளில் அவருடைய கட்டுரைகள் சில வெளிவரும்.

## மின்சார விந்தை

இரும்புக் கடலையாகிய விஞ்ஞான சாஸ்திர விஷயங்களைக் குழந்தைகளும் தெளியும்படி எழுதிவரும் அன்பர் ஸ்ரீமான் பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் மின்சாரத்தைப்பற்றிச் சாதாரண அறிவுள்ள தமிழனும் அறிந்து கொள்ளும்படி 'மின்சார விந்தை' என்னும் புஸ்தகம் ஒன்றை எழுதியிருக்கின்றனர். அதன் தகுதியைப் பாராட்டிச் சென்னைச் சர்வகலாசாலையார் 750 ரூபாய் பரிசளிக்கத் தீர்மானித்திருக்கிறார்களென்பதை அறிந்து சந்தோஷிக்கிறோம்.

——

# ரூ. 2-8-0-க்கு

**3 கைக்கடிகாரங்களும் 1050 விநோதச் சாமான்களும் அளிக்கப்படும்**




எங்களுடைய சரியான மணி காட்டும் கடிகாரத்தையும் 5 வருஷ உத்தரவாத முள்ளதும் ஒருதடவை முடுக்கிவிட்டால் 36-மணி நேரம் வரை நில்லாமல் மணி காட்டுவதுமான ஜேபி கடிகாரமும் ரூபாய் 2-8-0க்கு வாங்குவோருக்குக் கீழ்க் கண்ட சாமான் இனாமாக அளிக்கப்படும். (1) பொன் முலாம் பூசிய உறையுடைய விநோதமான பொம்மைக் கைக் கடிகாரம், (2) 300 அடி தூரம் வரை நன்ருக வெளிச்சம் காட்டும் டார்ச் லைட், (3) 14-காரட் ரோல்டுகோல்டு நிப் உடைய ஊற்றுப்பேனு, (4) பொம்மை B. டைம்பீஸ், (5) சேப்டிரேஸர், (6) க்ஷவா ப்ரஷ், (7) சோப்பு, (8) பொன்முலாம் பூசிய 4 பித்தான்கள், (9) 440 விநோத வெகுமதிகள்.

தபால், பாக்கிங் செலவு தனியே அணு 12.

**The American Commercial Stores, Post Box No. 12213, Calcutta (K.)**


---

# ஒரு நல்ல சந்தர்ப்பம்

என் தந்தையாகிய ஸ்ரீமத் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் சமீபத்தில் ராயபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அடைந்து சௌக்கியமாக ஜாகைக்கு வந்து சேர்ந்த நற்செய்தியைக் கருதி அவர்களுடைய பதிப்பு நூல்களை அவர்களுடைய 86-ஆம் ஜன்மதினமாகிய 10-3-1940 முதல், 31-5-1940 வரையில் குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. விவரங்களுக்கு எழுதுக.

இங்ஙனம்:

**S. கலியாணசுந்தர ஐயர்,**

'தியாகராஜ விலாஸம்', பிள்ளையார் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸம்ஸ்க்ருத மூலத்துடன்

காலஞ்சென்ற ராவ்சாகிப் பி. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள்

('தர்மாலயம்' மயிலாப்பூர்)

வசனரூபத்தில் இயற்றிய மூலத்திற்கு நேரான

அழகிய தமிழ் மொழிபெயர்ப்பு

| | | |
|---|---|---|
| ஆரண்யகாண்டம்-ஒரு பிரதி | ... ரூ. | 5 0 0 |
| சுந்தரகாண்டம் ,, | ... ரூ. | 6 8 0 |

---

சுந்தரகாண்ட மாஹாத்ம்யமும்

பாராயணம் செய்வதற்கு மூலமும்

(ஒரு பிரதி) ரூ. 1 4 0

தபால் ரெயில் செலவு தனி

**மானேஜர், கலைமகள், மயிலாப்பூர்.**

---

## கலைமகள் ஸோல் ஏஜெண்டுகள்

1. **ஸ்ரீ என். ஸுந்தரம்,**
நியூஸ் ஏஜெண்டு, 96, பேயிர்ட் ரோடு, நியூ டில்லி.

2. **ஸ்ரீ எல். அருணாசலம்,**
எம். ஏ ஆர். வீதி, தேவகோட்டை.

3. **மானேஜர்,**
சுதேசி பத்திரிகாலயம், நியூஸ் ஏஜெண்டுகள்,
செம்மா வீதி, யாழ்ப்பாணம்.

இம்மூவருக்கும் கலைமகள் சந்தாதார் சேர்க்கவும் சந்தாப் பணம் வசூலிக்கவும் அதிகாரமும் மற்றும் பல உரிமைகளும் அளித்திருக்கிறோம்.

---

அடியிற் காணும் ஏஜெண்டிடம் கலைமகள் பிரதிகள் கிடைக்கும்.

**ஸ்ரீ ஈ. எஸ். ரெட்டியார்**

பாரதமாதா நியூஸ்மார்ட்

88, கொண்ட ரெட்டியார் வீதி, ரெட்டியார் பாளையம்,

ஒழுகரை போஸ்டு, புதுச்சேரி.

## தேசீய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| (1) மௌலானா அபுல் கலாம் ஆஸாத் | 0 | 8 |
| (2) பாபு ராஜேந்திர பிரசாத் | 0 | 4 |
| (3) லோகமான்ய பாலகங்காதர திலகர் | 0 | 8 |
| (4) லாலா லஜபதிராய் | 0 | 6 |
| (5) எல்லைக் காந்தி | 0 | 8 |
| (6) பண்டித மாளவ்யா | 0 | 6 |
| (7) கவியரசி சரோஜனி தேவி | 0 | 6 |
| (8) ஹரிபுரா காங்கிரஸ் வைபவம் | 0 | 10 |
| (9) திரிபுரி காங்கிரஸ் வைபவம் | 0 | 4 |
| (10) சுபாஷ் போஸ் | 0 | 4 |

ஏனைய தேசபக்தர் சரிதைகளும் கிடைக்கும்

அல்லயன்ஸ் கம்பெனி, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை.

---

# Your Product Gets
## Maximum Publicity
**AT**
**Minimum Cost**
**When you entrust the**
**Advertising of it to**
## Swamy Advertising Service,
**Mylapore P.O. Madras.**

---

# கலைமகள் வருட சந்தா
(தபால் செலவுடன்)

இந்தியா, ஸிலோன் ரூ. 4-0-0

பர்மா ரூ. 4-8-0

பினங்கு, சிங்கப்பூர், நேடால் ரூ. 6-0-0

தனி ஸஞ்சிகை அணா 6

அல்லது 36 சதம்




இந்தியாவில் கோஹினூர்போன்ற மருந்து

---

## இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்
தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீசுகள்

| | |
|---|---|
| அதிகார மூலதனம் | ரூ. 60,00,000—0—0 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | 47,92,800—0—0 |
| செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள் | 10,00,000—0—0 |
| ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள் | 2,79,280—0—0 |
| ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும் | 17,92,762—0—0 |

சேக்ரடரி : N. கோபால அய்யர்

---

## முக்கிய அறிவிப்பு

சந்தா நேயர்கள் பலர் தமக்குப் பிரதிகள் கிடைக்காவிடின் குறிப்பிட்ட பிரதி கிடைக்கவில்லையென்று பல மாதங்கள் கழித்துக் கடிதம் எழுதுகிறார்கள். விலாச மாறுதலையும் அவ்விதமே முதலில் தெரிவியாமல் பத்திரிகை கிடைக்கவில்லை என்று எழுதுகிறார்கள். விலாச மாறுதலை இங்கிலீஷ் மீ 10-ஆம் தேதிக்குள் தெரிவிப்பது நலம். கலைமகள் இதழ் ஒவ்வொன்றும் தமிழ்மீ முதல் தேதி (இங்கிலீஷ் மீ சுமார் 16-ஆம் தேதி) வெளிவரும். 20 தினங்களுக்குள் இதழ் கிடைக்காவிடின் கடிதம் எழுதினால் அதை மீண்டும் அனுப்ப இயலும்.

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

# கலைமகள் காரியாலய வெளியீடுகள்

—:o:—

| | | ரூ. | அ |
|---|---|---|---|
| 1. | முருகன் ஓர் உழவன்—ஸ்ரீமான் வேங்கட ரமணி அவர்கள் எழுதிய அரிய நாவல் ... | 1 | 8 |
| 2. | குமுதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதிய நாவல் - வங்காளியிலிருந்து ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்த்தது ... | 1 | 8 |
| 3. | மாயாவிநோதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதியது - ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது | 1 | 8 |
| 4. | பைரவி—சரத்சந்த்ர சட்டர்ஜி எழுதியது (த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்த்தது)... | 1 | 8 |
| 5. | விதியின் செயல் முதலிய கதைகள்—ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், ஐ.ஸி.எஸ். எழுதியது ... | 0 | 6 |
| 6. | ரிஷப விஜயம்—ஓர் இனிய நாடகம் - ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது ... | 0 | 12 |
| 7. | அற்புத உலகம்—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ. பி.எல். எழுதியது. ஸர் ஸி. வி. ராமன் முதலிய பேரறிஞர்கள் புகழ்ந்து பாராட்டும் அரிய புஸ்தகம் ... | 1 | 0 |
| 8. | ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாஸங்கள்—50 உபந்யாஸங்கள் கொண்ட புஸ்தகம் ... | 1 | 8 |
| 9. | ஸ்ரீ சங்கர விஜயம்—ஸ்ரீ காமகோடி பீடாதிபதியவர்கள் திருவாய்மலர்ந்தருளியது ... | 0 | 10 |
| 10. | சியாமளா தண்டகம்—வடமொழி மூலமும் தமிழுரையும் - ஸ்ரீ அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள், எம்.ஏ., எல்.டி. மொழிபெயர்த்தது ... | 0 | 1 |
| 11. | கலைமகள் சிறுவர் படங்கள்—10 படங்களடங்கிய ஸெட் ஒன்றுக்கு ... | 0 | 6 |
| 12. | த்வாதசோபநிஷத்—தமிழில் என். எஸ். ராஜாராமையர் மொழிபெயர்த்தது ... | 2 | 0 |

தபாற் கூலி வேறு

"கலைமகள்" சந்தாதார்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்.

...d. No. M. 2748] [Vol. XVII, No. 3

வாஹினியின் ஸுமங்கலி (தெலுங்கு)




விரைவில் வெளிவருகிறது